ஜெர்மனியிலும் வன்னியன் தொலைபேசி அட்டைகள்




'சொல்லும் நிமிடங்களை சொன்னபடியே தருவது'

தொடர்புகட்கு: ரவி

01726312893 / 0622642067

Pub.

1.50 Euro

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 | 11 - 17 Août 2004 | 26

சம்யுக்தா

Credics Immobiliers

வீடு வாங்க கடன் உதவி

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

SAM-YUKTHA

Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# அபாய கட்டத்தில் சிறீலங்கா !

## நோர்வேயின் அவசர பதிலை எதிர்பார்த்து சந்திரிகா காத்திருப்பு



(10.08.2004)

சிறீலங்காவின் பொருளாதார வளம் மிகவும் அபாயக கட்டத்திற்கு சென்றுகொண்டிருப்பதால், உலக வங்கி மற்றும் சர்வதேச உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய பெரும் நிர்ப்பந்தத்திற்குள் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தள்ளப்பட்டுள்ளார். இந்நிலையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப் பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு இராஜதந்திர ரீதியிலான செய்தி ஒன்றை அவசரமாக அனுப்பி வைத்திருந்தார். அதற்கான பதிலை எதிர்பார்த்து இப்போது அவர் காத்திருப்பதாக தெரியவந்துள்ளது.

▶30

இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் விசேட பயிற்சிகளை நிறைவு செய்துள்ள, விடுதலைப் புலிகளின் விசேட உந்துகணை செலுத்தும் படைப்பிரிவின் ஒரு தொகுதி....



## கிளிநொச்சியில் புலிகளின் விமானங்கள் பறந்தனவா?

▶30



▶13



ஈ.பி.டி.பி.யின் முக்கிய உறுப்பினர் குடும்பத்துடன் தமிழகத்தில் கைது டக்ளசின் மெய்ப்பாதுகாவலர் எனத் தெரிவிப்பு

▶30

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு !!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



**V.T.Cash & Carry**

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# வன்னி தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்து 1வது தொகுதி மாணவர்கள் வெளியேறினர்

(09.08.04)

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனையின் பயனாக வன்னியில் உருவாகிய வன்னி தொழில்நுட்ப நிறுவனம் இன்று தனது முதலாவது தொகுதி மாணவர்களை வெளியேறுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார். நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்களின் பட்டமளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போராட்ட சூழலில் முழுமையாக மூழ்கியிருந்த நாம் உலகில் மாறி வருகின்ற தொழில்நுட்பத்துடன் ஈடுகொடுக்க முடியாது இருந்த போது, அமெரிக்கா வாழ் புலம் பெயர்ந்த மக்களின் உதவியினால் வன்னியில் இந்த தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கப்பட்டது. நாம் எமது தேசத்தை மீட்கப் போராடிக் கொண்டிருந்தபோது எதிரியானவன் எமது மாணவர்களின் கல்வியை நசுக்குவதிலேயே தீவரமாக ஈடு பட்டான். இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் எமது மண்ணிலும் உலகத் தொழில்நுட்பங்களோடு போட்டி போடும் அளவிற்கு வன்னித் தொழில்நுட்ப நிறுவனம் தனது சேவையை வழங்கி வருவது மிகுந்த மகிழ்சியைத் தருகின்றது என்றும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் மேலும் தெரிவித்துள்ளார்.



## ஆராரோ...! ரோ ரோவோ!

தவிர்க்க முடியாத காரணங்களால், இத் தொடர் அடுத்த இதழில் வெளிவரும். (ஆ-ர்)


**EUROCONSULT SARL TRADUCTIONS**

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

**போட்டோ பாலா**

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77


### சச்சு மாஸ்டர் கொலை சிறைச்சாலை அதிகாரி புலனாய்வுப் பிரிவனரால் கைது

(09.08.04)

மட்டக்களப்புச் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அண்மையில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குள் கைதி ஒருவரால் இரு கருணாவின் சகாக்களை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறைச்சாலைக்குள் இரண்டு கைக்குண்டுகள் அடங்கிய பொதி ஒன்றினை இவர் கொண்டு சென்றுள்ளமை சாட்சியங்கள் மூலம் தெரிய வந்துள்ளதாக இவருடைய கைது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் தெரிவித்துள்ளனர்.

## லெப்.கேணல் விக்ரர் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையின் அனுசரனையுடன், ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் (பிரான்ஸ்) தனது 10வது, ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் லெப்.கேணல் விக்ரர் (ஓஸ்கா) ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்திற்கான, சர்வதேச அளவிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி.

காலம்:- 29.08.2004
நேரம்:- காலை 09:00 மணி
மைதானம்:- STADE JULES LADOUMEQUE
Place de la Porte de Pantin
75019 Paris

முக்கிய குறிப்பு: இச்சுற்றுப் போட்டியை சிறந்த முறையில் நடாத்துவதற்கு விளம்பரம் தந்துதவ விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.
01 43 58 11 42 - 06 17 80 18 26


**LA CHAPELLE**

**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**Errances Travels**

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# "சமாதானத்தை முதலில் ஆரம்பித்து வைத்தவர் தமிழீழ தேசியத் தலைவர் தான்"

## - தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தென்னிலங்கைப் பிரதிநிதிகளிடம் தெரிவிப்பு -

(08.08.04)

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தான் முதலில் சமாதானத்தை ஆரம்பித்து வைத்தார் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற தென்னிலங்கையின் சமாதானத்துக்கான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்றனர். சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்ததே எமது தேசியத்தலைவர் அவர்கள் தான். ஒரு தலைபட்சமான போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி நாகரீகமான முறையில்ப் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கான தீர்வைக்கண்டு எமது மக்களுடைய பிரச்சினைக்கான தீர்வு காணப்படல் வேண்டும் என்பதின் அடிப்படையிலேயே தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தான் சமாதானத்தை ஆரம்பித்தார் என்பது கடந்த கால நிகழ்வுகளில் தெரிந்த ஒன்று என்று தெரிவித்த தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர், எங்களுடைய சொந்த மண்ணிலே நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழுகின்ற எங்களுடைய வாழ்வுரிமையை வேண்டியே நீண்டகாலமாக எமது மக்கள் போராடி வந்தனர். எமது மக்கள் தமது ஜனநாயக உரிமையை வேண்டி அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் நீண்டகாலமாக போராடி வந்திருக்கின்றார்கள்.

இதை வன்முறை ரீதியாக நசுக்க முற்பட்டபோது, பேரழிவுகளையும், நெருக்கடிகளையும் சந்தித்த போது அதில் இருந்து விடுபட்டுத் தற்காத்துக் கொண்டு வாழ்வதற்காகத் தான் ஆயுத வழியிலான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1948ம் ஆண்டிலிருந்து எமது மக்களும் நாமும் விரும்புவது ஒவ்வொரு மக்களும் விரும்புவது உரிமையோடு நாங்கள் வாழவேண்டும் என்றே. அந்த வகையிலேயே எங்களுடைய மக்களும் தங்களுடைய உரிமையை வேண்டி நிற்கின்றார்கள். இதனை தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகளும் மக்களும் விளங்கிக் கொள்வார்கள் என நாங்கள் விரும்புகின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் சிங்கள மக்களுக்கோ, அல்லது அது சார்ந்தவர்களுக்கோ தீங்கு விளைவிக்க விரும்பவில்லை.

நாங்களும் எல்லோரையும் நண்பர்களாகவே கருதுகின்றோம். எங்களுடைய மக்கள் தங்களுடைய சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற அபிலாசையோடு உள்ளனர். உண்மையிலேயே காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த அரசு தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு இனவாதத்தையும் வன்முறையையும் யுத்தத்தையும் ஒரு ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியிலே அது சார்ந்த தவறான வெளிப்பாடுகளை வெளிப்படுத்திக் கொண்டு தங்களுடைய ஆட்சி அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொண்டு வந்திருக்கின்றனர்.



இதனால் இன்று இப் பயங்கரமான சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இதனால் இன்றைய சமாதானச் சூழல் ஒரு நெருக்கடி நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது. இதனை மாற்றி அமைக்க வேண்டும் என்பதில் எமது தேசியத் தலைவர் அவர்களுடன், எமது தலைமைப்பீடமும் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றது. இந்த நிலைப்பாட்டை சிங்கள தேசத்திடமும், சிங்கள மக்களிடமும் கூறி தென்னிலங்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்த சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் வழிகாட்டலிலே அனைத்து மக்களும் அணிதிரண்டு தங்களுடைய அபிலாசைகளை வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

தங்களுக்கு ஒரு நிம்மதியான நிரந்தர வாழ்வியலைத் தேடித்தருவார்கள் என்ற நம்பிக்கையில் தங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என இதில் நிரூபித்துக் காட்டியுள்ளனர் என்றும் தெரிவித்தார். தென்னிலங்கையின் சமாதானத்துக்கான பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களுடனான கலந்துரையாடல், தமிழீழ அரசியல்த் துறை நடுவப்பணியகத்தில் மூன்று மணி நேரம் நடைபெற்றது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், தென்னிலங்கையிலிருந்து வந்த கத்தோலிக்க திருச்சபையின் குருநாகல் ஆயர், சேர்த் செவென அறக்கட்டளையின் கலேப்பிட்டிய பேமரத்தின தேரர், பௌத்த பிக்குணிகள் அறக்கட்டளையகத்தைச் சேர்ந்த போகமண்ண தர்சிகா தேரணி, ஒறுதொட்ட தர்ணயந்தி தேரணி மற்றும் மகா கல் கடவல புன்ன சாரதேரர், சுவர்ணா அறக்கட்டளையின் சுவர்ணா மல்லவராட்சி, பெண்கள் வணிகச் சம்மேளத்தின் ராணி ரட்னாயக்கா, தொழிற்சங்கப் பிரதிநிதிகளான ரவி குமுதேஸ், சமன் ரட்ணப்பிரிய, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேட்டி ரணவீர, மக்கள் சமாதான அவையின் ஆசாஜி தேரர், கலாநிதி குமார் ரூபசிங்க, ஹர்ச குமார நவரட்ண, கலாநிதி திஸ்ஸபுன்ன தேரர், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு குமார் இலங்கசிங்க, தேசிய பாதுகாப்புச்சபையைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமெரிக்க கட்டளைத் தளபதி குடாநாடு விஜயம் பொதுமக்கள் மத்தியில் யுத்தம் பற்றிய அச்சம்

(08.08.04)

ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்க இராணுவ கட்டளை அதிகாரி வோல் டி கிரக்சன் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளார். பலாலி படைத்தளத்தில் உயர் மட்ட படை அதிகாரிகளை சந்தித்து பாதுகாப்பு கடமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் காரைநகர் கடற் படைத் தளத்துக்கு சென்று அங்குள்ள நிலைமைகளையும் ஆராய்ந்துள்ளார். இதன் பின்னர் முகமாலை சோதனை சாவடிக்குச் சென்று நேரில் அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் கொழும்பில், சிறீலங்காவின் இராணுவத் தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடாத்திய அமெரிக்க கடற்படை அதிகாரி, இராணுவ, கடற்படைத் தளபதிகளையும் சந்தித்து ஆலோசித்துள்ளதுடன், அரச அதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளார். இவரது விஜயம் சிறீலங்காவிற்கும் - அமெரிக்காவிற்கும் இடையில் உள்ள உறவைப் பலப்படுத்தும் என



சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்கத் தளபதியின் குடாநாட்டுக்கு விஜயம் யுத்தம் பற்றிய அச்ச உணர்வை மீண்டும் தமிழ் மக்களிடையே அதிகரித்துள்ளது என யாழ்குடாச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக, தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்கக் கடற்படையின் தளபதி குடாநாட்டுக்கு வருகைதந்தமையானது மீண்டும் ஒரு யுத்தத்திற்கான பலத்தையும் ஊக்கத்தையும் சிறீலங்கா இராணுவத்துக்குக் கொடுப்பதாகவே இருக்கிறது. இந்தச் சமாதானச் சூழலில் சிறீலங்கா இராணுவத்தினருக்கு வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் புலனாய்வுத் தகவல்களையும் இராணுவ தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதும் அவர்கள் இங்கு வந்து இராணுவ முன்னரங்க, பின்னரங்க நிலைகளைப் பார்வையிடுவதும் தமிழ் மக்கள் மத்தியில் பயத்தையும் ஏமாற்றத்தையும் தோற்றுவிக்கின்றன எனத் தெரிவித்துள்ளது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்க தளபதியின் விஜயம் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தம் பற்றிய அச்ச உணர்வை அதிகரித்துள்ளது. அமெரிக்க அரசின் யுத்தத்தைத் தூண்டும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது. இன்று சர்வதேசம், தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்று சமாதானப் பேச்சுக்குச் செல்லுமாறு சிறீலங்கா அரசைத் தூண்ட வேண்டும். நிரந்த சமாதானம் நிலைக்கவேண்டுமானால் தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான சரியான தீர்வினை சிறீலங்கா அரசு தமிழ் மக்களிற்கு வழங்க வேண்டும். இதற்கான அழுத்தத்தினை சிறீலங்கா அரசுக்கு அமெரிக்கா வழங்குவதையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். மாறாக சிறீலங்கா அரசினதும் இராணுவத்தினதும் நலன்களை முன்னிலைப்படுத்தும் அமெரிக்க அரசின் இத்தகைய செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை, பெண்கள் பண்பாட்டு மையம், உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் என்பனவும் அமெரிக்கக் கடற்படைத் தளபதியின் விஜயத்தை ஒரு போருக்கான முன்நடவடிக்கை என கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
✱ குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
✱ 30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
✱ வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
✱ இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)

"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland

Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# ஜேர்மனில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவருக்கு தமிழீழத் தேசியத் தலைவர் விருது வழங்கிக் கௌரவிப்பு


(08.08.04)

ஜேர்மன் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் மத்தியில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தாய்மொழிப்பற்றை உருவாக்கிய மைக்காகவும் திரு. இரா.நாகலிங்கம் அவர்களை, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தங்க விருது வழங்கி கௌரவித்துள்ளார்.



திரு இரா.நாகலிங்கம் அவர்கள் தாய் மண்ணில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக 1979ம் ஆண்டு ஜேர்மன் நாட்டுக்குச் சென்றார். புலம்பெயர்ந்தாலும் தாய் மண்ணின் நினைவோடு தாய் மொழியின் பற்றோடும் வாழ்ந்து வந்தார். 1986ம் ஆண்டு காலப்பகுதியில் பத்துப்பிள்ளைகளை ஒன்றாக்கி ஜேர்மனியில் தமிழ்மொழியைப் போதித்தார். இதனோடு இவரது சேவை மேலும் விரிவுபட்டது.

1987ம் ஆண்டு தமிழர் நலன் புரிச்சங்கம் தோற்றம் பெற்றது. இதில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார், இவ்வாறாக பல அமைப்புக்கள் சங்கங்கள் ஊடாக தமிழுக்காகவும் தேசிய போராட்டத்திற்காகவும் இவரது பணி தொடர்ந்தது. 1990ம் ஆண்டு உலகத் தமிழர் இயக்கம் தோற்றம் பெற்றது. இது ஜேர்மன் அரசிலும் பதிவு செய்யப்பட்டது. இதில் இரா.நாகலிங்கம் தமிழ்க்கல்விப் பணியின் பொறுப்பாளராக இருந்தார். இதே ஆண்டிலேயே ஜேர்மன் யூக்ஸன் நகரில் தமிழ் ஆலயம் உருவாக்கப்பட்டது. இதில் தமிழ் கற்கும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. தமிழ் ஆலயங்களும் பிறப்பெடுத்தன. இரா.நாகலிங்கம் தமிழுக்காக ஆற்றிவரும் பணியில் இவருக்கு பக்கபலமாக நின்று தானும் பணியாற்றிவரும் இவரது துணைவியாரின் பங்களிப்பும் இங்கு நினைவு கூரத்தக்கது.



இன்று இவ்வமைப்புக்கள் வளர்ந்து, ஜேர்மன் நாட்டில் 123 தமிழாலயங்களும் 6,000 மாணவர்களும் உள்ளனர். இவர்களுக்கான ஆசிரியர்களாக 650 ஆசிரியர்கள் பணியாற்றி வருவதோடு இவற்றினை நிர்வகிக்கும் பணியில் 350 பேர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே.இளங்குமரன், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சுப. தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர் திரு.வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## "தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தினால் ஐ.நா.வில் புலிக்கொடி பறக்கும் நாள் தொலைவில் இல்லை"

### - சிறீலங்கா நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம் உரை -

(08.08.04)

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒன்று அமைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை. எனவே விரைவில் தனித்தமிழீழ அரசு உருவாக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையில் புலிக்கொடி பறக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சிறீலங்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய அவர், இலங்கையில் மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கியதில்லை. இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதற்காக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த யோசனை அடிப்படையில் பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே தான் போரா? சமாதானமா? என்பதை இந்த அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தின்போது புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார். இதனாலேதான் தமிழ் மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேச்சை ஆரம்பித்து இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட்டால் ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழலாம். அவ்வாறு இல்லையேல் தனித் தமிழீழ அரசு உருவாகும். இதனையடுத்து நிறுத்தி விட முடியாது. அவ்வாறு அமையும் தமிழீழ அரசு ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு தங்கத்தில் சிலை அமைக்கும். ஏனெனில் தமிழீழ அரசு உருவாக வழி வகுத்தவர்கள் ஜே.வி.பி.தான் எனத் தனது உரையில் தெரிவித்தார்.

இவ் உரையினால் ஆத்திரமடைந்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, சிவாஜிலிங்கம் ஆற்றிய உரையை நாடாளுமன்ற சட்டவிதிகளுக்கு முரணானது என்றும் கூறியதுடன், அந்த உரையை நாடாளுமன்ற பதிவு புத்தகத்திலிருந்து நீக்க வேண்டும் என்றும் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேவின் சில்வா தாக்க முற்பட்ட நிகழ்வு ஒன்று இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, தாம் கருணாவை வெளிநாட்டுக்கு அழைத்து செல்லவில்லை என்ற கருத்தை வலியுறுத்தி உரையாற்றியபோது, குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், பதிலளிக்க முற்பட்டபோது அதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கவில்லை. இதனையடுத்து சபாநாயகரின் இருக்கையை நோக்கி சென்ற அவரை, மேர்வின் சில்வா தாக்க முற்பட்டுள்ளார். இதன்போது ஏற்பட்ட குழப்ப நிலையில் நாடாளுமன்றம் 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கருணா குழுவினர் மூவர் விடுதலை! பிணையெடுக்க யாரும் முன்வராமையால் மீண்டும் சிறையில்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, கருணாவுடன் சேர்ந்தியங்கிய மூவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை பிணையில் விடுதலை செய்துள்ளது. நீதிமன்றம் இவர்களுக்கு பிணை வழங்கிய போதும் பிணை எடுப்பதற்கு எவரும் முன்வராததால் தொடர்ந்து மட்டக்களப்புச் சிறைச் சாலையில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 30ம் திகதி காத்தான்குடி பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இவர்கள் மீண்டும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய இந்த மூவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். மயூரன் எனப்படும் சாமித்தம்பி ராஜன், மனோகர் (வேலுப்போடி வரதகுமார்), குருபரன் (அரசமணி சுரேஷ்) ஆகிய மூவரையுமே, தலா 50000 ரூபா ரொக்கப் பிணையிலும் இரு ஆட்பிணையிலும் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இவர்கள் மூவரையும் மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பிலுள்ள சி.ஐ.டி. தலைமையகத்தில் ஆஜராக வேண்டுமெனவும் நீதிமன்றம் பணித்துள்ளது. எனினும், இந்த மூவரையும் பிணையில் அழைத்துச் செல்ல எவரும் நீதிமன்றத்திற்கு வராததால் இவர்கள் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். இவர்களுடன் கைதான, சச்சி மாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன் (மாறன்), மற்றுமொரு கருணாவின் சகாவும் கடந்த மாதம் 15ம் திகதி மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைத்து சக கைதி ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## கொழும்பில் ஊடுருவியுள்ள பிஸ்டல் குழுவை பிடிக்க விசேட பயிற்சி பெற்ற 10 புலனாய்வுக் குழுக்கள்

(08.08.04)

கொழும்பு நகரினுள் ஊடுருவியுள்ளதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவைப் பிடிப்பதற்காக, பத்துக்கும் மேற்பட்ட விசேட புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு முழு உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக சிறீலங்காப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சிறீலங்கா இராணுவ மற்றும் புலனாய்வுப் பிரிவினரும், உளவாளிகளும் கொல்லப்பட்டதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கிற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்குள் அண்மைக் காலமாக விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்த பலர் ஊடுருவியுள்ளதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் இவர்களைக் கைது செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார். இவர்களைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக நகரில் உள்ள விடுதிகள் மற்றும் அவைபோன்ற பகுதியில் திடீர் தேடுதல் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேற்படி விசேட புலனாய்வுக் குழுவுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவ புலனாய்வு பிரிவு பணிப்பாளர் இராஜினாமா ?

தேசத் துரோகி கருணாவுடன் நேரடியான தொடர்புகளை பேணியதாக சந்தேகிக்கப்படும் சிறீலங்கா இராணுவ புலனாய்வு பிரிவு தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பிரிகேடியர் ஹெந்தவிதாரன தனது பதவி விலகல் கடிதத்தை இராணுவ தளபதியிடம் கையளித்துள்ளார். தனது பதவி விலகலுக்கு இராணுவ பதவி உயர்வு தொடர்பான முரண்பாடுகளே காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

கருணாவின் விவகாரத்தில் இவர் தன்னிச்சையாக செயல்பட்டதோடு கருணாவை நேரடியா சந்தித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் தொடர்ந்து வரும் அரசியல் அழுத்தம் காரணமாகவே இவர் தனது பதவியை இராஜினாமாச்செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.


"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28


ஈழமுரசு
ஐரோப்பா
POORALAM WEEKLY

# தேசிய அரசு மாவடியா புளியடியா?

சிறீலங்காவின் கட்சி அரசியல் மாவடி புளியடி விளையாட்டுக் காட்டிக்கொண்டே இப்போது தேசிய அரசாங்கம் என்ற குளையடிப்பில் நிற்பதாகத் தெரிகிறது. ஆளும்ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்கும் அதன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சிக்குமிடையே இணக்கப்பாடொன்றைக் கண்டு அதன் மூலமாக தேசிய அரசொன்றை அமைப்பதற்கான பூர்வாங்கப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் சிறீலங்காவின் ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன. மேல்மாகாணத்தில் மீண்டும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதை ஆலோசித்துக்கொண்டே தேசிய அரசு அமைவது குறித்தும் பேசிக்கொள்வதில் அவ்வாறான அரசு ஒன்று அமையுமானால் அதன் நோக்கமும் எதுவாக இருக்கக்கூடும் என்பதை இலேசாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. சிறீலங்கா தேசம் ஒரு எளிய உண்மையை இன்று புரிந்துகொள்ளவேண்டும். தமிழர் தாயகத்தில் என்று இயல்பான அமைதி திரும்புகிறதோ அன்றுதான் சிங்கள தேசத்திலும் உண்மையான அமைதி பூத்துக்கொள்ளும். இந்த எடுகோளின் அடிப்படையில் சிங்கள தேசம் தனது அரசியல் நகர்வுகளை நகர்த்துமானால் அதன் விளைவுகள் நல்லவையாகவே இருக்கும்.

ஆனால் அன்றுதொட்டே சிங்கள தேசத்தின் போக்கு இந்த உண்மைக்கு முரண்பட்டதாகவே இருக்கின்றது. தமிழர் தாயகத்தை போரினாலோ அல்லது அரசியல் சூழ்ச்சியினாலோ தோற்கடித்துவிட்டு தான் வளம்பெற்றுக்கொள்ளலாம் என அது பகற்கனவு காண்கின்றது. இன்று எழுந்துள்ள தேசிய அரசு என்ற நிலைப்பாடுகூட தமது இலாபங்களை அடிப்படையாக வைத்து சிங்கள தேசம் உருவாக்கியிருக்கும் ஒரு திட்டம்தான். சிறிய சிறிய கட்சிகளின் அரசியல் தொந்தரவை எதிர்கொள்ள முடியாத சந்திரிகா இன்று சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்ற நிலைக்கு வந்திருக்கின்றார்போலும். ஆயினும் சிறீலங்காவின் அரசியல் காலாச்சாரத்திலே இவ்வாறானதொரு தேசிய அரசு சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறிதான். இப்போது இங்கு எழுந்துள்ள இன்னொரு நிலையையும் நாம் சுட்டிக்காட்டவேண்டும். தமிழர் தாயகம் முன்வைத்திருக்கும் ஒரே ஒரு கொள்கைக்காக சிங்கள தேசத்தில் எவ்வளவு தூரமான சதுரங்கக் காய்நகர்த்தல்கள். தமிழர் தாயகத்தின் கொள்கைகளை ஜீரணித்துக்கொள்ளமுடியாத சிங்கள தலைமைத்துவங்கள் தமக்கிடையே கூட்டல் கழித்தல் பெருக்கல் இட்டு தமிழர் தாயகத்தின் கொள்கைகளை தோற்கடித்து தாம் வெற்றி சூடப் பிரயத்தனப்படுகின்றன. இன்று தமிழர் தாயகம் சிங்களதேசத்திடமிருந்து எதிர்பார்ப்பது வாய்புளித்ததோ அல்லது மாங்காய் புளித்ததோ என்ற நிலைப்பாடு அல்ல. வாய்மையான ஒரு நிலைப்பாட்டையே எதிர்பார்க்கின்றது.

தேசிய அரசு என்பது தமிழர் தாயகத்துடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உதவி செய்யும், சிங்கள கடும் போக்காளர்களான ஜே.வி.பியினரின் மிரட்டல்களிலிருந்து அரசு தன்னைக் காப்பாற்றி தனது பெரும்பான்மையை ஐக்கிய தேசியக் கட்சியின் துணைகொண்டு நிலைநிறுத்தி அமைதிப்பேச்சுக்களுக்கு வழிசமைக்கும் என ஊகம் தெரிவிப்பவர்களும் இருக்கின்றார்கள். இதய சுத்தியுள்ள ஒரு அரசாங்கமானால் இந்த நிலை ஏற்படச் சாத்தியம் இருக்கின்றதுதான். ஆனால் சிறீலங்காவிலேயோ நிலைமை அவ்வாறு இல்லை. தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற போக்கில் தினமும் தினமும் அரச தலைமைத்துவமிடமிருந்தே முன்னுக்குப் பின் முரணான கொள்கைகளும் அறிக்கைகளும் வெளிவருகின்றன. எந்த இலக்கைநோக்கிச் செல்வது என்பதில்கூட சந்திரிகாவிற்குத் தெளிவிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் மறுபுறத்தே இதேபோன்ற குழப்பநிலையில் இருக்கும் ஐக்கியதேசியக் கட்சியோடு கூட்டுச்சேர்ந்து என்ன சாதிக்கப்போகின்றது என்பது ஒரு முக்கியமான வினாவாக எழுகின்றது. தேசிய அரசு என்ற முன்னெடுப்பு ஒரு கண்துடைப்பா என்பதை இனிவரும் நாட்கள்தான் புலப்படுத்திக்கொள்ளும்.



# கோரிக்கை இதுவல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்குச் சென்று அவர்களுடன் சந்திப்புக்களை நடத்துவதற்குத் தாம் தயாராகவுள்ளதாக, போர்நிறுத்த கண்காணிப்பு குழுவிற்குச் சிறீலங்கா இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது. இதனை சமாதான முயற்சிகள் தொடர்பாக இராணுவத்தரப்பு காட்டும் பேரக் கறையாகவோ, யுத்த நிறுத்த நடைமுறையில் அவர்கள் கொண்டுள்ள கரிசனையின் பாற்பட்டதாவோ கொள்வதற்கில்லை.

ஏனெனில் சிறீலங்கா ஆயுதப்படைத் தரப்பிடம் இத்தகையதொரு கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைக்கவும் இல்லை அத்தோடு இராணுவத்தரப்பின் இத்தகைய அறிவிப்பு புலிகள் முன்வைத்த கோரிக்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் கொண்டதாகவும் இல்லை.

அதாவது சிறீலங்கா படையினரின் கட்டுப்பாட்டப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அடுத்து இராணுவத்தினருடனான மாதாந்த சந்திப்புக்களை இடைநிறுத்திக் கொள்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்தமைக்கும் தற்பொழுது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பேச்சுக்கள் நடத்துவதற்கான இராணுவத்தின் அறிவிப்பிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஒருபுறத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதென்பதும் மறுபுறத்தில் இத்தகைய தாக்குதல்கள் கொலைகள் நிறுதப்படாத பட்சத்தில் இருதரப்பிடையேயும் நடைபெறும் சந்திப்புக்களினால் பயன் இல்லை என்பதுமே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீதும் தமிழ்த்தேசிய விடுதலை உணர்வு மிக்கவர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது அது குறித்து விடுதலைப் புலிகள் தமது அதிருப்தியை தெரிவித்ததோடு அவை நிறுத்தப்படவேண்டும் என இராவணுத்தினருடனான மாதாந்த சந்திப்புக்களில் வலியுறுத்தினர். ஆனால் இராணுவத்தரப்பு இதில் அக்கறை காட்டவில்லை.

மாறாக தாக்குதல்களும் படுகொலைகளும் அதிகரிக்கவே செய்தன விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் தமிழ்த்தேசிய உணர்வு மிக்கவர்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் அதிலும் குறிப்பாக காவலரண்களுக்கு அண்மையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆனால் இராணுவத்தரப்போ சிறீலங்கா பொலிஸ் தரப்போ இவ்விடயத்தில் அக்கறை காட்டவில்லை வேறுவிதத்தில் கூறுவதானால் இப்படுகொலைகளின் பின்னணியில் படைத்தரப்பினரே கொள்ளத்தக்கதாக இருந்தது.

இதேவேளை கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல்களில் இராணுவத்தரப்பின் நேரடி பங்களிப்பு ஒத்துழைப்பு இருந்ததற்கான ஆதாரம் வெளிப்பட்டிருந்தன. இவை யாவும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் படைத்தரப்பு அவ்விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக பதற்ற நிலையே அதிகரித்துச் சென்றது. யுத்த நிறுத்த சூழ்நிலை பாதிப்படையும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது. மட்டக்களப்பின் நிலை பதற்றமானதாக உள்ளதென யுத்த நிறுத்தக்கண்காணிப்பு குழு தெரிவிக்கும் அளவிற்கு நிலைமை சென்றது. அவ்வாறு இருந்தும் படைத்தரப்பு நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கவில்லை.

மாறாக இராணுவப் புலனாய்வுத்துறை மட்டக்களப்பில் புதிய ஆயுதக்குழுக்களை உருவாக்கவும் அவற்றைப் பலப்படுத்தவும் அதன் மூலம் மட்டக்களப்பில் வன்முறையை தோற்றுவிக்கவுமே முனைந்தது. இந்நிலையில் தான் விடுதலைப் புலிகள் மட்டக்களப்பில் இராணுவத்தினருடனான சந்திப்புக்களையும் பேச்சுவார்த்தையையும் இடைநிறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் மட்டக்களப்பில் மீண்டும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினருடனான சந்திப்புக்களும், பேச்சுவார்த்தைகளும் இடம்பெறுவதானால் புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியமைக்கான காரணங்களுக்கு தீர்வு காணப்படுதல் வேண்டும். அதில் விடுதலைப் புலிகளுக்கு திருப்தியும் ஏற்படுதல் வேண்டும். இதை விடுத்து கேள்வி ஒன்றாக இருக்கையில் பதில் வேறொன்றாக இருப்பதினால் பயன் ஏதும் இல்லை. ஏனெனில், பேச்சுவார்த்தை எங்கு நடத்துவது என்பது இங்கு முக்கிய விவகாரமாக, அதாவது சந்திப்புகளுக்கு இடையூறாகவில்லை. பேசப்படும் விடயங்கள் இணக்கம் காணப்படும் விடயங்கள் தொடர்பாக முன்னேற்றம் காணலாம் என்ற நம்பிக்கையை சிறிலங்கா ஆயுதப்படை தரப்பு ஏற்படுத்தல் வேண்டும்.

— நன்றி — ஈழநாதம்

# முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்ததால் இராணுவ புலனாய்வில் இருந்து தப்பியோடும் தமிழர்கள்!

(09.08.04)

மட்டக்களப்பில் குழப்பத்தை ஏற்படுத்த முனைந்து, இன்று இருந்ததையும் இழந்து நிற்கின்றது சிறீலங்காப் புலனாய்வுத்துறை. தங்களிடம் நாயைவிட விசுவாசமாக வேலை பாரத்தவர்களையே உரிமைகோர முடியாமல், தமக்கு தெரியாது என மூடிமறைக்கவேண்டிய நிலைக்கு சிறீலங்காவின் புலனாய்வுத்துறை தள்ளப்பட்டிருப்பதைப்பார்த்து, சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு ஒத்துழைப்பு வழங்கி வந்த தமிழர்கள் பலர் தமது செயற்பாடுகளிலிருந்து விலகி வருவதாகப் புலனாய்வு அதிகாரிகளை ஆதாரம்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 31ம் திகதி பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதியில் வைத்து இரானுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயல்பட்டு வந்த சிறீலங்கா புலனாய்வுத்துறையின் மிகவும் முக்கியத்தவம் வாய்ந்த முதல் தர நபரான புளொட் மோகன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னர் இந்த நிலைமை உருவாகியுள்ளது. புளொட் மோகன் இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு மாபெரும் சொத்தாக இருந்தவர். பல கொலைகளை தயங்காது செய்தவர். இதனால் இவர் விடுதலைப் புலிகளினால் இலக்கு வைக்கப்பட்டிருந்தார். இதனால் படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தலைமறைவாக இருந்து வந்தார். இவ்வாறான சூழ்நிலையில் அவர் கொல்லப்பட்ட போது, சாதாரண ஒரு தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சம்பந்தப்படாதவர் என்றும் அவருக்கும் இராணுவத்திற்கும் எந்தவிதமான தொடர்புகளும் கிடையாது என்றும், சில சந்தர்ப்பங்களில் சிவிலியனாக இருந்து கொண்டு, இராணுவத்திற்கு உதவியவர் என்றும் குறிப்பிட்டு இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிக்கையொன்று வெளியிட்டு முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்றிருந்தது.

இராணுவத் தலையகத்தின் இந்தச் செய்தியையடுத்து அதிர்ச்சியடைந்துள்ள புளொட் மோகனின் பின்னணியில் இயங்கி வந்த இராணுவ உளவாளிகள், தமக்கும் இதே நிலைமை ஏற்படுவது நிச்சயம் என்ற முடிவிற்கு வந்துள்ளதுடன் விலகிச் செல்லும் முடிவை எடுத்துள்ளனர். இதனால் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் எதிர்கால நடவடிக்கைகள் கேள்விக்குறியாகியுள்ளதுடன் இராணுவத்திற்குத் தமிழர்கள் வழங்கி வந்த ஒத்துழைப்பிற்கும் முற்றுப் புள்ளி வைக்

தொடர்ச்சி 28ம் பக்கம்...

# மையப்புள்ளியாகி விட்ட சபையேறாத யோசனைகள்

அடித்திருக்கிறதையா ஐ.தே.கட்சி ஒரு ஸ்ரண்ட். சந்திரிகாவே உண்மையில் மூக்கில் விரல் வைக்கவேண்டும். அப்படி ஒரு அடி அடித்திருக்கிறது ஐ.தே.கட்சி. 'புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்தும் பேச்சுக்கள் நடாத்தி, ஐ.ம.சு கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு அதனால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அரசாங்கத்தை எமது கட்சி ஆதரவளித்துக் காப்பாற்றும்' என்று அறிவித்திருக்கிறது ஐ.தே.கட்சி.

**ஐ.தே.கட்சி இடைக்கால நிர்வாகசபை விடயத்தில் ஏன் இவ்வாறு 'சாதகமாகச்' சிந்திக்க முற்படுகிறது? இவ்விடயத்தில் புலிகளின் யோசனைகள் கிடைத்து அதற்கு ஐ.தே.கட்சியின் பதில் வர முன்னரே சந்திரிகா ரணிலின் அரசாங்கத்துக்கு காற்றைப் பிடுங்கி விட்டதால் பந்தைச் சந்திரிகாவின் பக்கம் வசதியாக எறிந்து விட்டு வெகு உல்லாசமாக நிகழ்வுகளைப் பார்த்து இரசிக்கிறது ஐ.தே.கட்சி.**

சந்திரிகா அம்மையாரின் அவசரக்கூட்டாளிகளான ஜே.வி.பி.யினர் கடந்த புதன்கிழமை தேசப்பற்றுள்ளோரின் தேசிய இயக்கமென்ற தமது இனவாதக் கூடாரத்தின் 5வது ஆண்டு நிறைவை ஒட்டி கேகாலை நகர மண்டபத்தில் பொதுக்கூட்டமொன்றை நடத்தினர். இக்கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, 'இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம்' என்ற தோரணையிலான எச்சரிக்கை ஒன்றினை வெளியிட்டார். வழமையாகவே ஆவேசமாக உரையாற்றிப்பழகிவிட்ட வீரவன்ச, அதையும் தனது பாணியிலேயே வலது கையினை உயர்த்திச் சுண்டு விரலை ஆட்டியபடி சொல்லி முடித்தார்.

'புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அரசாங்கம் ஆராய்ந்து பார்க்குமானால் அன்றுடன் அரசாங்கத்தின் ஆயுள் முடிவுறும். ஜே.வி.பி, ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து அக்கணமே வெளியேறும்' என்று கர்ச்சித்திருக்கின்றார் வீரவன்ச.

இந்தக் கர்ச்சணையைப் பற்றிப் பிடித்து ஐ.தே.கட்சியின் சார்பில் மறுநாள் வியாழக்கிழமை நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் முன்னால் காணி அமைச்சரும் தற்போதைய எம்.பியுமான ராஜித சேனாரட்ண தெரிவித்ததே 'சந்திரிகாவின் அரசாங்கத்துக்கு இவ்விடயத்தில் ஆபத்து ஏற்பட்டால் ஐ.தே.கட்சி உதவும்' என்ற அரசியல் 'அவுட்டு' ஆகும் பார்த்தீர்களா!

எப்படிப்போகிறது கதை?

தற்போது இடைக்கால நிர்வாக சபைக்கான புலிகளின் யோசனைகள் என்ற பந்தின் மீது கொழும்பு அரசியலின் குவிவு மையம் வந்துவிட்டது போல் படுகிறது. கடந்த புதனன்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் வெளியிட்ட சமாதான நடவடிக்கைகளின் இன்றைய நிலை குறித்த கருத்துக்களுடன் இதனையும் பொருத்திப் பார்க்கின்ற ஒருவருக்கு அழுவதா? சிரிப்பதா? என்ற மன நிலையே தோன்றும்.

'நாங்கள் பேச்சுவார்த்தை பற்றிப்பேசவில்லை. அதற்கான அடிப்படையான உடன்படிக்கை பற்றியே பேசினோம்' என்கிறார் ஹெல்கீசன். அத்தோடு அவர் நிற்கவில்லை. 'தற்போது சமாதானம் நிலவுவதாக நினைக்கின்றார்கள். கைச்சாத்திடப்பட்டிருப்பது சமாதான ஒப்பந்தமல்ல போர் நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமே' என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

தற்போது இரு தரப்புக்குமிடையே ஆழமான சந்தேகம் வளர்ந்துள்ளது, என்பதைச் சுட்டிக்காட்டிய நோர்வேயின் அமைச்சர் இந்நிலை தொடர்ந்தால் 'உக்கிரமான யுத்தமொன்றில்' அது கொண்டு போய் விட்டுவிடக்கூடும் எனவும் முன்னறிவித்துள்ளார். எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை விடுத்த கையோடு அவர் மற்றுமொரு விடயத்தையும் தன் சொந்தக் கருத்தாக வெளிப்படுத்தினார். 'புலிகளுக்கும் அரசுக்குமிடையே அமைதிப்பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பமாகும் என நான் எண்ணவில்லை' என்பதே அது. (பழுத்த இராஜதந்திரியான விதார் ஹெல்கீசனின் இந்தக் கருத்து அரசியலிற்குப் புதியவரான மங்கள சமர வீராவினால் மறுநாளே மறுக்கப்பட்டிருக்கிறது)

விதார் ஹெல்கீசன் அத்தோடு நிறுத்திக்கொள்ளவில்லை. 'உறைந்து போயிருந்த யுத்தப் பனிப்பாறையின் ஓரங்கள் உருகத் தொடங்கி விட்டது' எனவும் கெல்கீசன் எச்சரித்திருக்கின்றார். இதன் அர்த்தம் நிகழ்வுகள் யுத்தத்தின் பக்கமாக எதிர்காலத்தை நகர்த்திச்செல்கின்றன என்பதாகும்.

**- பு.சத்தியமூர்த்தி**

இதை நாம் தொகுத்துப்பார்க்கின்ற போது இரு விடயங்கள் தெளிவாக தெரிகின்றன. முதலாவது பேச்சுவார்த்தை என்பது இப்போதைக்கு இல்லை, இரண்டாவது யுத்தமொன்றிற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்கின்றன என்பதே அவை.


இந்த இரண்டுமே இன்றைய சிறீலங்காவின் அரசாங்கத்துக்கு அதன் இருப்பை மிக மோசமாகப் பாதித்து விடக்கூடியவையாகும். உருக்குலைந்து அல்லாடும் நோஞ்சான் பொருண்மியத்தை கொண்ட சிறீலங்காவில் ஏறக்குறைய அதே பாணியிலான அரசாங்கம் ஒன்றுதான் பதவியில் இருக்கிறது. இந்த அரசாங்கத்தினால் பொருண்மியத்தையும் வளர்த்தெடுக்க முடியவில்லை. சமாதானப்பேச்சுக்களையும் முன்னெடுக்க முடியவில்லை. யுத்தத்திற்கும் போக முடியவில்லை.

இதில் சோகமென்னவெனில், சந்திரிகா அம்மையாரின் இன்றைய இந்த அவல நிலைக்குகாரணம் வெளியிலிருந்து வந்ததல்ல. உள்ளிருந்தே கொல்லும் பகையாக ஜே.வி.பி சந்திரிகாவை அந்தப் பக்கமோ இந்தப்பக்கமோ அசைய விடாமல் கடிவாளம் பிடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு மாறாகச் சந்திரிகா அம்மையார் அடியெடுத்து வைத்தால் 'கண்ணிவெடி கவனம்' என்பது போல் 'அரசாங்கத்தின் ஆயுள் அன்றோடு முடிந்தது' என்று மிக வெளிப்படையாகவே மிரட்டியிருக்கிறது.

இந்தச் சூழலில் தான் ஐ.தே.கட்சியின் அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. இது சந்திரிகா அம்மையாருக்கு மனதுக்கு இதமாக இருக்குமா? இல்லை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்குமா? என்பது அவருக்குத் தான் வெளிச்சம். ஆனால் இந்த அறிவிப்பின் பக்கமாக ஏதாவது சாதகமான சமிக்ஞை காட்டுவாராக இருந்தால் அது அவரும் அவரது கட்சியினதும் அண்மித்த அரசியல் அரசியல் எதிர் காலத்துக்கும் குழி தோண்டுவதாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஏனெனில் வெளிப்படையாகவே வீராப்புப்பேசும் பேசி விட்டிருக்கும் ஜே.வி.பிக்கு கௌரவப் பிரச்சினையாக சந்திரிகாவின் செயற்பாடு அமைந்துவிடும் பட்சத்தில் ஜே,வி.பி சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியுடனான தனது கூட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படும். அவ்வாறு அது வெளியேறுவது அதற்கு உடன் தொடரும் வருடங்களில் தன்னை மேலும் காலூன்றிக்கொள்ளவே வழி வகுக்குமென்பதில் ஜே,வி,பி.க்கு மிகுந்த தன்னம்பிக்கையுண்டு. இந்த நிலைமை ஏற்கனவே கலகலத்துப் போயிருக்கும் சிறீலங்காச் சுதந்திரக் கட்சியின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்து விடும். அது ஐ.ம.சு. கூட்டமைப்பை எதிர்கொள்ள முடியாமல் இரண்டாமிடத்துக்கு தள்ளப்பட்டு விட்ட தடுமாறிக் கொண்டிருக்கும் ஐ,தே. கட்சியை மீளவும் முதலிடத்திற்கு கொண்டு வந்து விடும். சுதந்திரக் கட்சி மூன்றாமிடத்திற்கு தள்ளப் பட்டு விடும் வாய்ப்பும் நிராகரிக் கப்படக்கூடியதல்ல.

உண்மையில் ஐ.தே.கட்சி விரும்புவதும் அதையே. மிதவாத அரசியலில் ஈடுபடும் ஒரு கட்சி என்ற வகையில் அரசாங்கத்தை நடாத்தும் தனது பிரதான அரசியற் போட்டியாளரை இக்கட்டிலிருந்து காப்பாற்றும் ஒரு கனவான் தனமான அரசியல் போன்று ஐ.தே. கட்சியின் அறிவிப்பு தோன்றக் கூடும். மறுவளமாக இது ஒரு தேசிய அரசினை அமைப்பதற்கான அழைப்புப்போலவும் மறைமுக அர்த்தம் கற்பிக்கப்படவும் கூடும். அவ்வாறு தேசிய அரசினை இரு மிதவாதக் கட்சிகளும் சேர்ந்து அமைப்பதனூடாக தீவிரவாத அல்லது அடிப்படைவாதக் கட்சிகளையும் சிறுபான்மைக் கட்சிகளையும் புறமொதுக்கிவிட்டு ஒரு உறுதியான அரசாங்கத்தினை உருவாக்க முடியுமே என்னும் மிக அழகானதோரு அரசியற் கற்பிதத்தையும் யாரும் முன்னிறுத்தி விடவும் கூடும்.



ஆனால் சிறீலங்காவின் கடந்த கால அரசியல் வரலாற்றையும் தற்போதைய அரசியல்வாதிகளின் 'நதிமூலத்தையும்' ஆராய்ந்து பார்த்தால் அவ்வாறானதொரு கற்பனை நிறைவேறாது குதிரைக் கொம்பென்பது மிக இலகுவாகவே உணரப்பட்டு விடும்.

அப்படியாயின் கொழும்பின் அரசியல் எத்திசையில் தான் நகரப்போகிறது? இங்கேதான் பிரச்சினையே இருக்கிறது. சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தியே ஆகவேண்டுமென்ற நிலையிலேயே சிறீலங்காவின் அரசாங்கம் இருக்கிறது. ஏனெனில் 'சமா

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

**உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.**

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

**தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

# இடைக்கால நிர்வாக சபை யோசனையும் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் பார்வையும்

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமையவேண்டியது அவசியமானது என அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி திட்டங்களையும் மனிதாபிமான பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் அதனாலேயே நிர்வாக கட்டமைப்பு ஒன்று அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு இன்று (நேற்று) விஜயமொன்றை மேற்கொண்ட ஜயந்த தனபால அங்கு ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார். நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி தீவிர முயற்சி எடுத்து வருவதாகவும் சொன்னார். தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு அமையும் என்றும் ஜயந்த தனபால நம்பிக்கை தெரிவித்தார். இடைக்கால நிர்வாக சபை அமைப்பது பற்றிய புலிகளின் யோசனைகள் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். பேச்சுவார்த்தை மேசையில் புலிகளின் யோசனையுடன் அரசாங்கமும் சில யோசனைகளை சமர்ப்பித்து இருதரப்பும் கூடி ஆராயவுள்ளனர். அது குறித்த ஏற்பாடுகள் நோர்வே மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. உடனடி மனிதாபிமானப் பணிகள் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டியதே தற்போதைய அவசர தேவையாக உள்ளதாகவும் தெரிவித்த அவர், பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மற்றும் அரச அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோரையும் சந்தித்து அவர்கள் அபிப்பிராயங்களை அறிந்துகொண்டார். விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஜயந்த தனபாலவிடம் எடுத்துக்கூறினார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் மேற்பட்ட நிலையிலும் எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் இடம்பெறவில்லை என்றும் தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்திருப்பதாகவும் யாழ். ஆயர் சுட்டிக்காட்டினார். மீண்டும் ஒரு போர் ஏற்படுவதை தவிர்க்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் ஆயர் விபரித்துக் கூறினார். இதேவேளை ஜயந்த தனபாலவை சந்தித்த பொதுமக்கள் சிலரும் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாமை குறித்து தமது விசனத்தை தெரிவித்தனர்.

இடைக்கால நிர்வாக சபையை அரசியல் அமைப்பிற்கு வெளியே நின்றுதான் அமைக்கவேண்டிய அவசியம் இருக்கின்றது. சிறீலங்கா ஜனாதிபதியின் அதிகாரங்கள் நிறைவேற்றுத்தன்மை கொண்டதினால் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதினால் பயன் இல்லையென கொழும்பு மற்றும் திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அபிப்பிராயம் கூறியுள்ளனர். தற்போதுள்ள அரசியல் அமைப்பு சிங்கள மக்களிற்குக் கூட பயனற்றதாகவே இருக்கின்றது. ஏட்டிக்குப் போட்டியான தன்மை இருப்பதினால் அபிவிருத்திகளுக்கு இந்த அரசியல் அமைப்பு பெரியளவில் இடமளிக்கவில்லையெனவும் கூறியுள்ளனர். இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து கருத்துக்கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். மேலும் அவர்கள் தெரிவிக்கையில் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை மாணவன் சந்திரா டி பெர்ணாண்டோ கூறுகையில், புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை நான் முழுதாகப் படித்தேன். அது அவர்களுடைய தேசத்திற்குரிய தன்னாட்சி அதிகாரமாகவே இருக்கின்றது. அதனால் மத்திய அரசிற்கு பாதகமாக எதுவும் இல்லை. தமது பிரதேசங்களுக்குரிய கல்வி முறை பற்றி புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையில் பெரிதாக எதுவும் குறிப்பிடவில்லை. ஆகவே கல்வி விடயத்தில் மத்திய அரசினுடைய ஆலோசனைப்படி செய்வதற்கு அவர்கள் இணங்கியிருக்கின்றார்கள் போல் தெரிகின்றது. அல்லது பேச்சுவார்த்தை மேசையில் அதனைப் பேசித்தீர்க்கலாம் என்றும் புலிகள் கருதியிருக்கக் கூடும். இதை நோக்குகின்ற போது சிங்கள மக்களின் இறைமைக்கு தீங்கில்லாத வகையில் தமது சுயநிர்ணய உரிமையை அவர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். இதனால் சிங்கள அரசியல் தலைமைகள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றேன்.

அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் விஞ்ஞானத்துறை மாணவன் நீல் பெரேரா கூறுகையில், போராட்டம் நடந்த பிரதேசங்களில் நிரந்தர தீர்விற்கு முன்பாக இடைக்கால தீர்வு முன்வைக்கப்படுவது வழமை. ஆதனையே புலிகளும் கோரியிருக்கின்றனர். யுத்தம் நடந்த ஈராக்கிலும் கூட தற்போது இடைக்கால அரசு ஒன்றுதான் உருவாக்கப்பட்டிருக்கின்றது. புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை அரசியல் அமைப்பிற்கு முரணானது எனக் கூறிவிட முடியாது. எவ்வாறாயினும் அரசியல் அமைப்பிற்கு உட்படாத வகையில், தனியான ஒரு சட்ட அமைப்பை விடுதலைப் புலிகள் கோருவது தவிர்க்கமுடியாதது. அதற்காக அந்த சட்ட அமைப்பு நாட்டைப் பிளவுபடுத்தும் என சிங்கள மக்கள் கருதவும் கூடாது. அமெரிக்க அரசியல் அமைப்பு ஐம்பது மாநிலங்களுக்கும் தனித்தனியான அதிகார முறைமைகளை கையளிக்கின்றது. அதற்காக அந்த ஐம்பது மாநிலங்களும் தனித்தனி நாடாக பிரிந்து சென்றுவிடவில்லை. எமது அரசியல் தலைமைகள் சர்வதேச ரீதியான அரசியல் அமைப்பு முறைகளையும் கோட்பாடுகளையும் பரிசீலனை செய்தால் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை சட்டமாக்குவதில் பிரச்சினை இருக்காது.

திறந்த பல்கலைக்கழக மாணவி பிரியங்கா விக்கிரமசிங்கா தெரிவிக்கையில், சுவிஸ்லாந்தில் பலமொழிகள் இருக்கின்றன. ஜேர்மன் மொழியைப் பேசுவோர் 65 வீதம், பிரெஞ் மொழியைப் பேசுவோர் 18 வீதம், இத்தாலிய மொழியைப் பேசுவோர் 9 வீதம், ரோமனஷ் மொழியைப் பேசுவோர் 1 வீதம். இந்த நான்கு மொழிகளும் தேசிய மொழிகளாகவும் முதல் மூன்று மொழிகளும் ஆட்சி மொழிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சுவிஸ்லாந்து ஒரு கூட்டாட்சி முறையுள்ள நாடாகும். மாநிலங்களிடையே இணைப்பு இறுக்கமாக இருப்பதில்லை. மத்திய அரசின் அதிகாரங்கள் வலிமை பொருந்தியதாகவே இருக்கும். இந்த நிலையிலும் அங்கு ஒவ்வொரு இனங்களுடைய சுயநிர்ணய உரிமை சமநிலையில் பேணப்படுகின்றது. சுவிஸ் அரசியலமைப்பு முறையை எமது நாட்டின் பிரச்சினைக்கு தீர்வாக பரிசீலிக்க முடியும் என எங்களுக்கு கற்பித்த சட்டத்துறை பேராசிரியர் ஒருவர் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை.) தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை ஒரு சமூகத்திற்கான தன்னாட்சி தன்மையுடையது. அது சிங்கள மக்களின் இறைமைக்கோ அல்லது இந்துமா சமுத்திரத்தின் பாதுகாப்பிற்கோ அச்சுறுத்தலாக இருக்கக்கூடியது அல்ல என்றும் அந்த பேராசிரியர் தமக்கு கூறியதாக அந்த மாணவி சொன்னார்.



– கொழும்பிலிருந்து **ஊரோடி**

தற்போதைய அரசியல் அமைப்பை மாற்றி மூன்றாவது குடியரசு அரசியல் யாப்பொன்றை உருவாக்கவேண்டும். அப்போது தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைகளும் தனியான முறையில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலைப்பீட மாணவி டுல்ஜா டி சில்வா கூறினார். தென்பகுதி அரசியல்வாதிகள் இனவாதக் கருத்துக்களை கூறி அரசியல் நடத்துவதைவிட்டு இந்தநாட்டின் சகல இனமக்களும் சமஉரிமையோடு வாழ்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்றும் கூறிய அந்த மாணவி, மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை என்றும் கூறினார். நோர்வே போன்ற சர்வதேச நாடுகளின் உதவியைப் பெற்று கூடிய விரைவில் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றும் அந்த மாணவி மேலும் சொன்னார்.

அதேவேளை பெயர் குறிப்பிட விரும்பாத மாணவர்கள் விரிவுரையாளர்கள் பலரும், இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சை ஆரம்பித்து அந்த யோசனையை சட்டமாக்குவதற்கு முன்னர் சில தெளிவுபடுத்தல்களை சிங்கள மக்களுக்கு அரசாங்கமும், பிரதான அரசியல் கட்சித்தலைவர்களும் வழங்கவேண்டும் என்று கூறினர்.


**IVRY SUR SEINE (94) இல் 5 வருட காலமாக திறமையான ஊழியர்களைக் கொண்டு வெற்றிகரமாக இயங்கிவருகிறது!**

# SIVAS PROPRETE S.A.S

SIVAS PROPRETE S.A.S
BP-04 / 53 RUE MOLIERE
94201 IVRY SUR SEINE CEDEX
TEL: 01 46 70 15 08 / Fax: 01 46 70 15 88

-வீட்டின் அனைத்து திருத்த வேலைகள் - மின்சாரவேலைகள்-புல்வெட்டுதல்-பூச்சிக்கு மருந்துவைத்தல்-
மற்றும் வீட்டின் தளபாடங்கள் ஏற்றி இறக்குவதற்கும் உள்ளூர் வெளியூர் பயணங்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய வாகனங்கள் சாரதியுடன் வாடகைக்கு உண்டு

E-Mail: Sivas.proprete@wanadoo.fr - site:www.sivas-proprete.com

# பாகிஸ்தானுக்கு பஸ் விடும்போது இலங்கைக்கு கப்பல் விடுவது தவறு இல்லை

**– பாஜக செயலாளர் இலகணேசன் –**


(08.08.04)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுப்பியுள்ள சந்தேகங்களைச் சரி செய்துவிட்டு, தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தைத் தொடங்கலாம் என்று இந்திய அரசுக்கு பாரதீய ஜனதாவின் இந்தியச் செயலர் இல.கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக நிருபர்களிடம் வியாழக்கிழமை அவர் கூறியதாவது: தூத்துக்குடியில் இருந்து கொழும்பு நகருக்கு கப்பல் போக்குவரத்தைத் தொடங்குவது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என்றும், விடுதலைப் புலிகள் ஊடுருவி விடுவார்கள் என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார். இந்த அச்சம் நியாயமானதே. இருப்பினும், இந்தப் பிரச்சினைக்கு வேறொரு கோணமும் இருக்கிறது. இலங்கைத் தீவில் புலிகளும் போராளிகளும் இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அங்கு வாழும் பெரும்பான்மையான தமிழர்கள் அப்பாவிகள்.

அவர்கள் இந்தியாவுக்கு வர வேண்டுமானால் விமானம் மூலம் மட்டுமே வர முடியும். வசதி படைத்தவர்களுக்கே இது சாத்தியம். எல்லோராலும் விமானம் மூலம் வர முடியாது. மற்றவர்களுக்கு இருக்கிற ஒரே வழி கடல் மார்க்கம் தான். பாகிஸ்தான் நாட்டின் லாகூருக்கு டில்லியில் இருந்து வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பேருந்து விடப்பட்டது. பாகிஸ்தான் எதிரி நாடு. ஆனால், இலங்கை எமது எதிரி நாடு அல்ல. கப்பல் பயணத்தை விட, தரை வழி பஸ் பயணத்தில்தான் தீவிரவாதிகளால் ஆபத்துகள் அதிகம். ஆனால் லாகூருக்கே பஸ் விட்டுள்ளோம். ஆகவே முறையான விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை வகுத்து, உண்மையிலேயே தகுதி வாய்ந்த பிரஜைகளை மட்டும் அனுமதிக்க முடியுமானால் இத் திட்டத்தைத் தொடங்கலாம் என்றார்.

முன்னதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு, தமிழகத்தினுள் கருணா ஊடுருவும் வாய்ப்புள்ளதால் கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையை நிறுத்துங்கள் என்று கூறி மிகவும் நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

# வெள்ளப் பெருக்கனால் இலட்சக்கணக்கானோர் பாதிப்பு



(08.08.04)

இந்தியாவின் அகமதாபாத் மாநிலம் மற்றும் பங்களாதேசில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக இலட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன் வாந்திபேதி, வயிற்றுளைவு போன்ற தொற்று நோய்கள் வேகமாக பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில தினங்களில் மட்டும் வாந்திபேதி நோயினால் 100 பேர் வரை இறந்துள்ளதாகவும் இது மிக அபாயமான ஒரு கட்டம் என்றும் சர்வதேச அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.



# இந்திய இராணுவ அணியில் புதிய நவீனரக டாங்கிகள் இணைப்பு

(08.08.04)

தமிழகம் சென்னையில் தயாரிக்கப்பட்ட நவீனரக அர்ஜூன் டாங்கிககள் இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ் ஒப்படைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடைம்பெற்றது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி டாங்கிகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து உரையாற்றினார்.



உலகில் மக்கள் தொகையில் 2வது பெரிய நாடான இந்தியா அனைத்து துறைகளிலும் வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. அதுவும் இராணுவ தளவாடங்கள் உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்திய இராணுவத்துக்கு தேவையான டாங்கிகளை இதுவரை வெளிநாடுகளில் இருந்துதான் வாங்கி கொண்டிருந்தோம். இப்போது முதல் முறையாக உள் நாட்டிலேயே அதி நவீன டாங்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஆவடியில் உள்ள திண் இராணுவ ஊர்தி தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த டாங்கிக்கு `அர்ஜூன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் `அர்ஜூன்' ஒரு முக்கிய பாத்திரமாக இருந்தான். அதே போல் இந்திய இராணுவத்தில் இந்த அர்ஜூன் டாங்கி ஹீரோவாக திகழப் போவது உறுதி. இந்த டாங்கி உலகின் சிறந்த டாங்கிகளை விட நவீன வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆவடி போர் வாகன ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் அறிவியல் மற்றும் தொழில் தட்ப வல்லுனர்கள் வடிவமைத்து உருவாக்கி உள்ளனர்.

அர்ஜூன் டாங்கி 58 தொன் எடை கொண்டது. அதி வேகமாக செல்லும். சமதள தரையில் 70 கிலோ மீட்டர் வேகத்திலும், கரடுமுரடான பாதையில் 40 கிலோ மீட்டர் வேகத்திலும் செல்லும் திறன் கொண்டது. தண்ணீரில் 2.4 மீட்டர் ஆழத்தில் செல்லக் கூடியது. பாலைவனத்திலும் பாய்ந்து செல்லும். எந்த வானிலை சூழ்நிலையிலும் இரவு, பகல் எந்த நேரத்திலும் எதிரிகளை தாக்கும் சக்தி படைத்தது. `லேசர் பாயிண்ட்' மூலம் குறி வைத்து சுடும். முழுவதும் கொம்யூட்டர் கட்டுப்பாட்டில் இயங்கும். எதிரி குண்டு தாக்கினாலும் சேதம் ஏற்படாத வகையில் உறுதியாக தயாரிக்கப்பட்டுள்ளது. தீ பிடிக்காத உலோகத்தில் செய்யப்பட்டுள்ளது. தூசி எதுவும் உள்ளே வராது. டாங்கியின் மேல் பகுதியில் இயந்திர துப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.

# ஈராக்கில் உள்ள ஒவ்வொருவருக்கும் படையினரால் பாதுகாப்பு கொடுக்கமுடியாது

**– அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் –**

(08.08.04)

ஈராக்கில் இருக்கும் இந்தியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாது என்று அமெரிக்கா அறிவித்து இருக்கிறது. ஈராக்கில், மூன்று இந்தியப் பிரஜைகள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட நிலையில், ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஈராக்குக்கு இந்தியா இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா நிராகரித்த நிலையில், ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்குமா என்ற கேள்விக்கு அமெரிக்கா பதில் அளித்து இருக்கிறது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரிச்சர்டு பவுச்சர் கூறியதாவது, ஈராக்கில் உள்ள ஒவ்வொரு இந்தியர்களுக்கும், அமெரிக்க படையினரால் பாதுகாப்பு கொடுக்க முடியாது. இந்தியர்கள் மட்டும் அல்ல, பாகிஸ்தான், வங்காள தேசத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு உறுதி அளிக்க முடியாது. ஈராக் ஒரு ஆபத்தான பகுதி. அங்கு அமெரிக்க கூட்டு படைகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள். மேலும் பல ஆபத்துக்களும் அங்கு இருக்கின்றன.

அங்கு அமைதியான சூழ்நிலை ஏற்பட முயற்சி எடுத்து வருகிறோம். ஈராக் அரசுடன் இணைந்து செயல்படுகிறோம். ஆனால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாங்கள் பாதுகாப்பு அளிக்க முடியாது. ஈராக் நாட்டை புதுப்பிக்கும் பணியில் எங்களுடன் இணைந்து செயல்படும் ஈராக்கியர்களும் தாக்கப்படுகிறார்கள். எனவே ஒவ்வொரு ஈராக் மக்களுக்கும் எங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியாது. நாங்கள் ஈராக்கியர்களுக்கு பயிற்சி கொடுக்கிறோம். அவர்களே தங்களுக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறோம். ஆனால் தீவிரவாதிகளை எதிர்ப்போம். இவ்வாறு அமெரிக்க செய்தி தொடர்பாளர் கூறினார்.

# தலையில் தேங்காய் உடைத்து வழிபடுவதற்குத் தடைவேண்டும்

**– மதுரை ஆதினம் –**

தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்வதைத் தமிழக அரசு தடைசெய்யவேண்டும் என்று மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ் நாட்டின் கரூர் பிரதேசத்தில் மகா லட்சுமி அம்மன் கோயிலில் பக்தர்கள், தங்கள் தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்ததில் பலரது மண்டைகள் உடைந்து இரத்தம் வழிந்தோடியது என்ற செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

மனித உடலில் முக்கிய பகுதியாகிய தலையில் முழுத்தேங்காயை உடைத்து மனித மூளைக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதைச் சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? இறைவனைப் பிரார்த்தனை செய்வதில் எவ்வளவோ எளிய வழிகள் இருக்கின்றன. எனவே, தலையில் தேங்காயை உடைத்து வழிபாடு செய்யுங்கள் என எந்த ஒரு ஞானியும் கூறவில்லை. வேதங்களிலும் அப்படியான கருத்து இல்லை. மூளையைப் பாதிக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் தலைமுடியையும் மிகக்கடினமான மண்டை ஓட்டையும் இறைவன் படைத்துக் காத்துக் கொண்டு இருக்கின்றான். இந்த மூடநம்பிக்கைச் செயலைத் தமிழக அரசு தடைசெய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என மனிதாபிமான அடிப்படையில் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் உள்ளது.

# ஈராக்கில் உள்ள இத்தாலியப் படையினருக்கு எச்சரிக்கை

(08.08.04)

ஈராக்கில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள இத்தாலிய இராணுவம் மீளப்பெறப்பட வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அல்-கைதாவுடன் தொடர்புடைய இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளது. ஈராக்கில் தங்கியுள்ள இத்தாலிய இராணுவம் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள அந்த அமைப்பு, அவ்வாறு விலக்கிக்கொள்ளப்படாத பட்சத்தில் இத்தாலியில் தாம் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாக எச்சரித்துள்ளதது. ரோமிலும் இத்தாலியின ஏனைய முக்கிய நகரங்களிலும் உள்ள தமது போராளிகள் தாக்குதல்களை நடத்த தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு மேலும் எச்சரித்துள்ளது.

# பிஜித்தீவு துணை அதிபருக்கு 4 ஆண்டு சிறை

(08.08.04)



ஆஸ்திரேலியா அருகே உள்ள பிஜித்தீவு துணை ஜனாதிபதியாக இருக்கும் ஜோபேசெனிலோலிக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்திய வம்சாவழியான மகேந்திர சவுத்ரி பிரதமராக இருந்த போது, அவரது ஆட்சியை கவிழ்ப்பதற்கு நடந்த புரட்சிக்கு உதவியதற்காக அவருக்கு இந்த தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. அவருடன் துணை சபாநாயகர் ரகுய்ட்டா வகாலாலபுரே உள்பட 4 பேருக்கும் ஒன்று முதல் 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்திய ஜார்ஜ் ஸ்பைட்டுக்கு ஏற்கனவே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது தெரிந்தே.

# இந்தியக் கைதிகளை விடுவிக்க ஈராக்கியரின் சினிமா ஆலோசனை!

(08.08.04)

ஈராக்கில் பணய கைதிகளாக இருக்கும் 3 இந்தியர்களையும் விடுவிப்பதில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

குவைத் நாட்டில் உள்ள ``குவைத் - கல்ப்லிங்" என்ற பாரவண்டி போக்குவரத்து நிறுவனத்தின் 7 பாரவண்டிகள் மூலம், ஈராக் நாட்டில் உள்ள அமெரிக்க இராணுவத்துக்கு தேவையான பொருட்கள் அனுப்பப் பட்டன. ஈராக்கில் இந்த 7 பாரவண்டிகளின் சாரதிகளை, கடந்த ஜூலை 21ம் திகதி ``கறுப்பு கொடிகள்" என்ற தீவிரவாத இயக்கத்தினர் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட 7 சாரதிகளில் 3 பேர் இந்தியர்கள்.

குவைத் பாரவண்டி நிறுவனம், ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என்று முதலில் தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்தனர். தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்த அல்-துலைமி என்ற மலைவாழ் தலைவரை தீவிரவாதிகள் நியமித்துள்ளனர். அல்-துலைமியுடன், இந்திய அரசின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தி வருகிறார்கள். தீவிரவாதிகளின் சமரசத் தூதர் அல்-துலைமியுடன் குவைத்-கல்ப் லிங் பாரவண்டி போக்குவரத்து நிறுவன பிரதிநிதிகள் ஒரு இரகசிய இடத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்த பேச்சுவார்த்தையின் முழு விவரங்கள் வெளியிடப்படவில்லை. இருந்த போதிலும் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதாக தெரிகிறது.

இதற்கிடையே அல்-துலைமி அமிதாப்பச்சன், தர்மேந்திரா உள்ளிட்ட இந்தி சினிமா நடிகர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறி இருப்பதாவது, அமிதாப்பச்சன், தர்மேந்திரா போன்றவர்கள் தொலைக்காட்சியில் தோன்றி பணய கைதிகளை தீவிரவாதிகள் விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க வேண்டும். இதனால் தீவிரவாதிகள் மனதில் மாற்றம் ஏற்படும். இதன் மூலம் பணயக் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும்.

நடிகை ஆஷா பரேக் எனக்கு பிடித்தமான நடிகை. அவரும் பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க வேண்டும். பலூஜாவில் பலியான 250 பெண்கள் மற்றும் குழந்தைகளின் குடும்பத்துக்கு பண உதவி செய்ய வேண்டும் என்பது தீவிரவாதிகளின் விருப்பம். ஆனால் குவைத் நிறுவனம் இந்த விவகாரத்தில் ஏதாவது செய்து இருக்க வேண்டும். இந்த பிரச்சினை இவ்வளவு நாள் நீடித்ததற்கு குவைத் நிறுவனமே காரணம். இவ்வாறு அல்-துலைமி கூறினார்.

# மறுமலர்ச்சிப் பயணத்தை ஆரம்பித்தார் வைகோ



(08.08.04)

தமிழகம் முழுவதும் வாழும் மக்களைச் சந்தித்து உரையாடி அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மறுமலர்ச்சிப் பயணத்தை ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ கடந்த வாரம் ஆரம்பித்துள்ளார். மாநிலம் முழுவதும் சுமார் 1025 கி.மீ. பாதயாத்திரையாகச் சென்று மக்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ள வைகோ, அதற்கான ஆரம்பமாக திருநெல்வேலி காந்தி சிலை முன்பாகக் கூடி, அங்கிருந்து தனது பயணத்தை ஆரம்பித்தார்.

அவருடன் ம.தி.மு.க.வைச் சேர்ந்த சீருடை அணிந்த தொண்டர்களும் இந்தப் பயணத்தில் கலந்து கொண்டுள்ளனர். இந்தப் பாதயாத்திரை செப்டம்பர் 15ம் திகதி அண்ணா பிறந்த தினமன்று சென்னையில் நிறைவடையும். இந்தப் பயணத்தின்போது நதிகளை இணைப்பதன் முக்கியத்துவம், திராவிட இயக்கத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் மற்றும் கொள்கைகள், மதவாதத்தை வேரறுக்க வேண்டியதன் அவசியம் மற்றும் பொதுவாழ்வில் ஊழல் தடுப்பு போன்றவை பற்றி வைகோ மக்களுக்குப் பரப்புரை செய்யவுள்ளார்.



இதுதவிர, தமிழ் மொழியின் பெருமை, தமிழ் மண்ணின் மேல் மக்களுக்கு இருக்க வேண்டிய பற்றும் உறுதியும் போன்ற தமிழ் மாண்பை வளர்த்தெடுக்கும் பணியையும் இப் பயணத்தில் வைகோ முன்னெடுப்பார் என்று தெரியவருகிறது. அ.இ.அ.தி.மு.க. அரசின் மக்கள் விரோதப் போக்கிற்கு எதிரான பிரச்சாரமாகவும் இந்தப் பயணத்தைப் பயன்படுத்த வைகோ திட்டமிட்டுள்ளார் என்று ம.தி.மு.க.வின் செய்திக் குறிப்பு கூறுகிறது.


## TCN Films வழங்கும்




# 4 ஸ்டூடண்ஸ்

காலம்:

| | | |
|---|---|---|
| வெள்ளி: | 13.08.04 | 20.15 |
| சனி: | 14.08.04 | 18.15 –21.15 |
| ஞாயிறு: | 15.08.04 | 18.15 –21.15 |
| திங்கள்: | 16.08.04 | 20.15 |

இடம்: ESPACE CINEMA
Quatre Chemins,
Aubervilliers.

தொடர்புகட்கு:
www.tamilcine.net
TCN Films: 06 10 35 77 19 (Ramesh)


# 'ஈராக்கில் இருந்து இராணுவத்தை திரும்ப அழைப்பேன்'


## - ஜனநாயக கட்சி ஜனாதிபதி வேட்பாளர் உறுதிமொழி -

(08.08.04)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜோன் கெர்ரி, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். டொபுக் என்ற இடத்தில் நடந்த பேரணியில் அவர் கலந்து கொண்டு பேசியபோது, தான் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானால், ஈராக்கில் இருந்து அமெரிக்க இராணுவத்தை கௌரவத்துடன் நாடு திரும்புமாறு அழைப்பேன் என்று வாக்குறுதி அளித்தார். ஈராக் போர் காரணமாக அமெரிக்காவின் நண்பர்களை புஷ் அன்னியப்படுத்தி ஒதுக்கி விட்டார். ஜனநாயக கட்சி ஆட்சி ஏற்பட்டால், உலக நாடுகளுடன் அமெரிக்கா நட்புடன் நடந்து கொள்ளும் என்றும் கெர்ரி கூறினார்.

,ஒ,ஞ்;ஞ்குனுசிமகி;கி› ஞ்குகி;கிசூசிகி;கி

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடும் புஷ்சை தோற்கடிக்க வேண்டும் என்று அமெரிக்க முஸ்லிம்கள் தீர்மானித்துள்ளனர். அமெரிக்காவில் 70 இலட்சம் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 30 இலட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள். அமெரிக்காவில் உள்ள அரபு அமெரிக்கன் இன்ஸ்டிடிட் நடத்திய கருத்துக்கணிப்பில் 51 சதவீத முஸ்லிம்கள் கூறுகையில், புஷ்சை எதிர்த்துப் போட்டியிடும் ஜோன் கெர்ரி வாக்களிக்கபோவதாக கூறி உள்ளனர். 24 சதவீத முஸ்லிம்கள் புஷ்சுக்கும், 17 சதவீத முஸ்லிம்கள் சுயேச்சை வேட்பாளர் ரால்ப் காடர்க்கும் வாக்களிக்கபோவதாக கூறினார்கள்.




இதேபோல மெக்சிகனில் உள்ள சமூகக்கொள்கைக்கான இன்ஸ்டிடிட் நடத்திய கருத்துக் கணிப்பில், 85 சதவீத முஸ்லிம்கள் புஷ்சின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை என்று கூறி உள்ளனர். பாகிஸ்தானில் பிறந்த முஸ்லிம்கள் மட்டும், புஷ்சுக்கு ஆதரவாக உள்ளனர். கெர்ரியின் வெளிநாட்டுத் கொள்கை பாகிஸ்தான், சவூதி அரேபியா ஆகியவற்றுக்கு எதிராக உள்ளது என்று கருத்து தெரிவித்துள்ளனர்.




சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

# N.S.Jewellery


(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04



# நீலவாணி எண்டர் பிறைஸ்

## இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு
## பேர்ண் மாநகரில்

# மாபெரும் மலிவு விற்பனை

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg | 7.50Fr | 6.90Fr |
| உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| இலங்கை கீரை வகைகள் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| மரவள்ளி | 3.80Fr | 3.00Fr |
| இராச வள்ளி | 8.00Fr | 5.50Fr |
| வெண்டி, புடோல், பூசணி, முருங்கை | 5.50Fr | 3.80Fr |
| உள்ளி | 3.00Fr | 1.75Fr |
| சின்ன வெங்காயம் | 8.00Fr | 5.50Fr |
| தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய் | 9.00Fr | 7.35Fr |
| நெஸ்டோமோல்ட் | 6.90Fr | 5.50Fr |
| விவா | 8.90Fr | 6.90Fr |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | 5.90Fr |
| மைலோ | 6.90Fr | 5.90Fr |
| நெல்லி ரசம் (தோலகட்டி) | 6.50Fr | 5.40Fr |
| பழரச வகைகள் | 6.50Fr | 5.40Fr |
| லெமன் பஃப் | 2.50Fr | 1.25Fr |
| டி டைம் | 3.50Fr | 2.50Fr |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | 4.80Fr |
| ஃபமிலி ஷசேட்மன்ட் | 4.80Fr | 3.50Fr |
| கிறிம் கிறேக்கர் | 2.50Fr | 1.70Fr |
| சீனி சம்பல் | 5.50Fr | 4.20Fr |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | 4.20Fr |
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | 4.20Fr |
| ஜாம் வகைகள் | 3.90Fr | 3.10Fr |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | 9.60Fr |
| தேங்காய் பால் பவுடர் 350g | 5.95Fr | 4.50Fr |
| தேங்காய் பால் பவுடர் 150g | 3.15Fr | 2.10Fr |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| புழுங்கல் அரிசி 5Kg | 12.50Fr | 9.30Fr |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| சம்பா 5 Kg | 13.50 Fr | 9.30Fr |
| சம்பா 1Kg | 2.50Fr | 1.90Fr |
| பசுமதி அரிசி 5Kg | 12.00Fr | 7.50Fr |
| U.S.A அரிசி 25 Kg | 35.00 Fr | 28.50Fr |
| மைசூர் பருப்பு 2Kg | 5.50Fr | 3.50Fr |
| நல்லெண்ணெய் 375 Ml | 6.90Fr | 4.90Fr |
| 750 Ml | 11.90Fr | 9.40Fr |
| வறுத்த அரிசி மா 1 Kg | 3.90Fr | 2.90Fr |
| யாழ்.மிளகாய்தூள் 900g | 9.60Fr | 7.90Fr |
| கிங்ஸ், லீலா, சூரியா 500g | 5.50Fr | 4.30Fr |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.90Fr | 9.90Fr |
| உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg | 9.50Fr | 8.00Fr |
| உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg | 14.00Fr | 11.00Fr |
| உடன்கோழி | 6.50Fr | 5.50Fr |
| மைசூர் பருப்பு 500g | 1.90Fr | 1.20Fr |
| உழுத்தம் பருப்பு 2kg | 5.90Fr | 4.50Fr |
| உழுத்தம் பருப்பு 500g | 1.90Fr | 1.20Fr |
| கடலைப் பருப்பு 2kg | 5.90Fr | 4.50Fr |
| கடலைப் பருப்பு 500g | 1.90Fr | 1.30Fr |
| கடலை 2kg | 6.90Fr | 4.50Fr |
| கடலை 500g | 1.90Fr | 1.30Fr |
| பயற்றம் பருப்பு 2kg | 6.90Fr | 4.50Fr |
| பயற்றம் பருப்பு 500g | 1.90Fr | 1.30Fr |
| உழுத்தம் பருப்பு கோதுடன் 2kg | 5.90Fr | 4.50Fr |
| உழுத்தம் பருப்பு கோதுடன் 500g | 1.90Fr | 1.20Fr |
| அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா 5 kg | 14.90Fr | 12.90Fr |
| மீன் ரின் (இலங்கை) | 2.70Fr | 2.00Fr |
| பழப்புளி 400g | 2.30Fr | 1.50Fr |
| நெக்டோ 1.5 ட | 3.50Fr | 2.50Fr |
| நெக்டோ 375 ml | 2.50Fr | 1.50Fr |
| ஆடு, மாடு, கோழி கறிக்கூடு | 5.90Fr | 4.90Fr |
| ரொட்டி | 4.00Fr | 3.00Fr |

**மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்**

இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள்
அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம்
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட
கழிவு உண்டு

**வாருங்கள்! நுகருங்கள்!**
**நல் ஆதரவைத் தாருங்கள்!!!**

**Bubenbergplatz 8 - 3011 bern**
**Tel: 031 -312 17 50**
**Natel: 079-300 37 49**
**Fax: 031 - 312 17 49**
பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

sw-70

# சிதைக்கப்படும் தமிழ் தேசியம் பாதுகாக்கப்பட வேண்டும்

தமிழர் தாயகத்தை சிதைத்து தேசியத்தை அழித்துவிட சிங்களப்பேரின வாதிகளும் தென்னாசிய வல்லாதிக்கச் சக்திகளும் தமிழின தேச விரோதிகளும் முயன்று கொண்டிருக்கின்றனர். தமிழர் தேசியத்தையும் தாயகத்தையும் பாதகாக்கவேண்டியது தமிழீழ மக்களின் கடப்பாடாகும். ஆகவே தமிழர் தாயகத்தையும் தேசியத்தையும் பாதுகாக்க தமிழர்கள் என்ன விலை கொடுக்கவும் தயாராக வேண்டும்.

ஒரு இனம் தேசிய இனமாக வேண்டுமானால் சில பண்புகள் இருக்க வேண்டும். அவ்வாறான பண்புகள் தமிழினத்துக்கு உண்டு. அதனை சிங்களத் தேசியவாதம் ஏப்பமிட முயல்கிறது.

1. ஒரு மொழி
2. நீண்ட நிலப்பரப்பு
3. தனித்துவமான கலை பண்பாடு
4. பூர்வீக வரலாறு
5. தன்னிறைவோடு வாழ பொருளாதார வளங்கள்

இந்த ஐந்து அம்சங்களையும் ஒரு மக்கள் கூட்டம் கொண்டிருந்தால் அது தேசிய இனம் எனப்படும். ஆகவே தமிழர் ஒரு தேசிய இனம், தமிழரின் தேசியம் பாதுகாக்கப்படவேண்டும். மேற் கூறப்பட்ட ஐந்து அம்சங்களையும் சிதைப்பதற்கு சிங்களத் தேசியப் பேரினவாதிகள் படாதபாடு பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

### மொழி

ஒரு தேசிய இனத்தை அடக்க வேண்டுமானால் அதன் மொழி அழிக்கப்பட வேண்டும். தமிழ் தேசியத்தை சிதைப்பதனை மையப்படுத்தியே சிங்கள ஆளும் வர்க்கம் தனிச் சிங்களச்சட்டத்தை கொண்டுவந்தது. அதன் மூலம் அரசகரும மொழியினை சிங்களமாக சட்டமாக்கி இலங்கைத்தீவினை சிங்கள மயமாக்கி தமிழனை அழித்துவிட முயன்றது.

### தாயகத்தைச் சிதைத்தல்

இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக இருந்த தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கியது சிங்கள அரசு. தமிழரின் வாழ்விடங்கள் சிங்களவர் பூமியாகியது. இதுவரை தமிழீழத்தின் முக்கால்ப்பகுதி 8000 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவு நிலம் சிங்களக் குடியேற்றங்களாக்கப்பட்டு நிலப்பறிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழரின் தனித்துவத்தை அழித்து தாயகப்பகுதியை பிரித்து தமிழ்தேசியம் என்ற எண்ணக்கருவை அகற்றும் வகையில் சிங்கள அரசுதிட்டமிட்டுச் செயல்படுகின்றது.

அன்று டி.எஸ் சேனநாயக்கா முதல் இன்று சந்திரிக்கா அம்மையார் வரையான அரை நூற்றாண்டு காலத்திலும் பட்படியாகத் தமிழர் தாயகம் வன்பறிப்புச் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. தமிழர் தேசியத்தை அழிக்க தமிழர் தாயகம் காலத்திற்குக் காலம் சிங்களக் குடியேற்றம் மூலம் பிளக்கப்படுகின்றது.

1. வடக்கையும் – கிழக்கையும் பிரித்தல்
2. அம்பாறையினையும் மட்டக்களப்பையும் பிரித்தல்
3. மட்டக்களப்பையும் திருகோணமலையையும் பிரித்தல்
4. திருகோணமலையையும் முல்லைத்தீவையும் பிரித்தல்
5. மன்னாரையும் புத்தளத்தையும் பிரித்தல்
6. வவுனியாவையும் மன்னாரையும் பிரித்தல்

இவ்வாறான சிங்களக்குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகத்தைப் பிரித்து இன மத விகிதாசாரத்த மாற்றியமைக்கும் திட்டத்தில் சிங்கள அரசுகள் செயற்பட்டு வருகின்றன.

### தமிழரின் பூர்வீக வரலாறு

தமிழர்களின் பாரம்பரிய பூர்வீக வரவாற்றை மாற்றியமைக்கும் வகையில் முயற்சிகளை சிங்கள அரசு செய்கின்றது. இலங்கை தீபகற்பத்தின் வரலாற்றில் சிங்கள இனத்தை மேம்படுத்தக் கூடியவாறு மிகைப்படுத்தியும் தமிழ்மக்களின் பெருமைகளை மறைத்தும் இழிவுபடுத்தியும் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றை, பாடசாலைக் கல்வியும் புகுத்தியுள்ளது.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடென்றும் அவர்களின் வரலாறே ஈழத்து வரலாறென்றும் சிங்களவர்களால் சிங்களவருக்கு எழுதப்பட்ட வரலாறு தமிழர்களின் வரலாறு என்றும் சிங்களப் பேரினவாதிகள் இலங்கைத்தீவின் வரலாற்றை எழுதிக்கொண்டு இருக்கின்றனர். அதனையே தமிழர் பாடசாலைக் கல்விலும் நடை முறைப்படுத்தியுள்ளனர். அதனையே தமிழ் மாணவர்களும் கற்கின்றனர்.

### கலைபண்பாட்டு விழுமியங்களைச் சிதைத்தல்

தமிழர் தனித்துவமான இனம் என்பதனை அடையாளப்படுத்தும் கலைபண்பாட்டு விழுமியங்களை சிங்கள அரசும் படையும் அழித்துக் கொண்டிருக்கின்றன. இராணுவ ஆக்கிரமிப்புப்பிரதேசத்தில் மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டு தமிழர் பண்பாட்டை மாற்றியமைக்கின்றது. ஆபாச பட நாடாக்களை பரவலாகப் படையினர் விநியோகிக்கின்றார்கள். இளைஞர் யுவதிகளின் பழக்கவழக்கங்கள் மாற்றிமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஒளி, ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் கலாச்சார பண்பாட்டு நிகழ்ச்சிகளை தவிர்ப்பதுடன், தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளில் சிங்கள பண்பாட்டு அம்சங்களுள் புகுத்தப்படுகின்றன. அதனால் தமிழரின் தனித்?துவமான கலை பண்பாட்டு அம்சங்கள் சீரழிக்கப்படுகின்றன. தமிழர் எச்சங்களும் அடையாளங்களும் சிங்களப்படையினரால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### தமிழரின் பொருளாதார வாழ்வினைச் சிதைத்தல்


ஓர் இனம் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் பொருளாதார வளம் பெற்றிருக்கவேண்டும். தமிழீழம் அத்தகைய வளத்தை இயற்கையாகவே பெற்றிருக்கிறது. தமிழர்கள் யார் காலிலும் மண்டியிடாமல் தன்னிறைவோடு வாழ்வதற்குரிய வளம் தமிழ் தேசிய இனத்திடமுண்டு. அதனை அழிப்பதனையும் சுரண்டுவதனையும் மையமாகக் கொண்டு சிறீலங்கா அரசு செயற்படுகிறது.

தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களின் ஆதிக்கம் வடக்?கில் அசுர வேகத்தில் அதிகரித்து விட்டது. தமிழர்கள் பாரிய முதலிட்டு நிறுவனங்களை நடாத்த அரசு தடை போட்டு இடர்படுத்தி வருகின்றது. தமிழர்களின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக சிங்களவர் இருக்க வேண்டும். தமிழர் சிங்களவரிடம் தங்கி வாழவேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசு காய் நகர்த்துகின்றது.

மேற் கூறப்பட்ட ஐந்து அம்சங்களையும் தகர்த்து சிதைத்து விட்டால் தமிழ்த் தேசியத்தை அழித்து தமிழர்களை நாடற்றவர்களாக்கலாம் என சிங்களம் திட்டமிட்டு வருகின்றது. சிங்களவர்களின் நாசகார சதித் திட்டங்களுக்கு தமிழர்கள் உடன்படக் கூடாது.

### பிரதேச வாதம்

ஒன்று திரண்டு பலமான சக்தியாக உருவெடுத்?த தமிழ்த் தேசியத்?தின் சின்னமாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினையும் மக்களையும் கூறுபோட கருணா என்ற பிரதேசவாதி பயங்கரமான பூதமாக உருவெடுத்து சிங்கள தேசத்தின் பசிக்கு தீனி போட்டார். கிழக்கின் முடிசூடா மன்னனாக வர ஆசைப்பட்டதனால் பணத்துக்கும் பதவிக்கும் சுயநலத்துக்கும் அடிமையாகி தமிழ் தேசியத்துக்கே ஆப்பு வைக்க முனைந்தார். பிரதேச வாதிகளுக்கு கருணா வரலாறு சொல்லும் பாடமாக மாறவேண்டும். கருணா பட்ட அவமானம் இனி எவரும் படக்கூடாது. பதவிப் போட்டிக்காகவும்




(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# ஒருகோடி மக்களைப் பலிகொண்ட உலகப்போர் 1914 – 1918


கொஞ்சநஞ்சமல்ல சுமார் ஒருகோடி மக்களைக் காவுகொண்ட இந்தக் கொடுமையான போரைப்பற்றி நீங்கள் இதற்கு முன்னரும் கேள்விப்பட்டிருக்கலாம். அல்லது வாசித்தறிந்திருக்கலாம். இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் இதே ஒகஸ்ட் மாதப் பகுதியில்தான் இந்த முதலாம் உலகப்போர் கொடூரமாக வெடித்ததால் அதுபற்றி குறிப்புகளை இவ்வாரம் தருவது சற்றுப் பொருத்தமாக இருக்கும்.

27 வல்லரசுகள் பங்கேற்ற இப்போரில் உலக நாடுகளின் 9.10 மக்கள் தொகையினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கெடுத்துக்கொண்டனர். கி.பி 1790ம் ஆண்டு தொடக்கம் 1913ம் ஆண்டு வரை நிகழ்ந்த அனைத்துப் போர்களை விட இரண்டு மடங்கான மக்கள் தொகையை இந்தப் போர் காவு கொண்டது.

முதலாம் உலகப்போர் வெடித்தமைக்கு ஜேர்மனியின் மண்ணாசைதான் காரணமெனச் சொல்லப்பட்டாலும் அது முற்றிலுமான உண்மையல்ல. இப்போர் வெடிப்பதற்கு வேறும் பல காரணங்கள் இருந்தன. வல்லரசு நாடுகளுக்கிடையேயான குடியேற்றப்போட்டி, வணிகப் போட்டி பால்கன் பிரதேசப் பிரச்சினை, மொரோக்கோப் பிரச்சினை, இத்தாலியின் பேராசை என இக் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தப் போர்தான் உலகில் காணப்பட்ட ஐரோப்பியத் தலைமைத்துவத்தை முடிவுக்குக்கொண்டுவந்து அந்த இடத்தை அமெரிக்காவுக்குக் கொடுக்க வழிசமைத்தது.

### போருக்கான கரு

ஒஸ்ரியா நாட்டு இளவரசரையும் அவரது துணைவியாரையும் சரஜீவோ நகரில் வைத்து சேர்வியத் தீவிரவாதி ஒருவர் 1914 யூலை 28ம் திகதி படுகொலை செய்தவுடன் ஏற்கனவே நீறுபூர்த்த நெருப்பாக இருந்த நாடுகளுக்கிடையேயான கசப்புணர்வு முதலாம் உலகப் போருக்கு வழிசமைத்தது. ஒஸ்ரியா இந்தக்கொலையைக் காரணமாக வைத்து சேர்வியாவை அழிக்க எண்ணி போரைத் தொடங்கியது. ரஷ்யா சேர்பியாவிற்கு ஆதரவாக வந்தது. ஜேர்மனி ரஷ்யாவுக்கு எதிராக படைகளை நகர்த்தியது. பிரான்ஸ் ரஷ்யாவுக்கு ஆதரவு அளிக்க ஜேர்மனி பிரான்சுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தது. பெல்ஜியம் நடுநிலைமையை வகிக்கும் ஒரு நாடு என 1839ம் ஆண்டு உடன்படிக்கையின் மூலம் ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் ஜேர்மனி அந்த உடன்படிக்கையை மதிக்காது பெல்ஜியம்மீது போர்தொடுக்க இதனைக் காரணமாக வைத்து பிரித்தானியா ஜேர்மனியை எதிர்த்துப் போரைத் தொடங்கியது. இவ்வாறாக மாறி மாறி போர்ப் பிரகடனங்கள் மேற்கொள்ளப்பட உலகமே ஒரு கொடூரமான போரை முதல் முதலாகக் கண்டு கொண்டது.



பீரங்கி வண்டிகளும் வான்படைகளும் நச்சுவாயுப் பிரயோகங்களும், இயந்திரத் துப்பாக்கிகளும், நீர்மூழ்கிக் கப்பல்களும் முதல்முதலாக இப் போரில் . ஈடுபடுத்தப்பட்டதால் உலகமே சுமார் ஒருகோடி மக்களை இழக்கவேண்டி நேரிட்டது. துருக்கி இத்தாலி பல்கேரியா ஆகியனவும் போரில் குதித்தவுடன் தரையிலும் வானிலும் நீரிலும் பெரும்போர் நிகழ்ந்தது. போர் தொடங்கிய காலத்தில் அமெரிக்கா இப்போரில் பங்கெடுக்காவிடினும் ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அமெரிக்கக் கப்பல் ஒன்றை மூழ்கடித்தவுடன் 1917ல் ஜேர்மனிக்கு எதிராக அமெரிக்கா போரில் இறங்கியது. இப்போர்க் காலத்தில் தான் ருஷ்யாவில் பொதுவுடமைப் புரட்சி லெனின் தலைமையில் வெடித்து ஜார் மன்னனின் ஆட்சி தூக்கியெறியப்பட்டது. கடுமையான போரின் பின்னர் ஜேர்மனியின் அச்சு நாடுகள் அணி பலவீனமானதை அடுத்து 1918ம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கையுடன் இந்தப் போர் முடிவுக்கு வந்தது.

– பிரேம்





## பெரும் களங்கள்

| | |
|---|---|
| **1914** | |
| 26 ஒகஸ்ட் - 14 செப்டெம்பர்வரை | ஜேர்மனி ரஷ்யப் படைகளுக்கிடையிலான போர் 48,000 பேர் பலி. |
| 5 - 13 செப்டெம்பர் | ஜேர்மனிக்கு எதிரான பிரித்தானிய பிரெஞ் துருப்புக்களின் போர். 550,000 பேர் பலி. |
| 17 ஒக்டோபர் | ஒரே நாள் சண்டையில் மட்டும் 1, 48 000 பேர் பலி |
| **1915** | |
| 18 மார்ச் -25 ஏப்ரல் | துருக்கிக்கும் பிரெஞ்சு, பிரித்தானியப் படைகளுக்கும் இடையேயான போர். 5 இலட்சம் பேர் பலி. |
| 1-14 மே | ஜேர்மனிக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான போர் 85 ஆயிரம்பேர்பலி. |
| 23 யூன் - 7 யூலை | இஸ்சோன்சோ ஆற்றுக் கரையில் நடந்த பெரும் சமரில் 4 இலட்சத்து பத்தாயிரம்பேர் பலி. |
| **1916** | |
| 21 பெப்ரவரி - 1 மே | ஜேர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே நடந்த போர். 7 இலட்சத்து இருபதுனாயிரம்பேர் பலி. |
| 1 யூலை 19 நவம்பர் | ஜேர்மனிக்கு எதிராக பிரெஞ்சுப் பிரித்தானியப் படைகளின் போர். 10 இலட்சத்து எழுபதுனாயிரம்பேர் பலி. |
| **1917** | |
| 16 ஏப்ரல் | ஒரேநாள் ஜேர்மனிக்கும் பிரான்சுக்குமிடையேயான சண்டையில் முப்பதினாயிரம்பேர் பலி. |
| **1918** | |
| 21 மார்ச் - 6 ஏப்ரல் | இளவேனிற் காலப்போர். பிரித்தானியாவுக்கும் ஜேர்மனிக்கும் இடையேயான இப்போரில் 2 இலட்சத்து எழுபதினாயிரம்பேர் பலி. |
| 8 ஒகஸ்ட் | ஜேர்மனிக்கு எதிராக பிரான்சும் பிரித்தானியாவும் ஏனைய பொதுவுடமை நாடுகள் தொடுத்தபோர். பலர் பலி. |

# உந்துகணை செலுத்திப் படைப்பிரிவின் நிறைவு விழா : தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பிப்பு



விடுதலைப் புலிகளின் உந்துகணை செலுத்திப் [ஆர்.பி.ஜி] படைப்பிரிவின் நிறைவு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். விடுதலைப் புலிகளின் விசேட உந்துகணை செலுத்தும் படைப்பிரிவின் ஒரு தொகுதியினர் கடந்த 6ம் திகதி வெள்ளிக்கிழமை தமது விசேட பயிற்சிகளை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நிறைவு செய்துள்ளனர். இந்நிகழ்வில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஆரம்ப நிகழ்வாக 'பான்ட்' வாத்திய அணியினர் இசைக்க விசேட உந்துகணை செலுத்திப் படைப்பிரிவினரின் அணிவகுப்பு நடைபெற்றது. இதனை தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களும் வட போர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்களும், 2ம் லெப்.மாலதி படையணியின் விசேட தளபதி கேணல் விதுசா அவர்களும் ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பயிற்சிகளை நிறைவு செய்த படையணியினருக்கான சான்றிதழ்களையும், சிறப்புப் பரிசில்களையும் தமிழீழத் தேசியத்தலைவர் வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உரையாற்றும்போது, சிறீலங்கா அரச படைகள், கவசப் படையணியை உருவாக்கியிருந்தமையும் அதனை, ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கையின் போது பயன்படுத்தி இருந்தமையுமே, இவ்வாறான ஒரு படையணியை விசேடமாக உருவாக்க நான் எண்ணினேன் எனக்குறிப்பிட்டார்.

அதுபோன்றே இப்படையணி ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது எதிரியின் கவச படையணியின் முன்னேற்ற முயற்சிகள் பலவற்றை முறியடித்து பல வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்தது என்பதனை தமிழீழத் தேசிய தலைவர் அவர்கள் பெருமிதத்தோடு நினைவு கூர்ந்ததோடு, அரச படைகளுக்கு இவ் உந்துகணை செலுத்திகளை அறிமுகப்படுத்தியவர்கள் விடுதலைப் புலிகளே என்பதையும் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் உந்துகணை செலுத்திகளை பயன்படுத்துவதை அறிந்த பின்னரே சிறீலங்கா அரச படைகள் தமது படையணிகளில் இவற்றினை இணைத்துக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து போராளிகளின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்து கொண்டனர்.











# சிதைந்த கனவுகள்

சிறுகதை

அன்று ஞாயிற்றுகிழமை. சரியாக ஏழு மணி. சிராங்கூன் சாலையில் விரல் விட்டு விரல் எடுக்க முடியாத அளவுக்கு கூட்டம். புதிதாக பார்ப்பவர்களை அடேங்கப்பா என்று கூற வைப்பதை போல இந்தியா, இலங்கை, பங்களாதேஸ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து பொருளீட்டுவதற்காக இறக்குமதியாகிய முகங்கள்.

வாரத்திற்கு ஒருமுறை நண்ர்கள், உறவினர்களை சந்தித்து குசலம் விசாரிக்கும் பொழுது கஸ்டங்களை மறந்த முகங்களின் பூரிப்பை வார்த்தைக்குள் அடக்க முடியவிலலை. ஆங்காங்கே ட்ராபிக் போலிஸ் நின்றுக்கொண்டு வழிக்காட்டிக் கொண்டிருந்தார்கள். தோசை, இட்லிக்காக சாப்பாட்டு கடைகள் நிரம்பி வழிந்தன. சிங்கப்பூரியர்கள் சிலர் சனத்திரளை கண்டு முகத்தை சுளித்தும், திட்டிக்கொண்டும் சாமான்களை வாங்கிச்சென்றனர். பிரிவின் வேதனையை உணர்ந்தவர்களுக்கும், அன்பின் அர்த்தத்தை அறிந்தவர்களுக்கும் கூடியிருந்தவர்களின் கசமுசா சத்தங்கள் கூட இசையாகத்தான் கேட்கும். பொது தொலைபேசிகள் ஓய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தன.

அங்கு குழுமியிருந்தவர்கள் அனைவருமே பிரிவு துன்பத்தை ஒரு வகையில் அனுபவிப்பவர்கள். ஒருபுறம் தான் படித்த அறிவை வெளிநாடுகளில் பயன்படுத்திக் கொண்டவர்கள் பார்க்க லட்சணமாகவும், பகட்டாக, மேலை நாட்டுபாணியில் தங்களை மாற்றிக்கொண்டு பணத்தின் செழுமை உடலில் மின்ன கம்பீரமாக நின்றனர். மற்றொரு புறம் ஓரளவு படித்தும் உழைப்பை மட்டுமே தாரக மந்திரமாக உச்சரித்தப்படி ஒவ்வொரு நாளும் வியர்வையை லிட்டர் கணக்கில் சிந்திக்கொண்டிருக்கும் வர்க்கம். இந்த இருவருக்கும் இடையில் நின்றது பரிதாபத்திற்குரிய ஒரு வர்க்கம்.

ஆமாம். வாலிப இதயத்தில் கனவுகளை சுமக்க முடியாத அளவுக்கு சுமந்துக்கொண்டு உலவ வேண்டிய வயதில், பொய் வேசம் போட்டு ஏமாற்றும் ஏஜெண்டுகளை நம்பி எதிர்காலத்தையே தொலைத்துவிட்டு எண்ணெய் படியாத வறண்ட முடியுடன், துவைத்து போட்டு வேறு உடுப்பு வாங்கி உடுத்த முடியாத நிலையில் அழுக்கு சட்டையும், முழுகாற்சட்டையுமாக சாப்பாட்டுக்கு கூட வழித்தெரியாமல் தண்ணிரால் வயிற்றை நிரப்பிகொண்டு யாராவது வேலைக்கு அழைத்து செல்லமாட்டார்களா ?. குறிப்பிட்ட உயரத்தில் பறக்க தகுதியிருந்தும், மேலும் உயர பறக்கும் ஆசையினால் பிறந்தகத்தை விட்டு வந்தவர்கள்.

கலைந்த தலையுடன் ஆடை குலைந்து பைத்தியக்காரனைப் போல எலும்பும் தோலுமாக அவ்வளவு கூட்டங்களுக கிடையில் நின்றபடி தெரிந்தவர்களிடம் எல்லாம் அண்ணா வேலையிருக்குமா ? மாமா வேலையிருக்குமா ? பிச்சைக்காரனை போல கேட்டுக்கொண்டிருந்தான் அகத்தியன். அகத்தியன் மாயையைக் கண்டு மயங்கி மோசம் போனவர்களின் பட்டியலில் ஒருவன்.

ஏண்டா அகத்தி பரமீட்ல வந்துட்டு சட்டவிரோதமா தங்கியிருக்கிற என்கிட்ட வேலை கேட்டு கிண்டல் பண்றீயா ? வெடுக்கென்று கேட்டான் முத்து.

எங்கிட்ட பர்மீட்டே இல்ல அண்ணன். அழாத குறையாக பதிலளித்தான். தன் கஸ்டத்தை யாராவது புரிந்துக்கொண்டு ஆறுதல் கூறமாட்டார்களா மனது ஏங்கி தவித்தது. அப்புறம் எப்படிடா வேலைக்கு கூட்டிட்டு போறது. ஒண்ணு செய். ஒரு இருநூறு வெள்ளியை நம்ப ராசுக்கிட்ட கொடு, அவன் இரண்டு நாள்ல பர்மீட் கார்ட் வாங்கி தருவான். அதை வைத்து வேலைக்கு அழைச்சிட்டு போகலாமான்னு பார்க்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் நின்றால் செலவுக்கு ஏதாவது காசு கேட்பானோ பயந்தபடி நழுவிய முத்துவை நிறுத்தினான்.

ஏண்ணா... இங்கேயும் போன்கார்ட் மாதிரி பர்மீட் கார்ட்டும் விக்கிறாங்களா ? அவனையும் அறியாமல் கேட்டே விட்டான். அடப்பாவி...வாழ வழிக்காட்ட நனைச்சா எங்களையே கம்பி எண்ண வைச்சிடுவே போலிருக்கு. வெளியூறு எல்லாம் போயி என்னத்தை படிச்சி கிழிச்சியோ. வாத்தியார் பிள்ளை மக்குங்கறதை நிருபீச்சிட்டே. வரறேன்டாப்பா... உங்கூட நிற்கிற ஒவ்வொரு நிமிசமும் ஆபத்துதான். நண்பர்களுடன் ஏதோ சொல்லி சிரித்தபடி கூட்டத்தோடு கலந்து மறைந்தான்.

அகத்தியன் சிங்கப்பூர் வந்து முழுமையாக இரண்டு வாரங்களே ஆகியிருந்ததால் நிலவரம் சரியாக புரியவில்லை. சாங்கி ஏர்போட்ல ஏஷெண்ட் என்று சொல்லி வந்தவன் நூறு வெள்ளியை கொடுத்து தேக்காவில் வீடு பார்த்துக்கொள், நாளை தேக்காவில் உள்ள பெருமாள் கோயில்கிட்ட சந்திப்போம் நல்லவன் போல் தட்டிக்கொடுத்துட்டு பாஸ்போட்டோடு போனவன் போனவன்தான். திரும்பவேயில்லை. இளமை என்ற தேகத்தில் ஏற்றி வைத்த பொறுப்புகள் அவனை அழக்கூட தெம்பில்லாதவனாக ஆக்கியது. திக்கற்று நின்றவனின் புஷத்தில் கை விழவும் திடுக்கிட்டு திரும்பினான்.

டேய் ரவி....பேச நா எழாமல் அவன் தோளில் சாய்ந்து அழுதான். அகத்தியனை நிமிர்த்திய ரவி, நீ முத்துக்கிட்ட பேசினதெல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். நீ ஏண்டா சிங்கப்பூர் வந்தே..? நீ ஊருல வேலை பார்க்கிறா சொன்னாங்களே ?

ஆமாண்டா. ஆசை யாரை விட்டது சொல்லு. அப்பா இறந்த பிறகு வீட்டு பொறுப்புகள் எல்லாம் என் தலையில விழுந்துட்டு. குடும்பத்துல என்ன நடக்குதுன்னு தெரியாம புத்தகமும் கையுமாக இருந்த எனக்கு வாழ்க்கையே மாறிப்போன மாதிரி இருந்தது. நான் வேலைக்கு போகனுங்கிற கட்டாய சூழ்நிலை உருவான போது மேற்படிப்பை நிறுத்துற நிர்பந்தம் உருவானது. ஊர்ல கிடைக்கிற இரண்டாயிரம் சம்பளத்தை வைத்து எப்படி பொறியியல் கல்லூரியில இரண்டாம் ஆண்டு படிக்கிற என் தம்பியை தொடர்ந்து படிக்க வைக்க முடியும். கல்யாண நாளை எதிர்பார்த்துக்கிட்டு இருக்கிற தங்கையை எப்படி கரைசேர்க்கிறது. அதனாலதான் இங்கே வந்தேன். அப்பா தங்கச்சி கல்யாணத்துக்காக சேர்த்து வைச்சிருந்த மொத்த பணத்தையும் கொட்டி கொடுத்துட்டு வந்திருக்கேன்.

அகத்தி நீ வந்ததன் நோக்கம் நியாமானதுதான். நீ வர்றதுக்கு முன்னாடி என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் இல்ல, என்ற ரவியும் அகத்தியும் சிறுவயதிலிருந்து பள்ளி தோழர்கள். ரவி ஆறாம் வகுப்புக்கு மேல் போகவில்லை. பதினெட்டிலிருந்தே சிங்கப்பூர் வந்து சம்பாதிக்கிறான். படிப்பறிவு இல்லாவிட்டாலும் பட்டறிவு கைகொடுத்து உதவியது.

இருவரும் கூட்டத்திலிருந்து விலகி சாப்பாட்டு கடைக்கு சென்றனர். அகத்தியை அமர வைத்துவிட்டு ரவி இரண்டு தோசைக்கும், காபிக்கும் ஆர்டர் செய்துவிட்டு நண்பனின் அருகில் அமர்ந்தான்.

அகத்தி... அடுத்து என்ன செய்யலாம்னு இருக்கே ?

அது தெரிஞ்சா நாலு பேர் நக்கலா பேசுற அளவுக்கு பேச விட்டு வேடிக்கை பார்த்துட்டு இருப்பேனா..? என்னை நாலுபேர் அடிச்சி போட்டுட்டு பணத்தை பிடுங்கிட்டு போயிருந்தா கூட நான் இப்படி கவலைபட்டிருக்க மாட்டேன். என்கிட்ட நல்லவன் மாதிரி பேசி நடிச்சி... ச்சே... மனிதபறவியில இப்படியும் கேடுக்கெட்ட சென்மங்களா ? என் பணம் போனதைப்பற்றி வருத்தம்தான். ஆனாலும் என்னால சம்மாதிக்க முடியும்ங்கிற நம்பிக்கை இருக்கு.

என்னோட கவலையெல்லாம் அறிமுகம் இல்லாத நாட்டுல எல்லோர் முன்னிலையிலும் தலைகுனிந்து கூனி குறுகி நின்னதை பற்றிதான்.

நீ யார்கிட்ட பணம் கட்டி வந்தே ? தோசையை விழுங்கியபடி கேட்டான் ரவி.

நம்ப ஊர் புது பணக்காரன் வேலுச்சாமி மகன் துரைக்கிட்டதான். இங்கே வந்த பிறகுதான் தெரியுது அவன் என்னை மாதிரி உள்ளவங்ககிட்ட ஏமாற்றி பணத்தை பிடுங்கி போட்டுதான் புது பணக்காரனா திரிஞ்சிட்டு இருக்காங்கிற விசயம். ரவி... பரமீட் கார்ட் இங்கே எப்படிடா விற்கும் ? என்றான் அப்பாவியாக.

பணம் மொடை வர்றப்ப பர்மீட்ல இருக்கிற பசங்க பர்மீட் கார்ட்டை சட்ட விரோதமா இருக்கிறவங்ககிட்ட வித்துட்டு காணா போய்ட்டதா கம்பெனில சொல்லி வேற கார்ட் வாங்கிப்பாங்க.

ரவி... எனக்கு ஒண்ணு வாங்கி தந்து வேலைக்கு கூட்டிட்டு போடா. தொலைச்ச பணத்தை தேடிக்கிட்டு ஊருக்கு போய்றேன்.


அகத்தி... உனக்கு அட்டை வாங்கி தர்றதிதோ வேலைக்கு கூட்டிட்டு போறதோ எனக்கு பெரிய விசயமே கிடையாது. தயங்கயவனை அப்புறம் என்னடா ?....என்றான் அகத்தி.

இங்கே உள்ள சட்ட திட்டங்கள் ரொம்ப கடுமையானது. சட்ட விரோதமா தங்கியிருக்கவுங்கல காவலர்கள் பிடிச்சிட்டா ரோத்தான் அடியும், சிறை தண்டனையும் கிடைக்கும். அதான் யோசிக்கிறேன்.

மனசுல விழுந்த அடியையே தாங்கிட்டேன். உடம்புல வாங்க போற அடிக்காக இப்ப ஏன் கவலைப்படனும். என் குடும்ப சந்தோசத்துக்காக எதையும் இழக்க தயாராயிருக்கேன். சரி துரையை என்ன பண்ண போறே ? என்றபடி கடையிலிருந்து வெளியே வந்தான் ரவி.

நான் ஊருக்கு போறவரை கடவுள் ஏதும் செய்யாமல் விட்டு வைச்சிருந்நா, அவனோட சொத்துக்கு நான்தான் எமன். படிச்சவன்கிட்டயே அவன் பாமர புத்தியை காட்டினதுக்கு சரியான பாடம் கத்துக்கொடுக்காம விடமாட்டன், என்றவனை தன்னோடு சேர்த்து தன்னோட அழைத்துச் சென்றான் ரவி.

இரண்டு நாள்கள் கழித்து ரவி அகத்தியனை வேலைக்கு நண்பர்களோடு அனுப்பி வைத்தான். தன் ஓட்டு மொத்த கனவுகளையும் சிதறடித்து திருடனைப்போல தலைமறைவாகி பயந்து பயந்து சிமெண்ட் குலைத்த போது உயிரே நின்று விடும் போலிருந்தது. தன் தந்தை பிள்ளைகளுக்கா சேர்த்து வைத்த ஒரே சொத்து கல்விச்செல்வம்தான். அதைக்கூடமுறையாக பயன்படுத்த முடியாத தன் தலைவிதியை நினைத்தபோது இருதயமே எகிறியது. தான் இளநிலை இயற்பியலில் கோல்ட் மெடல் வாங்கிய போது, என் பிள்ளை வருங்காலத்துல பெரிய ஆளா வருவான்னு அம்மாகிட்ட சொல்லி அடைந்த ஆனந்தத்தை நினைத்தபோது வழிந்த கண்ணீர் கலவையோடு கரைந்து.





சிறுகதை

- சுஜாதா சோமசுந்தரம், சிங்கப்பூர்

பாகம் - 2

26



# வலிகாமம் இருந்து வன்னி வரை

- கவிஞர் நாவண்ணன்

அக்கா காலமானதற்குப் போய்வந்த பிறகு நான் வீட்டுப்பக்கம் போகவே இல்லை. ஏற்கனவே நோயாளியான என் அம்மா? சின்னத் தங்கச்சி இவர்கள் எல்லாரும் என்னபாடோ, எங்கு போனார்களோ, என்ன செய்கிறார்களோ?

என்னுடன் போராளிகளின் உறவினர்கள் சிலர் வலிகாமத்தில் இருந்து பருத்தித்துறைக்கு வந்திருக்கின்றனர். அவர்கள் சொல்லிய தகவலின்படி யாழ்ப்பாணத்திலிருந்து எல்லோருமே வெளியேறிவிட்டனராம். என்வீட்டுக்காரர்கள் எங்கே போயிருப்பார்கள்?

நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தபடி மேலிடத்திலிருந்து எமக்கு பணிப்பு வந்தது. நாம் எமது முகாமைக் காலி செய்து புறப்படத் தயாரானோம். தளபாடங்கள் எல்லாம் வாகனத்தில் ஏற்றப்பட்டன. எங்கள் பொறுப்பாளர் மாவீரர்களின் உருவப்படங்கள் அடங்கிய பெட்டியை எங்கள் ஐந்து பேரிடமும் தந்து மிகப் பத்திரமாக வன்னிக்குக் கொண்டுவரும்படி சொல்லிச் சென்றார்.

எல்லா ஒழுங்குகளையும் செய்து நாம் புறப்படும்போது நேரம் மாலை ஆகிவிட்டது. நாம் சென்ற வாகனத்துக்கு முன் விளக்குகள் இல்லை. அதன் சாரதி முன்னுக்கு இருந்த எம்மிடம் மின்பொறி விளக்கு ஒன்றைத் தந்து வாகனத்துக்கு முன்னே வெளிச்சம் விழும் வகையில் பிடித்துக்கொள்ளும்படி சொன்னார். அந்த வெளிச்சத்துட

என்று அவர்கள் நினைத்துக்கொள்ளுவார்கள். ஆனால் குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல் அவதிப்படும் எங்கள் நிலையை அவர்கள் எப்படி உணர்ந்துகொள்வார்கள்.

நீண்ட நேரத்தின் பின்னர், தண்ணீருக்குப் போனவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அண்ணாமார் (ஆண்போராளிகள்)ன் முகாம் ஒன்றுக்குச் சென்று எங்கள் நிலையைச் சொல்லவே அவர்கள் ஏதோ பானம் கரைத்துக்கொடுத்திருக்கின்றார்கள். தாமும் குடித்துவிட்டு ஒரு போத்தலில் எனக்கும் கொண்டுவந்திருந்தனர். இவர்கள் போகும் வழியில் சிறுபிள்ளையொன்றின் சடலம் அனாதரவாகக் கிடப்பதைக் கண்டனராம். எனவே அந்தத் தகவலை அண்ணாமாருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.

யாரோ கிளாலிக் கடல் தாண்டிச் செல்லவந்தவர்களின் பிள்ளைபோலும், அது நோயின் காரணத்தால் இறந்திருக்க வேண்டும். படகில் ஏற்றிக்கொண்டு செல்லவும் முடியாது. படகைத் தவற விடவும் முடியாது என்ற நிலையில் ஒதுக்குப்புறமாக ஒரு இடத்தில் சடலத்தைப் போட்டுவிட்டுப் போயிருக்கின்றார்கள் போலும். பிணத்தைப் பார்க்கும்போது அந்தப் பிள்ளை இறந்து குறைந்தது ஒருநாளுக்கு மேல் இருக்கும் என்று தோன்றியது. எது எவ்வாறாயினும் அது மனிதச் சடலம். அப்படியே விட்டுச் சென்றால் நாய்கள் குதறி சின்னாபின்னப்படுத்திவிடும். அப்படி ஒரு நிலைமை வராதிருப்பதற்காக அண்ணாமாரின் உதவியு

படகினுக்குள்ளே இருந்த மில்லர் அப்பாவின் குழந்தை தண்ணீர்த் தாகத்தால் வீரிட்டு அழுதுகொண்டிருந்தது. நடுக்கடலிலே நல்ல தண்ணீருக்கு எங்கே போவது. எமது படகிலே மருத்துவப் பிரிவைச் சேர்ந்த போராளிகளும் பயணம்செய்துகொண்டிருந்தனர். அந்தக் குழந்தையின் பரிதாபத்தைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாதவராக தமது பொதிகளில் ஒன்றை அவிழ்த்து அதனுள் இருந்த `சேலேன்' போத்தலை எடுத்தார். அதன் முனையை நறுக்கி போச்சிபோன்று அதனைப் பருக்கும்படி கொடுத்தார்.

னேயே நாம் கிளாலிவரை வந்துசேர்ந்தோம்.

நாம் வந்து சேர்ந்த இடம் பொதுமக்கள் பயணிக்கும் இடமல்ல. பெரும்பாலும் போராளிகள் தமது பொருள்களை ஏற்றி இறக்கும்துறை. அந்த இடத்தில் ஏதும் கடையோ, பொதுமக்களின் வீடுகளோ தானும் இல்லை.

நேரம் இரவாகிவிட்டது. ஒருபகுதி சாமான்களும் போராளிகளும் ஒரு படகில் ஏற்றி அனுப்பப்பட்டனர். நாங்கள் ஐந்து பேர் மட்டும், எங்கள் சொந்த உடுப்புப் பைகளுடனும் நின்றோம். கூடவே மில்லர் அப்பா என்றழைக்கப்படும் இயக்க ஆதரவாளர் ஒருவரின் குடும்பம். அவருக்கு நான்கு பிள்ளைகள் அவர்களில் கடைக்குட்டி ஆகச் சின்னன்.

விடிந்துவிட்டது. நாம் படகேற வந்துநின்ற பகுதி வனாந்திரம் போலிருந்தது. முதல்நாள் பகல் சாப்பிட்டது. மறுநாள் பகல்வரை எதுவும் சாப்பிடவோ குடிக்கவோ இல்லை. எதிரே கடல் இருந்தும்கூட எங்கள் தாகம் தீர்க்க தண்ணீர் இன்றி நாவறண்டது.

என்னை பொருட்களுக்கு காவலாக நிற்கும்படி கூறிவிட்டு, ஏனைய நான்குபேரும் தண்ணீர் தேடிப் புறப்பட்டனர். படகு ஏறுவதற்காக வேறு சனமும் வந்து சேர்ந்தது. அந்தவேளையில், சுடுபடை உலங்கு வானூர்தி ஒன்று கரைப்பக்கமாகத் தாழப் பறந்துவந்தது. கரையிலே நின்ற மக்கள் அச்சம் பீடித்த நிலையில் என்ன நடக்குமோ என்று தெரியாது கூச்சலிட்டனர். தெய்வச் செயல்போலும், வானூர்தி எதுவித துன்பமும் கொடுக்காது போயிற்று.

தண்ணீர் கொண்டுவரப்போனவர்கள் நீண்ட நேரமாகியும் வரவில்லை. எனக்கோ பசியும் தண்ணீர்த்தாகமும். இந்த வேளையில் பொதுமக்களின் மனோ நிலையைப் பற்றி சிந்தித்துக் கொண்டேன். போராளிகள் எங்களை வெளியேறும்படி கூறிவிட்டு தாம் வசதியாகத் தப்பித்து வெளியேறிவிட்டார்கள். நாம்தான் கஸ்டப்படுகின்றோம்

டன் அந்தப் பிணத்தை அடக்கம் செய்து விட்டு வந்திருந்தனர்.

அந்த நாளில் தமிழகத்தில் இருந்து மலையகத்துக்கு தோட்டவேலை செய்யவென ஆள்க்கட்டி வந்தபோது தலைமன்னார் துறையில் இருந்து காட்டுப் பாதை வழியாக கண்டிக்கு அழைத்துச் செல்வார்களாம். நடுக்காட்டிலே மலேரியாவால், கொள்ளை நோயால் அவர்களில் சிலர் இறந்துபோக இப்படித்தான் அவர்களை அநாதைப் பிணங்களாக விட்டு உறவினர்கள் தரகர்களுடன் தமது பயணத்தைத் தொடர்வார்களாம். இன்னும் பலபேரை நோய் பீடித்து நடக்கமுடியாத நிலையிலே பக்கத்திலே ஒரு சிரட்டை தண்ணீரை மட்டும் வைத்துவிட்டு அவர்கள் செல்லவும் நோயாளி இறந்தபின்னர். அல்லது அரைகுறையாக உயிருடன் இருக்கும்போதே காட்டு மிருகங்கள் அவர்களைக் கடித்துக் குதறித்தின்னுமாம். இப்படி ஒரு நிலைமை இன்று எம்மக்களுக்கும் வந்துவிட்டதே என எண்ணிப்பார்க்க வேதனையாக இருந்தது.

மாலையானபோது எங்களுக்குப் படகு வந்தது. வரும் படகுகள் நீண்ட நேரம் தரித்து நிற்பது கிடையாது. உடனடியாக பொருட்களையும், ஆட்களையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுவிடும்.

படகு வந்ததும் பொருட்கள் ஏற்றப்பட்டன. நாமும், மில்லர் அப்பா குடும்பமும் ஏறிவிட்டோம். அங்கு நின்ற பெண் ஒருவரும் தனது பொருட்களை ஏற்றிவிட்டு தன்னுடைய ஆட்கள் வரவேண்டும் அதுவரையில் படகை நகர்த்த வேண்டாம் என்று தடுத்துக்கொண்டு நின்றார். நேரம் போய்க்கொண்டிருந்தது. படகில் வந்தவர்கள் தாம் தாமதிக்க முடியாது. விரும்பினால் அவரையும் பொருட்களையும் படகில் வரும்படியும், மற்றவர்கள் அடுத்த படகில் வரட்டும் என்றும் சொல்லிப்பார்த்தனர். அதற்கும் அவர் சம்மதிக்கவில்லை. அவரைச் சேர்ந்தவர்களும் வந்து சேர்ந்த பாடாயில்லை. இறுதியிலே அவரது பொருட்களை இறக்கிக் கரையில் வைத்துவிட்டு அடுத்த படகில் வரும்படிகூறிப் புறப்பட்டனர். இதனால் கோபம் கொண்ட அந்தப் பெண் கரையிலே நின்றபடி `உங்களுக்கு கால் இல்லாமல் போக, கையில்லாமல்போக' என்று மண்ணள்ளித் திட்டிக்கொண்டிருந்தார். எதையும் கவனிக்காது எமது படகு நீரைக்கிழித்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தது.

படகினுக்குள்ளே இருந்த மில்லர் அப்பாவின் குழந்தை தண்ணீர்த் தாகத்தால் வீரிட்டு அழுதுகொண்டிருந்தது. நடுக்கடலிலே நல்ல தண்ணீருக்கு எங்கே போவது. எமது படகிலே மருத்துவப் பிரிவைச் சேர்ந்த போராளிகளும் பயணம்செய்துகொண்டிருந்தனர். அந்தக் குழந்தையின் பரிதாபத்தைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாதவராக தமது பொதிகளில் ஒன்றை அவிழ்த்து அதனுள் இருந்த `சேலேன்' போத்தலை எடுத்தார். அதன் முனையை நறுக்கி போச்சிபோன்று அதனைப் பருக்கும்படி கொடுத்தார்.

அந்தக் குழந்தை மிகவும் தவிப்போடு `அவக் அவக்' கென்று குடித்தது. அந்தக் காட்சியே பரிதாபகரமானதாகவும், எங்கள் நெஞ்சுகளை நெகிழவைப்பதாகவும் இருந்தது.

மறுநாள் காலை ஆலங்கேணிக் கரையை வந்தடைந்துவிட்டோம். குஞ்சுப் பரந்தன் வரை உழவு இயந்திரம் ஒன்று போவதாகச் சொன்னார்கள். எனவே நாமும் அதில் ஏறிப்புறப்பட்டோம். நாங்கள் வந்திறங்கிய இடமோ செல்லுகின்ற வழியோ மக்கள் நடமாட்டம் குறைந்தபகுதி. அதுமட்டுமன்று பொழுதும் சரியாகப் புலரவில்லை. குஞ்சுப்பரந்தனில் இறங்கிய எமக்கு திக்குத் திசை எதுவும் தெரியவில்லை. ஒருசில வீடுகள் இருப்பது தெரிந்தாலும் அந்த நேரத்தில் போய் எழுப்பி தாகத்துக்குத் தண்ணீர் கூடக் கேட்கமுடியவில்லை.

நாம் இறங்கிய இடத்துக்கு அண்மையில் ஒரு வெண்காயக்கொட்டில் ஒன்று தெரிந்தது. அந்தக் கொட்டிலுக்குள் சென்று நாம் ஐவரும் பொழுதுவிடியும்வரை முடங்கிக் கொண்டோம். நாம் அணிந்திருந்த உடைகள் கடலில் இறங்கி படகு தள்ளிய காரணத்தால் நனைந்து காய்ந்தும் காயாதநிலையில் உப்புப் படிந்து மடமடத்துக்கொண்டிருந்தது. பசியும், தாகமும் தீர்ந்தபாடில்லை. தூங்கியும் தூங்காத நிலையில் அன்றைய இரவு விடிந்தது. நாம் எல்லோரும் விழித்துக்கொண்ட பின்னரும் எழுந்து உண்ட உணவுக்கு பின்னர் சாப்பாடு என்று எதையும் உட்கொள்ளவில்லை. முதல் நான் குடித்த பானம் மட்டும். அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தபோது அந்தப்பக்கம் ஒரு அம்மா வந்தார். நாம் இருந்த நிலைமையைப் புரிந்துகொண்டு எம்மைப்பற்றி முழுமையாக அறிந்துகொண்டார்.

(தொடரும்)




விசேட விலைக் கழிவு


RHYTHM

Website
rhythmentertainment.com

Tamil, English, Hindi Movies for Sale
Tamil, English, Hindi Movies for Rent
Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

Telephone Cards
Party Shop
Video Filming
Photography




# கதை முற்றம்

## நாயினால் கடிபட்ட மனிதன்

நாயினால் கடிபட்ட மனிதன் தன்னைக் குணப்படுத்தக்கூடிய ஒருவரைத் தேடி அலைந்தான். ``என்னுடைய காயம் குணமடைய வேண்டுமானால் ஒரு துண்டு றொட்டியை நீ எடுத்து எனது காயத்திலுள்ள ரத்தத்தில் தோய்த்து, அந்த றொட்டித் துண்டை என்னைக் கடித்த நாய்க்கு நீ கொடுக்க வேண்டும்" என்று அவனைச் சந்தித்த ஒருவன் கூறினான்.

``உனது ஆலோசனையை நான் கடைப்பிடித்தால் இந்த நகரத்திலுள்ள எல்லா நாய்களினாலும் நான் கடிபட வேண்டும்" என்று சிரித்துக் கொண்டே கூறினான் நாயினால் கடிபட்டவன்.

## சந்தேகம்

தனது கோடரியைத் தொலைத்துவிட்டான் ஒரவன். தனது அயலவனுடைய மகன் தான் அதைத் திருடியிருக்க வேண்டுமென்று அவன் சந்தேகப்பட்டான்.

அந்தச் சிறுவனுடைய நடையை அதாவது அவனது நடமாட்டத்தை அவன் உன்னிப்பாக அவதானித்தான். ஒரு திருடனுடைய நடையை ஒத்திருக்கின்றது சிறுவனுடைய நடை என்று எண்ணினான்.


சிறுவன் கதைக்கின்ற விதத்தை அவன் கவனித்தான். நிச்சயமாக, திருடன் கதைப்பதைப் போலத்தான் இவன் கதைக்கின்றான் என்ற முடிவிற்கு வருகின்றான்.

சுருங்கச் சொன்னால் அச்சிறுவனுடைய நடை, உடை, பாவனைகள், நடவடிக்கைகள் அனைத்தும் அவன் திருட்டுக் குற்றம் புரிந்ததை அம்மனிதனுக்குப் புலப் படுகின்றன.

சில நாட்களின் பின் கோடரியைத் திருட்டுக் கொடுத்த மனிதன் நிலத்தைத் தோண்டிக் கொண்டிருக்கையில் தனது கோடரியைக் கண்டெடுத்தான்.

அதன் பின் அவன் அயலவனுடைய மகனை அவதானித்தபொழுது, அவனுடைய நடை, உடை, பாவனைகள் எல்லாம் திருடனுடையவற்றைப் போன்றிருக்கவில்லை என்பதை கண்டு கொண்டான்.

# தகவல் முற்றம்



● விளையாட்டு மூலமாக உலக மக்களிடம் அமைதியையும் நட்புறவையும் ஏற்படுத்துவதுதான் ஒலிம்பிக்ஸின் நோக்கம். பல கோடி ரூபாய் செலவில், பல்லாயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் ஒலிம்பிக்ஸ் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடக்கிறது.

● முதன் முதலில் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடந்தது எப்போது தெரியுமா? கி.மு. 776. நம் ஊரில் சாமிக்கு திருவிழா வைக்கிறோமே.. அதே போல ஒலிம்பிக்ஸ் விளையாட்டு, ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது! ஒலிம்பிக்ஸ் நடக்கிற நாட்களில் போர்களைக்கூட நிறுத்தி வைக்கும் அளவுக்கு விளையாட்டுப் போட்டிகள் மீது கிரேக்கர்கள் மரியாதை வைத்திருந்தனர்.

● ஓட்டப்பந்தயம் மட்டும்தான் முதலில் நடந்தது. ஈட்டி எறிதல், டிஸ்கஸ் த்ரோ, நீளம்தாண்டுதல்... என்று ஒவ்வொன்றாகச் சோர்க்கப்கட்டு மொத்தம் 28 விளையாட்டுக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

● ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து நடந்த ஒலிம்பிக்குக்கு பைஸான்டைன் பேரரசரான தியோடோசியஸ் தடைவிதித்தார். அவருக்கு ஏதோ விளையாட்டு மீது வெறுப்பு, மக்களும் விளையாட்டு வீரர்களும் நொந்து போனார்கள். ஆனால், 1896-ல் பிரான்ஸ் நாட்டைச்சோர்ந்த கூபர்டின் ஒலிம்பிக்குக்குப் புத்துயிர் கொடுத்தார். மொடர்ன் ஒலிம்பிக்ஸ் முதல் முதலில் நடைபெற்றதும் ஏதென்ஸ் நகரத்தில் தான்!

● ஒலிம்பிக்ஸ் என்ற உலகத்திருவிழாவைச் சிறப்புற நடத்த சர்வதேச ஒலிம்பிக் கமிட் உருவாக்கப் பட்டது. போட்டிகளை எங்கு? எப்போது நடத்துவது? தகுதியுடைய விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி? என்பது உட்பட எல்லாவற்றுக்கும் இந்த கமிட்டியே பொறுப்பு. ஒலிம்பிக்ஸில் பங்கு பெறும் அனைத்து நாடுகளிலும் தேசிய ஒலிம்பிக் கமிட்டி செயல் படும்.

—ஜெயராணி

தொடர்ச்சி அடுத்த இதழில்...

# அறிஞர் முற்றம்




## வீரமா முனிவர்

எந்த ஒரு மொழியும் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு மாறவும் வளரவும் வளம் பெறவும் வேண்டும். தமிழைத் தற்காலத் தேவைக்கு ஏற்ப உருவாக்கிய முன்னோடிகளில் வீரமாமுனிவர் முதல் வரிசையில் இருக்கிறார்.

### இத்தாலி நாட்டில்:

வீரமாமுனிவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசஃப் பெஸ்கி என்பதாகும். இத்தாலி நாட்டில், வெனிஸ் பகுதியில், காஸ்டி கிளியோன் எனும் ஊரில் 1680 நவம்பர் 11 இல் பிறந்தார். அவருடைய தந்தை கண்டால்ஃபோ பெஸ்கி, தாய் எலிசபெத் அவருக்கு 18 வயது ஆனவுடன் யேசு சபையில் சேர்ந்தார். 20 ஆம் வயதில் ரவினா நகரில் இலக்கண ஆசிரியர், மூன்றாண்டுகள் கழித்து பொலோனா நகரில் ஆசிரியப் பணி ஏற்றார். பின்பு கிறித்துவ சமய நூல்களைச் கற்று மதகுரு எனும் தகுதி பெற்றார்.

### தமிழ்நாட்டிற்கு:

அவருடைய 30 —ஆம் வயதில் கான்ஸ்டன் டைன் ஜோசஃப் பெஸ்கி, தமிழ் நாட்டிற்குச் சமயப் பணிக்கு அனுப்பப்பெற்றார். போர்த்துக்கல் நாடு சென்று, அங்குள்ள லிஸ்பன் துறைமுகத்திலிருந்து 1710—இல் புறப்பட்டார். இந்தியாவில் போர்த்துக்கலின் குடியேற்றப் பகுதியான கோவாவிற்கு வந்து, அங்கு ஒருமாத காலம் சமயப் போதனைப் பள்ளியில் பயிற்சி பெற்றார்.

சமயப் பணிக்காகக் கிறித்துவர்கள் நிலத்தைப் பகுதிகளாகப் பிரித்தார்கள். அவற்றிற்கு மறை மாவட்டங்கள் எனப் பெயர். பெஸ்கி, மதுரை மறை மாவட்டத்தில் முதலில் பணியேற்றார். அந்தப் பகுதி திருநெல்வேலியைக் கூட உள்ளடக்கியிருந்தது. முதலில் காமநாய்க்கன்பட்டியிலும், பின்பு கயத்தாற்றுப் பாளையத்தருகில் இருந்த குருக்கள் பட்டியிலும் சமயத் தொண்டாற்றினார்.

தமிழ்நாட்டிற்கு வந்த பின்பு தன்னுடைய நடை, உடை, பாவனைகளையும், உண்ணல், உடுத்தல் ஆகியவற்றையும் இங்குள்ள குருக்களைப்போல் ஆக்கிக்கொண்டார். தம்முடைய பெயரை முதலில் தைரிய நாதர் என்றும், பின்பு வீரமாமுனிவர் என்றும் மாற்றிக்கொண்டார். தமிழை முறையாகக் கற்றார்.

வீரமாமுனிவர் காலத்தில் சுப்ரதிபக் கவிராயர் இருந்தார். அவர், `கூளப்பநாயக்கன் காதல்' எனும் நூலை இயற்றியவர். அவரிடம் வீரமாமுனிவர் தமிழை முறையாகக் கற்றார். அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களையும், தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் எனும் இலக்கணங்களையும் கற்றார். தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்பே லத்தின், கிரேக்கம், எபிரோயம் (ஹிப்ரு), இத்தாலி, பிரெஞ்சு, போர்த்துக்கீசு ஆகிய மொழிகளைக் கற்றிருந்தார். தென்னாடு வந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டார். இத்தனை மொழிகளுக்கும் மேலாகத் தமிழில் நல்ல புலமையைப் பெற்றார்.

### ஊர்கள் பல:

காமநாய்க்கன்பட்டி, குருக்கள் பட்டி, மதுரை ஆகிய ஊர்களில் சமய ஊழியம் செய்த வீரமாமுனிவர், வேறு ஊர்களிலும் தங்கிப் பணியாற்றினார். தஞ்சைக்கு 20 கி.மீ. தொலைவில் உள்ள கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் ஏலாக் குறிச்சியை ஒட்டித் திருக்காவலூர் இருக்கிறது. அங்கிருந்த ஆலையத்தின் அன்னை மேரிக்கு அடைக்கலமாதா எனப் பெயரிட்டு, அதைப் பெரிதாகக் கட்டினார். முதுகுன்றம் எனும் விருத்தாசலத்திற்கு அருகில் கோனான்குப்பம் இருக்கிறது. அங்குள்ள ஆலயத்தின் அம்மனுக்கு பெரியநாயகி எனப் பெயர். அங்கிருந்த பொழுது `தேம்பாவணி' எனும் காவியத்தை இயற்றினார். திருச்சிராப்பள்ளி, மணப்பாறைக்கு அருகில் ஆவூரில் வீரமாமுனிவர் பணியாற்றிய பொழுது, கிராம மக்களை முகமதியக் குறுநில மன்னனின் படைகள் துன்புறுத்தின. படைத் தலைவனை நேரில் கண்டு அத்துன்பத்தை நீக்கினார். அங்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த சந்தாசாகிப் என்பவருடன் சுமார் ஒன்பது ஆண்டுகள் (1732—40) நல்ல உறவு வைத்திருந்தார். அப்பொழுது பாரசீகம், இந்துஸ்தானி ஆகிய மொழிகளைக் கற்றார். வீரமாமுனிவரின் உயர்ந்த ஒழுக்கத்தைக் கண்ட சந்தாசாகிப், அவருக்கு இஸ்மாஸ்தி சன்னியாசி (தூயதுறவி) எனும் பட்டம் தந்தார்.

### தமிழ்ப் பணி:

சமயப் பணியைச் செய்து வந்த வீரமாமுனிவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்ற பின்பு, தமிழ் மொழியை வளப்படுத்துவதை ஓர் இனிய கடமையாகச் செய்தார். செய்யுள், மற்றும் உரைநடையில் எழுதினார். மூன்று காண்டங்கள், 36 படலங்கள், 3615 செய்யுட்களைக் கொண்ட `தேம்பாவணி' எனும் காவியத்தை இயற்றினார். யேசு நாதரின் தந்தை சூசையப்பர் அதற்குப் பாட்டுடைத் தலைவர், வள்ளுவர், சீவகசிந்தாமணி, கம்பர் முதலிய பழந்தமிழ் இலக்கியங்களை அவர் ஆழ்ந்து கற்றதற்கு அடையாளமாக, அவற்றின் சொல்லும் பொருளும் `தேம்பாவணி' யில் கையாளப்படுகின்றன.

திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கருணாம்பரப் பதிகம் ஆகிய கிறித்துவர் நம்பிக்கை சார்ந்த கவிதை நூல்கள் செய்தார். இவையல்லாமல், தமிழ் இலக்கியச் செய்யுட்களைத் தேர்ந்து எடுத்து, `தமிழ்ச் செய்யுள் தொகை' ஒன்றைத் தொகுத்தார்.

`பரமார்த்த குரு கதை' எனும் நகைச்சுவை மிகுந்த நீதி நூல் ஒன்றை உரைநடையில் எழுதிப் புகழ்பெற்றார்.

`தொன்னூல்' எனும் இலக்கண நூலை வீரமாமுனிவர் இயற்றினார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐவகை இலக்கணங்களை அதில் நூற்பாக்களாகத் தருகிறார். அதற்கு உரையும் எழுதியுள்ளார்.

இன்றுள்ள தமிழ் அகராதிகளுக்கு முன்னோடியாக, `சதுர் அகராதி' யைத் தொகுத்தார். சதுர் என்றால் நான்கு. பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்கு பிரிவுகள் அதில் உள்ளன. மேலும், தமிழ்—லத்தின் அகராதி, தமிழ்—போர்த்துக்கீசிய அகராதி ஆகியவற்றையும் ஆக்கினார்.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை லத்தின் மொழியில் மொழி பெயர்த்து அதன் அருமையை அய்ரோப்பியர் உணரச் செய்தார்.

நவீன காலத்தில், தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்த முன்னோடியாகவும் வீரமாமுனிவர் திகழ்கிறார். ஏகாரம், ஓகாரம் ஆகியவை மெய்யெழுத்துடன் வரும் பொழுது நாம் பயன்படுத்தும் இரட்டைக்கொம்பு (ே) குறியீட்டை அவர்தான் அறிமுகப்படுத்தினார்.

வீரமாமுனிவர் 1747 பெப்ரவரி 4 இல் இயற்கை எய்தினார். அவர் ஆற்றிய அரும்பெரும் மொழிப்பணியால் தமிழர் வரலாற்றில் நீங்கா இடம்பெற்றுள்ளார்.

சக்தி
NALLUR TRADERS
நல்லூர் றேடர்ஸ்
CASH & CARRY
இலங்கை - இந்திய - மளிகைப் பொருட்கள்
193, Rue Fbg. St. Denis, 75010 Paris
Tél : 01 46 07 68 17
M° - RER : Gare du Nord / La Chapelle
Bus : 350, 302, 65, 48

# “தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்”

“தமிழர்களின் பொருண்மியம் பொருளாதார வல்லமையினை வலுப்படுத்த வேண்டும் என்று தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையில் உருவானதே தமிழீழ வைப்பகம். அது தமிழரின் சொத்து என்ற பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

பதினோராவது ஆண்டில் வெற்றி நடை போடும் தமிழீழ வைப்பகத்தின் மேலாண்மைப் பணிப்பாளர் மா. வீரத்தேவன் அவர்கள் ஈழமுரசுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி” :

**கேள்வி:-** *ஆயுதப் போராட்டம் நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழ வைப்பகத்தை உருவாக்கியதன் நோக்கம் யாது?*

**பதில்:-** எமது அமைப்பு இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அமைப்பு, அதனோடு இணைந்து தமிழர்களின் பொருண்மியத்தையும் மேம்படுத்தும் வகையில் தமிழீழ வைப்பகம் உருவாக்கப் பட்டது.

எமது தேசியத்தலைவர் நீண்ட காலமாகவே தமிழர்களின் பொருளாதார வல் ல மை யி னை மேம் படுத்த வேண்டும் என்ற எண்ணக்கருவைக் கொண்டிருந்தார். அதன்விளைவே தமிழீழ வைப்பகத்தின் உருவாக்கம்.

உலக அரசியலின் இன்று தீர்மானிக்கும் வலுவைப் பன்னாட்டு வைப்பகங்கள் கொண்டுள்ளன. அதன் அடிப் படையில் தமிழீழ வைப்பகத்தை உருவாக்கும் மூல விசையில் நன்றாகத் தமிழீழ வைப்பகம் தமிழர் தேசத்திற்கு என உருவாக்கப்பட்டது.

தமிழீழ மக்களின் நிதித் திரட்சியை மேலும் வலுப்படுத்துவதனை மையமாகக் கொண்டு தமிழீழ வைப்பகம் தனது இலக்கில் நகர்கின்றது.

**கேள்வி:-** *தமிழீழ வைப்பகம் எவ்வாறான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது?*

**பதில்:-** தமிழ் மக்களைப் பொறுத்தவரை நெடுங்கால மாகவே சேமிப்பு, சிக்கனம் என்பன அவர்களின் குணாம் சங்களாக இருந்து வருகின்றன. அத்தகைய பண்புகளுக் கூடாக நிறுவனமயப்படுத்தப்பட்ட சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் தமிழீழத்தின் முதலீட்டுத் துறையினையும் மேம்படுத்தக் கூடிய கடன் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றோம்.

1. வளர்ந்தோர் தேட்ட வைப்புத் திட்டம்
2. சாதாரண நிலையான வைப்புத்திட்டம்
3. வெளிவரவு நிலையான வைப்புத் திட்டம்
4. சிறார் உண்டியல் தேட்ட வைப்புத் திட்டம்
5. ஊற்றுக்கண் பெண்கள் தேட்ட வைப்புத் திட்டம்
6. ஊற்றுக்கண் தேட்ட சான்றிதழ் திட்டம்
7. அமுதம் சிறார் தேட்டத்திட்டம்

8.3 ‘தாயக ஒளி’ வதியாதோர் நிலையான வைப்புத் திட்டம்

கடன் திட்டங்கள்

நகையடைவுக் கடன் திட்டம்
வாணிபக் கடன் திட்டம்
மேம்பாட்டுக் கடன் திட்டம்
சுழற்சி முறையிலான வாணிபக் கடன் திட்டம்
சுயதொழில் முயற்சிக் கடன் திட்டம்
சமூகப் பொருண்மிய மேம்பாட்டுக் கடன் திட்டம்
கதிரொளி மின்னாக்கத் தொகுதிக் கடன் திட்டம்
என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

**கேள்வி:-** *தமிழீழ வைப்பகத்தின் ஊடாக சமூக வளர்ச்சிக்கு எவ்வாறான பங்களிப்பினைத் தாங்கள் ஆற்றி வருகின்றீர்கள்?*

**பதில்:-** சமூக மேம்பாடு கருதி தமிழீழ வைப்பகத் தினால் காலத்திற்குக் காலம் பல்வேறு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாகத் தன் தொழில் வேலை வாய்ப்புக்கள், கடன் திட்டங்கள் உழு பொறிகளைக் கடனாக வழங்கும் திட்டம், தையல் இயந்திரங்களை உழைப்பாளர்களை இழந்த பெண் களுக்குக் கடனாக வழங்கும் திட்டம் என்பவற்றின் ஊடாக சமூக மேம்பாட்டில் தமிழீழ வைப்பகம் தனது பங்கைச் சிறப்பாக ஆற்றி வருகின்றது.

போர் அனர்த்தங்களினால் தாயகப் பிரதேசத்தில் சமூகக் கட்டமைப்புக்கள் மிகவும் ஒன்று அத்தகைய சமூகத் தேவைகளைக் கருத்தில் கொண்டே மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும், பொருளாதார நிலைமையினையும் மேம்படுத்த நாம் திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகின்றோம்.

**கேள்வி:-** *யுத்தச் சூழலில் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ வைப்பகத்தின் நம்பகத்தன்மை மக்கள் மத்தியில் எவ்வாறு உள்ளது?*

**பதில்:-** எந்தவொரு தேசத்தைப் பொறுத்த வரையிலும் அங்குள்ள வங்கிகளின் உ ள் ள வாடிக்கையாளரின் வைப்புக்களுக்கு அந்த நாட்டு அரசே உத்தரவாதம் அளிக்கின்றது. அது போலவே தமிழீழ வைப்பகத்தின் வழமைதாரர்களுக் குரிய வைப்புக்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் முழுமையான உத்தரவாதம் அளிக்கப்படுகி ன்றது.

அத்துடன் வைப்பக பணியாளரது கடின உழைப்பினால் வழமையாளர்கள் மத்தியிலும் தமிழீழ வைப்பகத்தின் நம்பி க்கைத் தன்மை நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றது. என்றுமே தமிழீழ போராட்டத்தின் வலுவான சக்தியாக எமது மக்கள் விளங்குகின்றனர். வைப்பகத்தின் 6 கிளைகள் மூலம் நாற்பது

**– தமிழீழ வைப்பகத்தின் மேலாண்மைப் பணிப்பாளர் ம. வீரத்தேவன் ஈழமுரசு– ஐரோப்பாவுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி –**

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

**நேர்காணல் ச.சங்கரன்**

ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வழமையாளர்களாக உள்ளனர்.

**கேள்வி:-** *யுத்த காலத்தில் வன்னியில் இயங்கிய அரச வங்கிகள் பெரும் திரவப் பணத் தட்டுப்பாட்டை எதிர் நோக்கினர். அவ்வாறான சூழலைத் தமிழீழ வைப்பகம் எவ்வாறு எதிர் கொண்டது?*

**பதில்:-** தமிழீழ வைப்பகத்தைப் பொறுத்தவரை அதன் வழமைதாரர்களது சேமிப்புக்களை எமது பிரதேசத்திலேயே பயன்படுத்தினோம். திட்டமிடப்பட்ட திரவப் பண முகாமைத் துவத்தால் வைப்பகத்தின் எந்தவொரு வழமைதாரர்களும் திரவப் பண நெருக்கடியால் பாதிப்படையவில்லை. சிறீலங்கா அரசு வன்னிக்குள் திரவப் பணத்தை எடுத்துச் செல்ல கடும் கட்டுப்பாடுகளை விதித்தது. ஆயினும் எமது பிரதேசத்தில் பணப்புழக்கத்தில் தமிழீழ வைப்பகம் அன்று பெரும் பங்காற்றி மக்களுக்காக உழைத்தது.

**கேள்வி:-** *யாழ்ப்பாண இடப்பெயர்வுகள், வன்னிப் இராணுவ நடவடிக்கைகளினால் வைப்பகத்தின் செயற்பாட்டில் பாதிப்புக்கள் ஏற்பட்டனவா?*

**பதில்:-** “ரிவிரச” இராணுவ நடவடிக்கை காரணமாக 1995ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19ம் நாள் யாழ் நகரிலும் நெல்லியடி நகரிலும் இயங்கிவந்த யாழ் குடாநாட்டுக் கிளைகள் வன்னிக்கு இடம் நகர்த்தப் பட்டு இடப் பெயர்வுக் காலத்திலும் மக்களின் நிதித் தேவையினைப் பூர்த்தி செய்து வந்தோம்.

குடாநாட்டு வைப்பகக் கிளைகள் வன்னிப் பகுதிக்கு மாற்றப்பட்ட போதும் வழமையாளர்கள் எதிர் நோக்கக் கூடிய இடர்களுக்குத் தீர்வு காணும் முயற்சியால் தமிழீழ வைப்பகம் மிகுந்த கவனமெடுத்து அக்கிளைகளைத் தொடர்ந்தும் வன்னியில் இயக்கியது. யாழ் குடாநாட்டு மக்கள் மீளப்பெறாத அடைவு நகைக் கடன்கள் காலம் கடந்த போதும் அந்த நகைகளை கடந்த ஏழு ஆண்டுகளாகப் பாதுகாத்து அக்காலப் பகுதிக்கு வட்டி அறவிடப்படாது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மீளளிக்கப்பட்டது.

இதன் மூலம் சிறந்த பாதுகாப்பினையும் நம்பிக்கை யினையும் தமிழீழ வைப்பகம் உறுதி செய்துள்ளது எனப் பல வழமையாளர்கள் பாராட்டியுள்ளனர்.

**கேள்வி:-** *தமிழீழ வைப்பகத்தின் விசேட அம்சங்கள் பற்றிக் கூற முடியுமா?*

**பதில்:-** வளப்பற்றாக்குறை இருக்கின்ற போதும் எமது வைப்பகத்தை நவீன மயப்படுத்த முடியாவிட்டாலும் எமது மக்களுக்குச் சிறந்த சேவையினைச் சீராகவும் ஒழுங்காகவும் வழங்கி வருகின்றோம்.

தமிழர்களால் தமிழருக்கென்று தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட வைப்பகத்தைத் தமிழீழ வைப்பகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் தமிழ் மொழியில் இடம் பெறுகின்றது. நாம் வைப்பக பணியுடன் தூய தமிழ்ச் சொற்களை பயன்படுத்தி வருகின்றோம்.

**கேள்வி:-** *புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கு என்ன செய்தியைக் கூற விரும்புகின்றீர்கள்?*

**பதில்:-** தமிழீழ வைப்பகம் 1994ம் ஆண்டு மே மாதம் 23ம் நாள் யாழ் கஸ்தூரியார் வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 11வது ஆண்டில் வெற்றி நடை போடுகின்றது.

வெளிநாட்டில் புலம் பெயர்ந்து வாழும் எங்களின் சொந்த மக்களுக்காகவும் தமிழீழ வைப்பகம் “தாயக ஒளி” எனும் பெயரில் ஒரு வைப்புத்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. அதில் எமது புலம் பெயர்ந்த மக்கள் வைப்புக்களைச் செய்ய லாம். நீங்கள் தாயகத்தில் குடியேறும் போது அல்லது நீங்கள் விரும்பும் எப்போதும் இப்பணம் உங்களுக்கு உதவும்.


எமது தேசத்தின் நலனுக்காகவும் “தாயக ஒளி” வைப்புத் திட்டத்தில் நீங்கள் முதலீடு செய்யலாம். தாயகம் வரும் போது புதிய கணக்குகளை திறந்து விட்டுச் செல்லுங்கள். இதன் மூலம் திரட்டப்பட்டு வரும் நிதி வேளாண்மை, கைத் தொழில், கடற்தொழில் ஆகிய துறைகளில் முதலீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டம், பல புலம் பெயர்ந்த மக்களின் வேண்டுகோளிற்கு இணங்க ஆரம்பிக்கப்பட்டு ள்ளது. புலம் பெயர்ந்தவர்கள் தமிழர் தேசத்தின் மீதும் தமிழீழ வைப்பகத்தின் மீதும் வைத்துள்ள பற்றை வெளிப் படுத்துகின்றது.

அதே வேலை இத்திட்டத்தின் மூலம் தமிழர் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வாய்ப்பும் அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. அத்துடன் இவ்வாறான பணிகள் மூலம் எமது தேசத்தின் மேம்பாட்டிற்கு தமிழீழ வைப்பகம் கணிசமான பங்கை செய்து வருகின்றது. தொடர்ந்தும் எமது பணியை சிறப்பாக செய்ய உறுதி பூண்டுள்ளோம்.

தமிழர்களின் சொத்தான தமிழீழ வைப்பகம் உறுதியான வளர்ச்சி காணுவதன் மூலம் தமிழீழ தேசத்தின் பொருண்மிய வல்லாண்மையினைப் பெற, அனைத்து புலம் பெயர்ந்த மக்களும் எம்முடன் கை கோர்த்து இணைந்து நடப்பீர்கள் என நம்புகின்றோம்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

என்ற தொலைநோக்குச் சிந்தனையில் எமது பணி தொடரும்.

மோகன் ஜுவலரி மார்ட்

201 Rue du fg. st. Denis, 75010 Paris.

Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79

Mº: La Chapelle / Gare du Nord

தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!



Pub



# என்னோடு நான்

**கந்தையா நவரேந்திரன்**

நாங்கள் மற்றவர்களுடன் எப்படி எதிர்ச்செயலாற்றுகின்றோமோ (react)அவற்றைக் கொண்டே மற்றவர்களுடனான எமது உறவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. எதிர்வினை (relation) என்ற ஆங்கிலச் சொல்லிலிருந்தே உறவு (relation) என்ற ஆங்கிலச் சொல் வந்தது.

தங்களுக்குள் தோன்றும் எந்த உறவும் தங்களைத் திருப்திப் படுத்தாது என்ற யதார்த்தம் நுண்ணறிவாளர்களைத் தடுக்கி வீழ்த்தும் உண்மையாகும். நாம் கொண்டுள்ள ஒவ்வோர் உறவினதும் முடிவுரை தோல்வியால் மனத்தை உருக்கும் கடுந்துயர் அவலமாகவே இருக்கும்.

இம் முடிவுரை அடுத்து வரப் போகும் மற்றுமொரு துன்பியல் உறவு நாடகத்திற்கான முன்னுரையே. எனவே எமது உறவுகள் நிலையற்றவை. வேண்டுமானால் ஓர் உறவு ஒரு மைல்கல்லாக திருப்புமுனையாக இருக்குமேயன்றி அது ஓர் இலக்காக இராது. இன்னும் ஒருவகையில் சொல்லப்போனால் உறவுகள் யாவும்

இறுதியான-உறுதியான ஓர் உறவைச் சுட்டிக்காட்டும் அம்புக்குறிகளாகவிருக்குமே அன்றி இலக்குகளாக இரா.

சிறிதளவு நீர்த்துளிகளோ உணவுப் பருக்கைகளோ எங்களது தனியாத தாகத்தையோ பசியையோ கூட்டி விடுமேயன்றி அவற்றைத் தணிக்கப் போவதில்லை. இதனையே நாம் கொண்டுள்ள ஒவ்வோர் உறவிலும் காண்கின்றோம்.

மன நிறைவைத் தருவதற்க்குப் பதிலாக அது மிகப் பெரிய மன நிறைவின்மையைத்தான் தருகிறது.

ஆரம்பத்தில் சில மேலெழுந்தவாரியான பகட்டார வாரங்கள் காரணமாக அது செழித்தோங்கி எம்மை மகிழிச்சிக் கடலில் மூழ்கடித்துக்கொண்டிருப்பது போற் தோன்றினாலும் கடைசியில் அது தோல்வியையே தழுவுகின்றது.

# மனித உறவுகள்



பிறருக்கு வெளிக்காட்டாமல் எம்மால் மிகவும் சாதுரியமாகவும் தந்திரமாகவும்?பசப்பு வார்த்தைகளாலும், எமக்கிருக்கும் இயல்பான செருக்குகளாலும் நாம் இவ்வுண்மையை மூடிமறைத்தாலும், எமது உள்ளத்துக்கு இது யாதார்த்தமான

உண்மையெனத் தெரியும். இதனை நாம் வெளியெ சொல்ல வெட்கப் படுகின்றோம்.

எம்மால் உருவாக்கப்பட்ட எமது சமூக அமைப்பு அப்படி எம்மை நடிக்கத் தூண்டுகின்றது. சமூகத்துக்கு நாமெல்லாம் அறிந்தவர்கள், எல்லாவற்றையும் வெற்றிக் கொண்டவர்கள் என்று காட்டவேண்டும் அல்லவா?

இந்தச் சமூக இருப்புக்கு, நாம் உறவு நிலையில் பலமாக நிலையில் உள்ளவர்கள் என்று காட்ட வேண்டி உள்ளது. அப்படிக் காட்டினால் தான் எமது சமூக அந்தஸ்து உயர்வாக இருக்கும்.

அதனால்தான் குடும்ப உறவுகளிலும், நட்பு உறவுகளிலும், ஒவ்வொருவரும் மற்றவரை அனுசரித்து-விட்டுக் கொடுத்து- மற்றவர்களுக்குத் தக்கவாறு எமது செயற்பாடுகளைக் கொஞ்சம் கொஞ்மாக மாற்றி அமைத்துக் கொண்டு- சரிபடுத்திக் கொண்டு வாழவேண்டுமெனப் போதிக்கபடுகின்றோம்.

இது தாபன ரீதியாக செயற்படுவோருக்குச் சிலவேளைகளில் பொருந்தலாம்.

ஆனால் உயிர்ப்புடன் உள்ளன்போடு வாழப் படவேண்டிய எமது யதார்த்த வாழ்க்கைக்கு இது பொருந்தாது.

உறவைப் பேணுவதற்கு இப்படியிப்படி எல்லாம் செயற்பட வேண்டும் எனச் சொல்லப்படும் போதே, உறவில் உளவியல் ரீதியாக விரிசல்கள் தோன்றியுள்ளன என்பதையே அது காட்டுகின்றது.

மின்கம்பியொன்று அறுந்துவிட்டால், அறுந்த இரு முனைகளையும் சேர்த்து இணைத்து விட்டால் துண்டிக்கப்பட்ட மின் ஓட்டம் சீர்படும். மின்சாரத்தை ஆங்கிலத்தில் electricity or electric current என்று அழைக்கின்றோம். உரசசநவெ என்ற வேர்ச்சொல்லின் உரச. இதன் பொருளோட்டம் (run) என்பதாகும்.

ஓட்டத்தை- போக்கைக் குறிக்கவே current என்ற சொல் உபயோகிக்கப்படுகிறது. இதையொட்டியே நாம் பங்கியில் வைத்திருக்கும் நடைமுறை கணக்கை current account என்றும், நிகழ்ந்து கொண்டிருக்கும் செய்திகளை - நடப்புகளை current news என்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளை நடவடிக்கைகளை current affairs என்றும் சொல்கின்றோம். இந்த current க்கு உரிய ஓட்டம் துண்டிக்கப்பட்டால் அவ்வோட்டம் நின்று விடும். இணைப்பை நிகழ்காலத்தில் ஏறபடுத்தி, நின்று விட்ட ஓட்டத்தை மீளக் கொண்டு வரலாம். காரணம் current ஒரு சடப் பொருளின் இயக்கம். இப்படியெல்லாம் சடப் பொருளுக்குரிய செய்கைகளைச் செய்து தான் மனித உறவை அவ்வப்போது நீடிக்க வேண்டுமென்ற நிலை உருவாகினால் அவ்வுறவின் பலவீனமாக நிலையை நாம் ஊகித்துக்கொள்ளலாம் .

உறவுகள் தோல்வியுறுவதும் ஒரு வளியிற் பார்த்தால் நல்ல அறிகுறி எனலாம்.

ஏனெனில் அப்பொழுதுதான் உட்பொருளுடன் - இயலுலகுடன் - உண்மையுடன் என்றும் மாறாத, தொய்வுறாத, நிலையான, தோல்வியேயுறாத உறவைத் தேட முற்படுவோம்.

இவ்வுலக உறவுகள் எந்த ஆணாலும், எந்தப் பெண்ணாலும் முழுமையாகா. உறவுகளின் பயனின்மையை நாம் திரும்பத் திரும்பப் பார்ப்பதனாலும் எவ்விதப் பயனுமில்லை.

உறவுகள் பெரும் நம்பிக்கையுடனும் எதிர்ப்பார்ப்புடனும் தொடங்கிப் பெரிய ஏமாற்றங்களிலேயே போய் முடிகின்றன பெரிய காவியக் காதல்கள் உட்பட அனைத்துக் காதல்களும் கடுந்துயர்களிலேயே முடிவுறுகின்றன.

இது எமது வாழ்க்கையில் மட்டுமல்லாது, மற்றவர்களது வாழ்க்கையிலும் நடைபெறும் போது நாம் அதிலிருந்து உபயோகமான ஏதேயாவதொன்றைக் கற்றுக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு தனித் தனி அனுபவமும் எங்களை ஓர் இறுதியான உறவுக்கு ஆயத்தப் படுத்த வேண்டும் என்றும் உள்ள நிலையான உறவை நிலை நிறுத்துவதில் எமக்கு ஏற்படும் தோல்விகள் எம்மை முழுமையுடன் ஒன்று படு நிலைக்கு வேணவாகொள்ள வைக்கவேண்டும். இதற்கு எமக்கிருப்பது கண நேர அவகாசம் மட்டுமே ஆகும். அக்கணம் கலைந்தவுடன் நாம் கடும் இருளிலேயே விடப் படுவோம் அந்தக் கணநேர திடிரொளிக்குப்பின் மின்னலுக்குப்பின் முன்னையதைவிட இருள் மிகக்கூடுதலாக - செறிந்ததாக இருக்கும்.



# எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

வெற்றிகரமான பல தாக்குதல்களின்

# தளபதி மேஜர் விஷ்ணு

மட்டக்களப்பு சின்னப்புல்லுமலை என்னும் அழகான வயல்களுடன் கூடிய புல்வெளிகளும், மலைகளுடன் குன்றுகளும் நிறைந்த இயற்கை வளம் செழிக்கும் நகரிலே சுப்பிரமணியம் - பூமணி தம்பதிகளின் இரண்டாவது செல்வப் புதல்வனாக உதயமானான், இவனை நாதன் என்றே எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள். நாதன் செல்லமான அரவணைப்பில் வளர்க்கப்பட்டாலும் மிகவும் ஒழுக்கமானவனாகவும், அறிவுடையவனாகவும், ஆளுமையுடையவனாகவும் வளர்க்கப்பட்டான். தனது கல்வியினை மட்டக்களப்பிலில் உள்ள ஏறாவூர் அலிகார் முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் பயின்றான். கா.பொ.தா. (சாதாரணதர) பரீட்சை எழுதுகின்ற போது சிங்கள விசேட அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பது என்ற பெயரில் இவனது கிராமத்தில் இளைஞர்களை கைது செய்து துப்பாக்கியால் சல்லடை போட்டார்கள். மேலும் பல கொடுமைகளைப் புரிந்தனர். இதன் காரணத்தினால் பயத்தின் மத்தியிலேயே இவன் பரீட்சை எழுத நேர்ந்தது. எனினும் நாதன் சிறப்புப் புள்ளிகள் கிடைக்கக்கூடியவாறு சிறப்பாக பரீட்சை எழுதி முடித்தான்.

பின்னும் சிங்களப்படைகளின் கெடுபிடிகள் தொடர்ந்தது. இந்த ஒடுக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவென நாதனின் பேனா ஏந்திய கரம், 1985ம் ஆண்டு இறுதி பகுதியில் துப்பாக்கி ஏந்தச்சென்றது.

சண்முகநாதன் தமிழ் மக்களைக் காக்க விஸ்ணு என்ற நாமம் தரித்து மட்டு 7ஆவது பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்றான். விஸ்ணு திறம்பட தனது பயிற்சிகளை நிறைவு செய்து தளபதி லெப்.கேணல் றீகன் தலைமையில் சிறீலங்கா இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களிலும், இந்தியப்படைக்கு எதிரான தாக்குதல்களிலும் மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் முன் நின்று பல எதிரிகளை கொன்றொழித்தான். 1990ம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள இனவெறியர்கள் மீது பல கெரில்லா தாக்குதல்களை தாக்கி புலிகளைத் தீண்டியவர்களுக்கு இவர்களே சென்று எதிரியை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கினார்கள். பின் தேசியத்தலைரின் பணிப்பின் பிரகாரம் விஸ்ணுவும் குறிப்பிட்ட போராளிகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கோட்டைச்சமர், பலாலிச்சமர், போன்ற பல தாக்குதல்களில் பங்குபற்றினான். இவ்வாறு இருக்கும் போது 1993ம் ஆண்டு காலப்பகுதியில் பூநாகரி சிறீலங்கா படைமுகாம் வீழ்ச்சி கண்ட போது அத்தக்காகுதல்களிலும் விஸ்ணுவின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இவ்வெற்றிச்சமரின் போது விஷ்ணுவின் மார்பில் பெரும் போர் வடு ஏற்பட்டது. விழுப்புண் மாறியதும் அதிகாரிகள் கல்வியினைக் கற்றான். கல்வியில் கை தேர்ந்த இவன் படிப்பிலும் விசேட பெறுபேறுகள் பெற்றான்.

1995ம் ஆண்டு சிறீலங்கா படையினர் யாழ்நகர் மீது படையெடுத்த போது தலைவர் அவர்கள் தந்திரோபாய நகர்வில் நிர்வாக அலகை வன்னிக்கு மாற்றம் செய்து போராளிகளையும் வன்னிக்கு மாற்றம் செய்தார். இக்காலப்பகுதியில் ஜெயந்தன் படையணிப் போராளிகள் சிலர் மட்டக்களப்பிற்கு சென்றனர். அதன் போதுதான் விஷ்ணுவும் சென்றான். போகும் போது கள அனுபவம் உள்ள அணித்தலைவனாகவே தன்னை வளர்த்துக் கொண்டு சென்றான் விஷ்ணு. தொடர்ந்த மட்டக்களப்புகளில் நடைபெற்ற தாக்குதல்களிலும் நிர்வாக வேலைத்திட்டங்களிலும் பங்கு கொண்டான். இதில் 1996ம் ஆண்டு ஆரம்பத்தில் பத்தரை கட்டைப்பகுதியில் மோட்டச் சைக்கிளில் விஷ்ணு தனது உதவியாளருடன் கொக்கட்டிச்சோலை நோக்கி சென்று கொண்டிருந்தவேளை சிறீலங்காப் படையினரின் பதுங்கித் தாக்குதலுக்கு இலக்காகி இத்தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்து கால் பகுதியில் ரவை தாக்கியதில் விழுப்புண் அடைந்தான்.

பின்னர் விழுப்புண் மாறியதும் 1996ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நடைபெற்ற சிங்கள விசேட அதிரடிப்படையினர் குடிகொண்டிருந்த புளுகுணாவை படைத்தளம் மீதான தாக்குதலை அணித்தலைவனாக நின்று களமாடி வெற்றிக்கு வித்திட்டான். பின் 1997ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் அம்பலான்துறை விசேட அதிரடிப்படையினரின் படைத்தளமீதான தாக்குதலின் போது அணித்தலைவனாக பங்கு கொண்டான்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வவுணதீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் அணித்தலைவனாக நின்று வழிநடத்தி எதிரிக்கு பாரிய அழிவினை ஏற்படுத்தினான். இத்தாக்குதலில் தொண்டைப்பகுதியில் எதிரியின் ரவை துளை இட்டு சென்றதனால் உயிர்பிரியும் நிலையிலிருந்து உயிர் பிழைக்கின்றான். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் 4-9 பகுதியின் பிரதேசப் பொறுப்பாளனாக செயற்பட்டு வந்தான். விஷ்ணு தனது பொறுப்பின் கீழ் உள்ள அணிகளை வேவு நடவடிக்கையில் ஈடுபடுத்தி படை முகாம்களின் தரவுகளைப் பெற்று தாக்குதல் மேற்கொள்ள திட்டமிட்டான்.

அதன் காரணமாக துறைநீலாவணை என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறீலங்கா விசேட படைத்தளம் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்படைத்தளத்தை முற்றுமுழுதாக அழிப்பதற்கான தரவுகளை திரட்டுவதற்கு தனது அணிப் போராளிகளை ஈடுபடுத்தினான். தாக்குதல் நடத்துவதற்கான மேலதிக தரவுகளும் வந்து சேர்ந்தன. இறுதியாக தரவுகள் அனைத்தையும் சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பாக இருந்த விஷ்ணுவும், ஏனைய வேவு வீரர்களும் சென்றார்கள். அப்போதுதான் எதிர்பாராத சம்பவம் நடந்தேறியது. எதிரி பங்கியிருந்து நடத்திய தாக்குதலில் மேஜர் விஷ்ணு உட்பட ஐந்து போராளிகள் தேசவிடுதலைப் போராட்டத்தில் பல வெற்றிக்கு வித்திட்ட மாவீரர்கள் வரிசையில் விதையாகிப் போனார்கள்.

- நிதன்

(இம்ரான் பாண்டியன் படையணி)

# 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே'
## – நூல் விமர்சனம் –

தமிழ்ச் சூழலில் குழந்தை வளர்ப்பு என்பது எந்தளவிற்கு அக்கறை பூர்வமான விடயமாக எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றது என்ற கேள்விக்குப் பதில் நம்பிக்கை அளிக்கக் கூடிய ஒன்றாக இருக்காது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. பழமைவாதச் சிந்தனை மரபு, ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் ஆழமாக வேர்விட்டிருக்கிற எமது தமிழ்ச் சமூகப் பரப்பில் குழந்தை வளர்ப்புக் குறித்த ஆரோக்கியமான நடைமுறைகளை எதிர்பார்க்க முடியாது. போரும் வன்முறையும் புலம் பெயர்வும் அதை இன்னும் எட்டாத் தூரத்திலேயே வைத்திருக்கின்றன.

குழந்தைகள் பெற்றோர்களுக்கிடையேயான புரிந்துணர்வின்மை, முரண்பாடுகள் மனிதகுல வளர்ச்சிப் போக்கில் மிகப் பெரும் பின்னடைவையே தந்திருக்கின்றது. இது நமது தமிழ்ச் சூழலில் ஆழப்பதிந்து வேர்விட்டு எதிர்காலச் சந்ததியை மிக மோசமான அக புற தாக்கத்திற்குட்படுத்தி வருவதாக குழந்தைகள் நல நிபுணர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு நமது எதிர்வினைதான் என்ன....? தமிழ்ச் சமூகத்தில் குழந்தை வளர்ப்புத் தொடர்பான சீரான புரிதல் இல்லை. `அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்', `அடியைப்போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்' போன்ற பழமைவாத ஆதிக்கக் கதையாடல்களின் வழி கட்டமைக்கப் பட்டிருக்கும் நமது சமூகம் அர்த்தத் தெளிவின்றி அதைக் குழந்தைகள் மீது ஏவிவிடுகிறது. ஏற்கனவே சிங்கள அரச எந்திரம் எமது குழந்தைகள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கிற வன்முறையையும் சேர்த்து நமது குழந்தைகள் இரட்டை வன்முறையை எதிர்கொள்கிறார்கள். இதற்குத் தீர்வுதான் என்ன?




குழந்தை வளர்ப்பை கல்வியியல் - உளவியல் அனுபவமாக அணுகவேண்டும். அடுத்து பெற்றோர்களின் சமூக நிலை அதிகாரங்கள் தகர்க்கப்படவேண்டும். இவ்வாறான அணுகுமுறையும் பார்வையும் எம்மிடையே உருவாகாதவிடத்து அகத்தாலும் புறத்தாலும் குழந்தைகள் பெற்றோர்கள் இணைவு சாத்தியமேயில்லை. விளைவு! ஒரு மோசமான சந்ததி தமிழ்ச் சமூகத்திற்குப் பரிசாகக் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.....

இந்த நிலையில் இருந்துதான் `குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே ' என்ற நூல்மீதான வாசிப்பை நிகழ்த்த முடியும். இந்நூல் டொக்டர் ஹேய்ம் ஜி இனோட் அவர்களால் எழுதப்பட்ட `Between parents and child' என்ற ஆங்கில மூல நூலின் வடிவம். தமிழ்ப்படுத்தியிருப்பவர் எஸ். கே. விக்னேஸ்வரன். தமிழின் அறிவியல் நூல் வரிசையில் காத்திரமான வரவு.

தமிழை மூல மொழியாகக்கொண்டு எழுதப்பட்ட அறிவியல் நூல்கள் தமிழில் இல்லை என்று சொல்லுமளவுக்கு அத்துறையில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது. இதற்காக தமிழர் அறிவியல் துறைசார் அறிஞர்களாக இல்லை என்றில்லை. அவர்களது சிந்தனையும் எழுத்தும் தமிழில் இல்லை. ஆங்கிலமாக இருக்கிறது என்பதே உண்மை. ஆகையால் நாம் மொழிபெயர்ப்பு நூல்களை எமது அறிவியல் நூல் வரிசையில் வைத்து அழகுபார்க்கிற துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறோம்.

எனினும் குழந்தைகள் மற்றும் சிறுவர் உளவியல் - நலவியல் - பெற்றோரியம் தொடர்பாக இதுவரை தமிழில் இப்படியொரு தரமான நூல் வந்ததாகத் தெரியவில்லை. சரிநிகர் பத்திரிகையில் தொடராக வந்தபோதே அநேகரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. எஸ். கே. விக்னேஸ்வரன் தமிழ்ச் சூழலுக்கு ஏற்றவாறு கவனமாக மொழி பெயர்த்திருக்கிறார். அறுபதுகளில் வெளிவந்த மூலப்பிரதி இன்றைய தமிழ்ச் சூழலுக்கு பொருந்திப்போவது ஆச்சரியமளிக்கிறது. போரும் புலப்பெயர்வும் குழந்தை வளர்ப்புத் தொடர்பான தமிழ்ப் பெற்றோர்களின் கவனத்தை - அக்கறையைச் சிதறடித்திருக்கிறது. அவர்களுக்கு இந்த நூல் ஒரு சிறந்த வழிகாட்டி என்பதில் ஐயமில்லை. சின்னச் சின்ன விடயங்கள்கூட நுட்பமாகவும், ஆழமாகவும் விபரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மொழிபெயர்ப்பு நூல் - அதுவும் உளவியல் தொடர்பானது என்றபோது முதலில் ஓர் அந்நியத் தன்மையே இருந்தது. காரணம் அநேக அறிவியல் மொழிபெயர்ப்புகள் கலைச்சொற் பாவனையுடன் மொழிபெயர்ப்பாளரின் அதிக பிரசங்கித் தனத்துடன் வெளிவருவதை கண்கூடே காணுகிறோம். ஆனால் விக்னேஸ்வரன் மொழி - சூழல் சார்ந்த தீவிர பிரக்ஞையுடன் எளிய மொழியில் எமது தேவையை உணர்ந்து செயற்பட்டிருக்கிறார்.

சாதாரண வாசக அனுபவமுள்ள - ஓரளவு படிப்பறிவுள்ள எந்தப் பெற்றோரும் இந்த நூலை இலகுவாக படிக்கமுடியும். இந்த நூலின் மிகப் பெரிய வெற்றியே இதுதான். நமது தேவையும் அதுதானே....

நூலிலிருந்து ஒரு சிறிய உரையாடல் பகுதியைப் பாருங்கள். பத்து வயதான ஜான் கவனக்குறைவினால் கிளாசில் இருந்த பாலை சாப்பாட்டு மேசையில் கொட்டிவிட்டான்.

தாய்: ஒரு கிளாசை எப்படிப் பிடித்திருப்பதென்பதைத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு உனக்கு வயது வந்துவிட்டது. எத்தனை தடவை நான் உனக்குச் சொல்லிவிட்டேன். கவனமாக நட என்று.

தகப்பன்: அவனுக்கு அது ஏலாது. அது ஒரு புத்திகெட்டது. எப்பவும் அப்படித்தான் இருந்தது. இனியும் இருக்கப்போகுது.

ஜான் ஊற்றியதோ ஒரு ஐந்து காசு பெறாத பால். ஆனால் அந்த விடயத்தைத் தொடர்ந்துவந்த கடுமையான அவமதிப்பு, குழந்தையின் தன்னம்பிக்கையில் ஏற்படுத்தும் பாதிப்பின் பெறுமதியோ இதைவிட எவ்வளவோ அதிகமானது.

இதே நேரம் வேறொரு பெற்றோரைப் பாருங்கள்

எட்டு வயது மாட்டின் தவறுதலாக தன்னுடைய பாலை மேசைமீது ஊற்றிவிட்டான்.

இதைக் கண்டுவிட்ட தாய் `ஓ... பால் ஊத்துப்பட்டுட்டுது'. என்றவள் `இன்னொரு கிளாஸ் பால் இருக்கிறது.' என்று கூறியபடி துணியையும் பாலையும் கொடுக்கிறாள். மாட்டின் ஒருவகையான ஆறுதலுடனும் சுயநம்பிக்கையுடனும் தாயைப் பார்க்கிறான்.

ஒரு விடயம் இரண்டுமுறையான அணுகுமுறை.

முன்னுரையில் சேரன் குறிப்பிடுவதுபோல் குழந்தைகளின் நடத்தைகள் தொடர்பான விடயங்களில் அக்கறை எடுத்து அவர்களை வழிப்படுத்த எடுக்கும் முயற்சிகளில் முக்கியமானது பெற்றோரை அறிவூட்டுவதுதான். குழந்தைகளை அறிவூட்டுவதைவிடவும் முக்கியமான விடயம் இதுதான். இந்த நூல் அதை மிகவும் சிறப்பாகச் செய்கிறது. இது ஒரு தொடக்கம்தான். எமது தேவை பெரிது. வழங்கலும் வளமும் சிறிது. எந்த நீண்ட பயணமும் ஒரு சிறு காலடியுடனேயே தொடங்கப்படுகிறது. என்பதற்கமைய இந்த முயற்சியை நாம் மனமார வரவேற்கவேண்டும்.

**– பரணி**

பாரிஸ் நகரில்
தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமாய்...
தூபாளம் பொத்தகசாலை
22, Rue Perdonnet, 75010 Paris, France.
Tél: 01 40 05 95 15

## எல்லாமே சொல்லிக்கொண்டன...

இப்போது
எங்கள் வீடுகள்
பாதுகாப்பாக இருப்பதாகவே
உலகம் பேசிக் கொள்கிறது.
வீடுகளைச்
சுற்றி
முட்கம்பி வேலிகளும்
மண்மூடை அடுக்குகளும்
இட்டே
காத்து வருகிறதாம்
இராணுவம்...
வேலிகளுக்கு
அருகிலே
யாருமோ
எந்த விலங்குகளுமோ
உட்புகாதபடி
மிதிவெடிகள் கூட
புதைத்திருக்கிறார்களாம்...
இவ்வளவு
பாதுகாப்புக்குள்ளான எங்கள்
வீடுகளிலே
ஓடுகளோ
சுவர்களோ எதுவுமின்றி
அத்திவாரங்களே மீதமிருக்கிறது...!
அதைச்
சுற்றிப் பற்றைகளும்
காடுகளுமே படர்ந்திருக்கிறது.
ஆனாலும்
எங்கள் வீடுகள்
இன்னும் பாதுகாப்பாக
உயர் வலயத்திலே இருக்கிறதென்றே
எல்லா
ஊடகங்களும்
சொல்லிக் கொண்டன...

– மட்டுவில் ஞானக்குமாரன்,
ஜேர்மனி.

## தமிழீழம்

தமிழனுக்கொரு நாடு தமிழீழ நாடு
சீரிய நற் கொள்கைதனைக்
கொண்ட நம் தலைவரால்
சாதி மத பேதமின்றி
மலரப் போகும் நாடு.
ஊழல் புரிந்து நாட்டைக்
கெடுக்கும் பல காலிகள்
துளியும் இங்கில்லாமல்
உழைக்கும் மக்கள் கைகளில்
தவழப் போகும் நாடு.
தமிழ் மறையின் நெறி நின்று
அறவோர் போற்றும் பாதையில்
ஆட்சி மொழி தமிழாக
உலகத் தமிழர் பார்வையில்
மிளிரப் போகும் நாடு.
வடமொழியை அறவே ஒதுக்கி
தமிழர் வணங்கும் கோவில்களில்
அன்னைத் தமிழை ஒலிக்க வைத்து
தமிழுக்கு நல் பெருமைதனை
வழங்கப் போகும் நாடு.
அறிவியல் துறையில் முன்னேறி
ஆண்டுகள் சில போனாலும்
வானில் மின்னும் நிலவுக்குள்
போகும் விண்கலங்களை
அனுப்பப் போகும்நாடு.
இயற்கை அளித்த உழு
நிலங்களை
சிறந்த முறையில் பயிர் செய்து
வறுமை எனும் சொல் நீங்கி
அனைத்து மக்களும் பசிப் பிணியற்று
வாழப்போகும் நாடு.
ஆணும் பெண்ணும் சமமாக
போரிட்டுப் பெறும் விடுதலையில்
பால் வேற்றுமை சிறிதுமின்றி
வெற்றி மேல் வெற்றி பெற்றுக்
களிக்கப் போகும் நாடு.
எங்கள் நாடு தமிழீழம்
குருதியில் நனைந்த செவ்வீழம்
பாடுபட்ட மறவரின்
நீண்ட நாள் கனவுகளை
விரைவில் அடையப் போகும்
பொன்னீழம்.

– பு.மயூரன்

# ஈராக்கில் விலைபோகாத அமெரிக்க இராஜதந்திரம்

ஈராக்கில் அமெரிக்கா ஆரம்பித்த யுத்தம் அவர்களைப் பொறுத்தவரை முடிவடைந்தபோதிலும், தொடர்ந்தும் அங்கு உத்தியோக பற்றற்ற யுத்தம் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. ஆனால், இப்போது அமெரிக்கத் துருப்புக்களுடன் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட புதிய இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்துகொண்டுள்ளனர். எதிரியாக உள்ளவர்கள் ஈராக்கிய மக்கள். சில வாரங்களின் முன் ஈராக்கின் சிறுபான்மை இனமக்களின் கட்டுப்பாட்டுப் பகுதியான பலூஜாவில் பல நாட்கள் மோதல்கள் தொடர்ந்தன. இறுதியில் அமெரிக்கப் படைகள் அங்கிருந்து விலகிக்கொண்டன. இப்போது பெரும்பான்மையின மக்களான சியா இஸ்லாமியர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியான நசாவ் மற்றும் ஹெயார்பாலா தலைநகரின் சாதர் நகரப்பகுதி போன்ற இடங்களில் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான யுத்தம் இடம்பெற்றுவருகின்றது. இவற்றில் மிகமோசமான தாக்குதல்கள் நசாவ் பகுதியின் இடம்பெறுகின்றது. இங்கு கடந்த ஐந்து தினங்களாக சியா ஆயுதபாணிகளுக்கும் பல்தேசிய கூட்டமைப்புப் படைகளுக்கும் இடையே பலத்த மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. இவர்களுடன் அமெரிக்க விசேட கடற்படையினரும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இறுதியாக வெளிவந்த தகவல்களின்படி நசாவ் பகுதியில் நிலைகொண்டிருந்த டென்மார்க், போலந்து போன்ற நாடுகளின் படைகள் நசாவ் பகுதியில் இருந்து பின்வாங்கிக்கொள்ள ஆரம்பித்துள்ளதாயும் அவர்களது இடத்தினை அமெரிக்க விசேட கடற்படை அணிகள் நெருங்கிவருவதாயும் கூறப்படுகிறது. நடந்தவரும் மோதல்களை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஈராக்கிய உட்துறை அமைச்சர் அயாத் அலாவி அந்நகரில் நிலைகொண்டுள்ள சியா மதத்தலைவர் அல் சாதர் உடன் பேச்சுக்களை மேற்கொண்டார். ஆனால், பேச்சுக்கள் எவ்வித பலனும் அளிக்காத நிலையில், முடிவடைந்தது. இப்போது ஈராக்கிய அரச அதிகாரிகள் ஈரானிய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளனர். சியா ஆயுதபாணிகளுக்கான நவீன ரக ஆயுதங்கள் பெருமளவில் ஈரானின் எல்லைகளுக்கு ஊடாகவே அனுப்பப்பட்டுள்ளன என்று ஈராக் சார்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஈராக்கில் அந்நிய இராணுவத்திற்கு எதிராக தனது இறுதி சொட்டு இரத்தம் உள்ளவரை தான் போராடத் தயாராக இருப்பதாக சியா மதப்பிரிவின் சக்திமிக்க தலைவராகக் கருதப்படும் மொக்தாதா அல் சாதர் அறிவித்துள்ளார். அத்துடன் தனது போராளிகளையும் அமெரிக்க இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும் வரை போராட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். சியா இன மக்களின் புனிதஸ்தலங்களை உள்ளடக்கிய ஹேறர் பலாவில் இதுவரை பெரிதாக தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை என்றபோதிலும் இடையிடையே எறிகணை வீச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. மேலும் தென்பகுதியின் பிரதான நகரமான பாஸ்றாப் பகுதி இதுவரை அமைதியாகவே உள்ளது. இப்பகுதியை பிரித்தானிய இராணுவமே கட்டுப்பாட்டில் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை சியா இன ஆயுதக் குழுக்களே நசாப் பகுதியில் நிலைகொண்டுள்ள போதிலும் மதத் தலைவரின் புதிய அறிவிப்பால் ஏனைய மதப்பிரிவுப் போராளிகளும் அமெரிக்க இராணுவத்திற்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடலாம் என நம்பப்படுகிறது.


இது ஒருபுறமிருக்க, சதாம் உசையின் அரசினைக் கவிழ்ப்பதில் மும்முரமாக செயற்பட்டுவந்த சிலர் இன்று திடீரென எதிராகளாக மாறிப்போயுள்ளனர். அத்துடன் அமெரிக்காவால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் மரண தண்டனையும் எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது அமெரிக்காவிற்கு ஏற்பட்ட தோல்வியா அல்லது தற்போது நடந்துவரும் யுத்தக் காய் நகர்த்தலில் அமெரிக்காவின் இராஜதந்திரமா என்பது புரியாத போதிலும் தற்போதைய புதிய நகர்வுகள் சதாம் உசையின் ஆதரவாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய விடயம் என்பது உண்மையாகிறது. அமெரிக்காவின் சதாம் எதிர்ப்பு முகாமில் இருந்த இருவருக்கு ஈராக்கிய அரசு பிடியாணை அனுப்பியுள்ளது. இந்த இருவரும் அமெரிக்காவினால் பெரிதும் நம்பப்பட்ட சதாம் எதிர்ப்பாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஈராக்கிய தேசியக் காங்கிரசின் தலைவரான அகமட் சலாபி மற்றும் அவரது மைத்துனரான சலேம் சலாபி போன்றோரே ஈராக்கின் குற்றவியல் நீதிமன்றத்தால் தேடப்பட்டு வருகின்றனர். தற்போது சலேம் சலாபி பிரித்தானியாவில் உள்ளபோதிலும் பிரித்தானிய அரசு அவரை ஈராக்கிற்கு அனுப்பும் யோசனை இல்லையென்று தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் எதுவும் இல்லாத நிலையில் இவர்கள் இவர் ஈராக்கிற்கு அனுப்பப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தற்போது ஈரானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அகமட் சலாபி, இது ஒரு மோசடி நடவடிக்கை என்றும் தகுதியற்ற செயற்பாடு என்றும் வர்ணித்துடன் தனக்கு எதிராக போதியளவு ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றார். இதுவொரு சதாம் ஆதரவாளர்களின் முட்டாள் தனமான செயற்பாடு எனக் கூறியவர், தாம் எந்த முயற்சியையும் தடுத்து நிறுத்தும் தகுதியுடையவர் என்றும் கூறினார். தற்போதைய ஈராக்கியப் பிரதமர் அயாத் அலாபி மற்றும் அவரது ஆதரவாளர்கள் தனக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர் என சலாபி மேலும் குற்றம் சுமத்தினார். சதாம் உசையின் காலத்தில் மேற்படி இருவரும் இரண்டு அமைப்புக்களை அமெரிக்காவின் ஆதரவில் வளர்த்து வந்தவர்கள். சலாபி பென்டகன் ஆதரவுடன் ஒரு அமைப்பையும் அலாவி சி.ஐ.ஏ. ஆதரவுடன் மற்றொரு அமைப்பையும் கொண்டு நடத்தியவர்களாவர். இப்போது இவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடானது, எங்கே போய் முடியப்பொகின்றதோ என கூறும் சதாம் ஆதரவாளர்கள் மற்றும் அவரது வழக்கறிஞர்கள், சலாபி மற்றும் அவரது மைத்துனர் போன்றோர்கள் கைது செய்யப்பட வேண்டும் என எப்போதோ கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், அதனை யாரும் செவி மடுக்கவில்லை. இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பிடியாணையானது எமக்கு வெற்றியைத் ஈட்டித்தரும் ஒரு சம்பவம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

- உதயன்


அசைவத்திற்கோ பல... சைவத்திற்கோ ஒன்று தான்!

பிரான்சில், ஈழத்தமிழர்களின் முதலாவது முழுமையான சைவ உணவகம்

கிருஷ்ண பவன்



விதம் விதமன தோசை, இட்லி, சப்பாத்தி, பூரி, இடியப்பம், பிட்டு, சைவ பலகாரங்கள், இனிப்புப் பண்டங்கள், சைவச் சாப்பாடுகள் இன்றும் பல....

கைதேர்ந்த சமையற்கலை வல்லுநர்களின் தயாரிப்பில் தாயக தென்னிந்திய சைவ உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட ‘கிருஸ்ண பவன்’

கிருஷ்ண பவன்
24, Rue Cail
75010 Paris
Tél : 01 42 05 78 43
M° : La Chapelle / Gare du Nord

- ரம்மியமான சூழலில் இரசித்து சுவைக்க ஒரு சைவ உணவகம் -


# ஒலிம்பிக் விளையாட்டுகள் ஓர் கண்ணோட்டம்




நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டிகள் இந்தவாரம் 13ம் திகதி கோலாகலமாக ஆரம்பிக்கப் படவுள்ளன. 1896ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டி உலகப் போர் காரணமாக அவ்வப்போது தடைப்பட்டு, 28வது ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 13ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை கிரேக்க தேசத்தின் ஏதென்ஸ் நகரில் நடைபெறவுள்ளது. 05.09.1997 அன்று சர்வதேச ஒலிம்பிக் குழுவின் (IOC) யின் 106வது கூட்டம் சுவிற்சர்லாந்தின் லோசான் நகரத்தில் நடைபெற்றபோது, 2004ம் ஆண்டுக்கான ஒலிம்பிக்கை நடாத்தும் நாடுகள் தொடர்பான போட்டியில் கிரேக்கத்துடன், ஆர்ஜென்டீனா, தென்னாபிரிக்கா, இத்தாலி, சுவீடன் போன்ற நாடுகள் போட்டியிட்டன. எனினும் இதில் கிரேக்கம் வெற்றிபெற்று இம்முறை போட்டியை நடாத்துகின்றது. ஒலிம்பிக் போட்டியை ஆரம்பித்துவைத்த பெருமைக்குரிய கிரேக்க தேசத்திலேயே இம்முறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றமை குறிப்பிடக்கூடிய ஒரு விடயம்.

## ஒலிம்பிக் போட்டி வரலாறு...

புராதன கிரேக்கம் விளையாட்டு உலகிற்கு வழங்கிய மகத்தான சம்பவமான இந்த விளையாட்டின் ஆரம்பம் குறித்து பல்வேறு கருத்துகள் உலாவி வருகின்றன. கி.பி. 1370க்கு முன் ஒலிம்பிக்ஸ் என்ற சொல்லுடன் முதன் முதலாக வெளிப்பட்டது. பிலோபஸ் என்று பழங் காலச் சான்றுகளைக் காட்டி ஒரு சாரார் நிரூபிக்கின்றனர். சக்தியின் வடிவமான கிரேக்க கடவுள் ஹேர்குலிஸே ஒலிம்பிக்கை ஆரம்பித்தவன் என்று இன்னுமொரு சாரார் கூறுகின்றனர். எலிஸ் மன்னர் இனோமோசின் மகள் கிப்படோவின் திருமணத்தோடு தொடர்புடைய ஒரு போரை குறித்து ஹோமோரின் வரிகள் வாயிலாக அறிய முடிகிறது. எவ்வாறாயினும் ஒரு போராட்டத்தில் சிந்திய இரத்தத்தில் இருந்து ஒலிம்பிக்ஸ் மலர் விரிந்ததாகக் கூறலாம். அது சமாதானத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் ஓர் அடையாளமாக மாறியது வியப்பானது.




கி.மு. 786 இல் ஆல்டேய் நதிக்கரையில் அரங்கேறிய ஒலிம்பிக்கில் இருந்துதான் ஒலிம்பிக்ஸ் பற்றிய சான்றுகள் கிடைக்கின்றன. அப்போது உயிர் வாழ்ந்த அப்போலனியஸ் எனும் வரலாற்று ஆசிரியர் பலசான்றுகளை பாதுகாத்து வைத்திருந்தார். எவ்வாறாயினும் கி.மு.76 இல் புராதன ஒலிம்பிக் ஆரம்பமாகின்றது. கிரேக்க நாட்டின் மேற்கு பிலிப்பொனேஸியபவின் புண்ணிய, புராதன நகரங்களில் ஒன்று ஒலிம்பியா, தொடக்கத்தில் ஸ்டேடியன் என்னும் ஒரு போட்டியே இடம்பெற்றிருந்தது. ஸ்டேடியன் என்பது 186 வாரம் நீண்ட ஓட்டப் பந்தயமாகும். இப்போட்டியில் வெற்றிபெற்ற எலிஸ் நாட்டின் கொரோஸ் முதல் சாம்பியனாக பதிவு செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 60000 பார்வையாளர்கள் அமருவதற்கு வசதி படைத்த ஒலிம்பியாவின் சலவைக்கல் மைதானத்திலேயே போட்டிகள் நடைபெற்றன. தொடக்கத்தில் போட்டிகள் ஒரு நாளில் நிறைவடைந்த போதிலும் ஒரு மாதகாலம் இதனோடு தொடர்புடைய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆரம்பத்தில் இடுப்பில் மட்டும் சுற்றிய ஆடையுடன் களமிறங்கினர் தடகள வீரர்கள். பெண்களுக்கு போட்டியில் அனுமதியில்லை. கி.மு.720 இல் ஒரு ஓட்ட வீரின் அரையாடை அவிழ்ந்து விழுந்ததையடுத்து பங்கு பெறுபவர் அனைவரும் பூரண ஆடை அணிய வேண்டும் என்ற விதி வந்தது.

கி.மு.728 வரை போட்டிகள் ஒரு நாளுடன் நிறைவடைந்தன. 14ம் ஒலிம்பிக் அரை மைல் ஓட்டமும் 15ம் ஒலிம்பிக் இரண்டரை மைல் ஓட்டமும், 18ம் ஒலிம்பிக் பென்டதலனும் இடம்பெற்றன. குத்துச் சண்டை 23ம் ஒலிம்பிக்ஸில் அரங்கேறியது. 25ம் ஒலிம்பிக்ஸ் தான் குதிரைப் போட்டிகள் தொடங்கின. தடகள இனங்கள் முழுமை பெற்றது. 33ம் ஒலிம்பிக்ஸில் தான் தற்போதைய சாட்புட் போன்று கல்லெறிதலும், பரிதி வட்டம் வீசுதலும் புராதன ஒலிம்பிக்ஸில் இடம்பெற்றிருந்தன. தொடர்ந்து ஈட்டி எறிதலும் ஆரம்பமானது.

கி.மு.576ம் ஆண்டில் ஒலிம்பிக்கின் கீர்த்தி உலகமெங்கும் பரவியது. கிரேக்கர்கள் மட்டுமல்லாது பிற நாட்டு வீரர்களும் விளையாட்டு விழாவில் பங்குபற்ற ஆரம்பித்தனர். அனைத்து நாடுகளையும், ஒற்றுமைப்படுத்தும் ஓர் நட்புறவாக விரிவடைந்தது ஒலிம்பிக்.

சரித்திர ஆசிரியரான ஹ்ரோடோட்டஸ், தத்துவஞானி சோக்ரடீஸ், கிரேக்க கவி பின்டொர், மாவீரன் அலெக்சாண்டர் போன்றோர் புராதன ஒலிம்பிக்ஸின் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். பெண்கள் மைதானத்திற்குள் நுழைய அக்காலத்தில் அனுமதிக்கப்படவில்லை. இந்த விதியை மீறியவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாகினர். ரோட்சின் பெரனீஸ் இக்கதையை திருத்தி எழுதியவள். தனது மகன் பிஸிடோ ரெஸியுடன் ஒரு பயிற்சியாளர் வேடம் தாங்கி மைதானத்திற்குள் நுழைந்தாள். பெரனீஸ் குத்துச் சண்டையில் தனது மகன் இரண்டாம் இடம்பெற்ற போது தன்னை மறந்த பெரனீஸ் பயிற்சியாளர்களுக்கான வலயத்தையும் உடைத்து ஓடினாள். இதனிடையில் அவள் அணிந்திருந்த ஆடைகள் அவிழ்ந்து அவளது வேடம் கலைந்தது. பெரனீஸ் தண்டனையை ஏற்கத் தயாராக இருந்த போதிலும் அதிகாரிகள் அவளை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டனர். காரணம் அவள் தந்தை டயகோராஸ் மற்றும் சகோதரர்கள் ஒலிம்பிக்ஸ் சம்பியன்களாக இருந்தனர்.



பியர்ட் டீ குபொட்

கி.மு.394ல் ரோமபுரியுடன் ஆட்சியதிகாரியாக இருந்த தியொடோசயல் சக்கரவர்த்தி ஒலிம்பிக் போட்டியை தடைசெய்தார். கி.மு.393 இல் நடைபெற்ற 203ம் ஒலிம்பிக் போட்டியுடன் அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்கும் விளையாட்டுப் போட்டிகள் முற்றுப் பெற்றன. இந்தப் போட்டியை ண்டும் நடாத்துவதற்கு கிரேக்கர்கள் செய்த முயற்சிகள் தோல்வியைச் சந்தித்தன. எனினும் இறுதியில் பிரெஞ்சு காரரான பியர்ட் டீ குபொட்டின் என்பவரே இவ்விடயத்தில் வெற்றியடைந்தார். இவரே நவீன ஒலிம்பிக் தந்தையென்றும் அழைக்கப்படுகின்றார். 1894 யூலை 16ல் அவர் டர்பனில் விளையாட்டு ஆர்வலர்களின் ஒரு சர்வதேச மகாநாட்டை கூட்டினார். இதன்பின்னர் தான் மீண்டும் ஒலிம்பிக் போட்டிகள் 1896ம் ஆண்டு முதல் புதியவேகம் கொள்ளத் தொடங்கியது. ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாட்டைச் சேர்ந்த போட்டியாளர் ஆரம்ப நாளன்று சத்தியப்பிரமாணம் எடுப்பர். இதனை நவீன ஒலிம்பிக்கின் தந்தையான பியர்ட் டீ குபொட்டின் என்பவரே உருவாக்கினார். ஒலிம்பிக் சின்னம் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட ஐந்து வளையங்களாகும். இவ் வளையங்களின் வண்ணங்கள் நீலம், சிவப்பு, கறுப்பு, பச்சை, மஞ்சள் ஆகும். இந்த ஐந்து பின்னப்பட்ட வளையங்களும் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா எனும் ஐந்து கண்டங்களை குறிக்கின்றது. கடந்த 108 வருடங்களில் 27 ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று முடிந்துவிட்டன. இந்த ஆண்டு 28வது போட்டி ஆரம்பமாகின்றது.

| இலக்கம் | நடைபெற்ற ஆண்டு | நாடு | பங்குபற்றிய நாடுகள் |
|---|---|---|---|
| 01. | 1896 | கிரேக்கம் | 14 |
| 02. | 1900 | பிரான்ஸ் | 24 |
| 03. | 1904 | ஐ.அமெரிக்கா | 12 |
| 04. | 1908 | பிரித்தானியா | 22 |
| 05. | 1912 | சுவீடன் | 28 |
| 06. | 1916 | ஜேர்மனி உலகயுத்தம் காரணமாக நடைபெறவில்லை | |
| 07. | 1920 | பெல்ஜியம் | 29 |
| 08. | 1924 | பிரான்ஸ் | 44 |
| 09. | 1928 | நெதர்லாந்து | 46 |
| 10. | 1932 | ஐ.அமெரிக்கா | 37 |
| 11. | 1936 | ஜேர்மனி | 49 |
| 12. | 1940 | உலகயுத்தம் காரணமாக நடைபெறவில்லை | |
| 13. | 1944 | உலகயுத்தம் காரணமாக நடைபெறவில்லை | |
| 14. | 1948 | பிரித்தானியா | 59 |
| 15. | 1952 | பின்லாந்து | 69 |
| 16. | 1956 | அவுஸ்திரேலியா | 72 |
| 17. | 1960 | இத்தாலி | 83 |
| 18. | 1964 | ஜப்பான் | 93 |
| 19. | 1968 | மெக்சிக்கோ | 112 |
| 20. | 1972 | ஜேர்மனி | 121 |
| 21. | 1976 | கனடா | 92 |
| 22. | 1980 | ரஷ்யா | 80 |
| 23. | 1984 | அமெரிக்கா | 140 |
| 24. | 1988 | கொரியா | 159 |
| 25. | 1992 | ஸ்பெயின் | 169 |
| 26. | 1996 | ஐ.அமெரிக்கா | 197 |
| 27. | 2000 | அவுஸ்திரேலியா | 200 |
| 28. | 2004 | கிரேக்கம் | |
| (29. | 2008 | சீனா) | ? |

# நத்தார் தினத்தை முன்னிட்டு

## Financial Consulting Gmbh & Sarah Star Thun

## இணைந்து வழங்கும்

## சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.ஏச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்

## Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்



Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

**சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்**

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.

அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி 4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி - (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி 4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Solo Movies GmbH
Audio.Video.Kommunikationtechnik
Swiss-London-Srilanka
Tel.032 652 52 45.078 733 30 76
www.solomovies.com
Mail:vasi@solomovies.ch

Ammu Travels

S.K.TRADING GMBH
Quellen str 1.
8005 Zurich
Tel.01/ 272 43 36. 01 272 49 90
01/272 4330. Fax.01/ 273 43 32

Sri Sai Enterprise
Sihlhallen str 19
8004 Zurich
Tel.01/240 05 55.01/431 99 67.
Fax 01/43199 69.

சிகரம்
Schoenegg str.15
8004 Zürich

Zweierstr. 55
8004 Zürich

Jumbo Travels
Badenerstr. 125
8004 Zürich

Mohan Jewellery & Textiles

Sakthy Jewellery
Elisabethenanlage 11
4051 Basel

Basel SPT Textile & Jewellery
Elisabethenanlage 9
4051 Basel

Scel Credit

Ravi Jewellery
Knuppenmattstr 2
3414 Oberburg

Jasijananth Travels&Tour GmbH

Suji Jewellery
Neuengasse Passage 3
3001 Bern

AMBAL STORE
அம்பாள் ஸ்ரோர்ஸ்



INDIAN ASTROLOGER

# சாய்பாபா

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**

**(West London) South hall**


**Contact:**

**Tel: 07932724065 / 07939613067**



# INDIAN ASTROLOGERS FROM GENERATIONS

ஓம்





இந்தியாவில் பல தலைமுறைகளாக கைரேகை, முகநாடி எண்கணிதம், மாந்ரீகம், மருத்துவம் போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும்

**பண்டிட் குமார சுவாமி அவர்கள்**
**பண்டிட் கிருஷ்ணா அவர்கள்**

பாரிஸ் மற்றும் ஜெர்மனி நகரங்களுக்கு வருகை தந்துள்ளனர்.
அம்பாளின் ஆருள்வாக்காலும் இவர்கள் தம் அனுபவத்தாலும் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழ்க்கையில் வளம் பெற்றுள்ளனர்.

நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை ஆகிய முக்கால பலன்கள் தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம் மற்றும் உங்கள் பிரச்சனைகளை தெரியப்டுத்தி பரிகாரமும் கூறுகின்றனர்.

இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி சுவாமியை அணுகி வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள்.

*சுவாமிகளை அணுக வேண்டிய முகவரி*

***Mr. Pundit Krishna***
19 RUE CAIL, ESWARA, TAMIL ALAYAM
LA CHAPELLE 75010 Paris.
Métro: La Capelle, Gare du Nord
Port : 06 23 28 09 22
Tél: 01 53 26 59 21

***Mr. Pundit Kumar Swamy***
MUNCHNER STR. 18
INDAN TRAVEL, CORNER NEAR
60329 FRANKFURT (MAIN)
Tel : 01 60 99 21 38 63




# பூபாளம் கணினிச் சேவைகள்

***Ours is not a business, its our profession***

**இது வியாபாரமல்ல; எங்கள் தொழில்**

**கணினித் துறையில் கல்விசார் தகைமையும், தொழில்நுட்ப அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பவியலாளரால்**



1. Cyber cafe கட்குத் தேவையான வலையத் தொடர்புகள், உங்கள் இல்லங்களுக்குத் தேவையான வலையத் தொடர்புகள், இணைய வலையத் தொடர்புகள் போன்றவற்றை ஏற்படுத்தியும் தருவோம்.

2. உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள், உங்கள் தேவைகளுக்கேற்ப, கணினிகளைப் புதிதாகத் தயாரித்துத் தருகின்றோம்.

3. திருத்த வேலைகள் எதுவானாலும் (Desktops or postable compeuters) அவற்றைச் சிறந்தமுறையில் சீர் செய்து தருவோம்.

**4. கணினிகள் சம்பந்தமான ஆலோசனைகள்**

**5. கணினி**




5-1. உதிரிப்பாகங்களையும்



5-2. அச்சு உபகரணங்களுக்குரிய மை வகைகளையும்




5-3. Video audio CD களையும்




5-4. DVD (Digital Versatile device - பலதிறன்கொண்ட சாதனம்) போன்ற பதிவு செய்யக்கூடிய CD களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




எங்களது தகைமையும், அனுபவமும் வாய்ந்த தொழில் நுட்பவியலாளரின் சேவையை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கீழ்க்காணும் விலாசத்துடன் நேரிலோ, தொலைபேசிமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்

***22, Rue Perdonnet, 75010 Paris - Tél: 01 40 05 95 15 / 06 62 23 36 86***

# 7ம் ஆண்டு வீரவணக்கம்

## கப்டன் செல்லக்கிளி

**(இலங்கைநாதன் காண்டீபன்)**

(காடிவளை இளவாலை - யாழ்ப்பாணம்)

(மல்லாகம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.)

ஈழத்தின்
இதய பூமியிலே
இள வேங்கையாய்
களமாடி நிமிர்ந்தாய்..
எதிரிகள் முன்னே
நெருப்பாகி எழுந்தாய்.
எங்களின் முன்னே
பூவாகிச் சிரித்தாய்.
விடியலின் நாளதை
எண்ணியே நடந்தாய்.
மல்லாக மண்ணிலே –ஒருநாள்
சமராடிச் சாய்ந்தாய்.
மக்களின் மனதிலே
சிலையாகி ஓய்ந்தாய்
மாவீரனே!
விடியலின் வாசல்தான்
உங்கள் மரணங்கள் என
என்றென்றும் காத்திருப்போம்.

தாயின்
மடியில்:
03
.
12
.
1974
***
மண்ணின்
மடியில்:
05
.
08
.
1997



தகவல்:
- ஜெகன்


# உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?

**தலைமுடி தொடர்பான வேறேதும் பிரச்சினைகளா?**

இன்றே உபயோகியுங்கள் NATURINA®

**இது ஓர் புதுமையான, இயற்கை மூலிகைகளைக்கொண்ட ஓர் துரித நிவாரணி!**

* Naturina வின் புதிய தயாரிப்புக்கள். முன்னரைவிட உயர்ந்த தரத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன.
* தலைமுடிகளைப் பராமரிப்பதில் கடந்த 5 வருடங்களாக ஐரோப்பாவின் முதல்தர தயாரிப்பாக விளங்குவது Naturina தயாரிப்புக்களே!
* தலைமுடி உதிர்வு, முடி மெல்லியதாக மாறுதல், முடியில் ஏற்படும் அழுக்கு, பொடுகு போன்றவை அறவே நீக்கி தலைமுடியை நன்றாக வளரச்செய்கிறது.
* முற்றிலும் இயற்கையானது!
* பக்கவிளைவுகளற்றது.
* வேறுபட்ட வடிவங்களில் - மாறாத தரத்தில் உங்கள் தலைமுடிகளை பராமரிக்கச் சிறந்த ஓர் நிவாரணி - Naturina




**Naturina vital & beautiful**

* *Naturina* வின் புத்தம்புதிய அறிமுகம்!
* உங்களது முகத்தில் அல்லது தோலில் கரும்புள்ளிகள் ஏதும் காணப்படுகின்றனவா?
* இன்றே *Naturina pigment Bleachinng emulsion* ஐ உபயோகியுங்கள்!
* இயற்கையான மூலிகைகளைக் கொண்டது, பக்க விளைவுகள் அற்றது!
* கரும்புள்ளிகள், சுருக்கங்கள் என்பவற்றை இல்லாமற் செய்து முகத்தை அழகுறச் செய்ய ஓர் சிறந்த நிவாரணி.




**குறிப்பு:** ஐரோப்பாவில் வாழும் யாவரும் Naturina தயாரிப்புக்களை விற்பனை செய்ய முடியும். நீங்கள் Naturina தயாரிப்புக்களை விற்க விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**Intercare Handels GmbH**
In der Fuchshoehle 4, 59069- Hamm- Germany
Tel: 0049 1805 915910
Fax: 0049 1805 915920
Internet: www.naturina.de

**தற்போது!**
**விசேட கழிவுகளும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன!!**

# அண்டன் பாலசிங்கத்தின் விடுதலை - 2

(திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் விடுதலை நூல் பற்றிய இந்த நயப்புரை http://thoughtsintamil.blogspot.com என்னும் வலைப்பதிவில் இருந்து நன்றியுடன் மீள்பிரசுரமாகின்றது. இந் நூல்நயம் பரந்த வாசிப்பு அனுபவமும், இணைய வலைத் தளங்களில் நன்கு அறிமுகமுமான தமிழகத் தமிழர் ஒருவரால் எழுதப்பட்டது என்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது. நூலின் அட்டை எம்மால் இணைக்கப்பட்டது)


(சென்ற இதழின் தொடர்ச்சி)

இந்த இரண்டு கட்டுரைகளையும் புத்தகத்தின் பாகம் 1 என்று குறிப்பிடலாம். இதைத் தொடர்ந்து வருவது சற்றே கனமான இலக்கிய தத்துவார்த்த சிந்தனைகள் பற்றிய விளக்கக் கட்டுரைகள். இவைதான் 'வெளிச்சம்' ஏட்டில் தொடராக வந்தவை. சிக்மண்ட் பிராய்ட், கார்ல் மார்க்ஸ், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, ஹெகல், அல்துசார், நீட்சே, ஹெய்டெக்கர், ஃஹுசெர்ல், ஜான் போல் சாத்தர், ஆல்பர்ட் கமு, ஃபுகுயாமா, சோம்ஸ்கி, சாமுவேல் ஹண்டிங்டன், மிஷெல் ஃபூக்கோ என்று பல இலக்கிய தத்துவார்த்தவாதிகளின் தத்துவங்களைப் பற்றிய எளிய அறிமுகம் நன்கு எழுதப்பட்டுள்ளது.

மிக முக்கியமான கட்டுரைகளாக மூன்றைக் குறிப்பிடுவேன். புத்தகத்தின் கடைசிக் கட்டுரையான 'மனிதத்துவம், சாத்தர் பற்றிய ஒரு (sic) அறிமுகம்' சாத்தர் (Jean Paul Satre) பற்றி தமிழில் வெளிவந்த மிகச்சிறந்த எளிய முறையில் எழுதப்பட்ட ஒரு கட்டுரை எனலாம். சாத்தரின் இருத்தலியக் கோட்பாடுகள் குறித்த விளக்கம், சாத்தரது 'குமட்டல்' (Nausea) எனும் நாவல் பற்றிய அறிமுகம், தன் நாவலையே பிற்காலத்தில் சாத்தர் கடுமையாக விமர்சித்தது நோபல் பரிசை ஏற்க மறுத்தது சாத்தரின் மார்க்ஸியக் கருத்துகள் மரபுவாத கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளை எதிர்த்து வாழ்க்கை முழுதும் எழுத்தால் போராடியது, எப்படி ஒரே நேரத்திலேயே இருத்தலியம் மற்றும் மார்க்ஸியம் என இரண்டிலும் வெகுவாகக் கருத்துக்களை முன்வைக்க முடிந்தது (இரண்டையும் ஒட்டவைக்க முயன்றது) ஃபிரான்சுக்கு எதிராக அல்ஜீரியப் புரட்சியாளர்களை ஆதரித்தது என அவரது வாழ்க்கையையும் கொள்கைகளையும் நிறைவாக விளக்குகிறார்.

சாத்தரது எழுத்துகளைப் படிப்பது சிரமமானது. அவரது 'Being and Nothingness'என்னும் 800 பக்கப் புத்தகத்தை சில நாட்களாக வைத்துக் கொண்டு தடுமாறிக்கொண்டிருக்கிறேன். பாலசிங்கத்தின் கட்டுரையைப் படித்த பின்னர் மீண்டும் இந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்க முடியும் என நினைக்கிறேன். மேற்படிக் கட்டுரையில் குமட்டல் நாவலின் சுருக்கத்தை மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். Fair quotation எனும் கணிப்பில் அந்த முழுச் சுருக்கத்தையும் வெளியிடுவது நியாயமானதா என்று தெரியவில்லை. வேண்டுமானால் பிறகு தனியாகத் தட்டச்சிடுகிறேன்.

இரண்டாவதாகக் குறிப்பிடப்படவேண்டியது ஆல்பர்ட் கமுவைப் (Albert Camus) பற்றிய 'அர்த்தமும் அபத்தமும்' எனும் சிறிய கட்டுரை. 'அபத்தமான உலகில் அர்த்தமற்று வாழும் அபத்த நாயகனாக (Absurd Hero) அவர் (கமு) மனிதனைக் கண்டார். இந்த அபத்த மனிதனின் அவலமான அர்த்தமற்ற வாழ்வுபற்றி ஆக்ரோஷத்துடன் எழுதினார்.' என்கிறார் பாலசிங்கம். இயந்திர உலகில் வாழும் நவயுக மனிதனின் அலுப்புத் தட்டும் உழைப்பும் அவசர வாழ்வும் அபத்தமானது என்பது கமுவின் கருத்து. இந்த அசட்டுத்தனமான உழைப்பின் குறியீட்டுச் சின்னமாக கிரேக்க இதிகாசத்தின் சிசைப்பஸை முன்வைக்கிறார் கமு. 'மனித வாழ்வு அபத்தமானது, துன்பம் நிறைந்தது, நிலையற்றது. இதுதான் இருப்பின் மெய்நிலை. இந்த இருப்பு நிலையிலிருந்து எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது. (ஆயினும்) இந்த வாழ்நிலையை மனிதன் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். அபத்தத்திலும் அர்த்தமின்மையிலும் அர்த்தத்தைக் காண்பதுதான் அர்த்தமான வாழ்வாக அமையும் என்பது அவர் கருத்து. Myth of Sisyphus என்ற அவரது (கமுவின்) தத்துவ நூல் மானிடத்திற்கு இந்தத் தரிசனத்தையே தருகிறது.' என்கிறார் பாலசிங்கம்.



கமுவின் 'கிளர்ச்சிக்காரன்' (The Rebel) என்ற தத்துவ நூல் அரசியல் உலகத்தைப் பற்றிய கடுமையான விமரிசனத்தை முன்வைக்கிறது. மத சித்தாந்தங்களை மட்டுமின்றி கம்யூனிச உலகையும் கடுமையாகச் சாடியது இந்நூல். இதனால் கம்யூனிஸ்ட் தோழர்கள் பலரது நட்பையும் நீண்ட கால நண்பர் சாத்தரின் நட்பையும் கூட கமு இழக்க நேரிட்டது.

**இந்தப் புத்தகம் தமிழில் எழுதப்பட்டுள்ள மிக முக்கியமான புத்தகம் என்று நான் கருதுகிறேன். மேற்கத்தியத் தத்துவ உலகம் பற்றி அறிய விரும்பும் தமிழர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டிய முதல் புத்தகம் இதுவாக இருக்கலாம். இந்தச் சிந்தனைகள் பற்றி இந்த அளவிற்கு எளிமையாகவும் அதே சமயம் செறிவாகவும் தமிழில் வேறு புத்தகங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆழ்ந்த படிப்பும் அதை வெளிச்சொல்லும் திறமையும் வாய்ந்த பாலசிங்கம் தமிழ்ச் சிந்தனை உலகில் மிக முக்கியமானவர் என்பதிலும் வேறு கருத்து இருக்க முடியாது.**

## அண்டன் பாலசிங்கத்தின் விடுதலை - 3

மூன்றாவதாகக் குறிப்பிட வேண்டியது 'உலக வரலாறும் மனித விடுதலையும்' என்னும் கட்டுரை. இந்த நீண்ட கட்டுரையில் பாலசிங்கம் ஹெகலின் இயங்கியலில் (dialectics) தொடங்கி அங்கிருந்து கார்ல் மார்க்ஸின் தத்துவத்துக்குத் தாவுகிறார். மார்க்ஸைப் புரிந்து கொள்ள ஹெகலை முதலில் புரிந்துகொள்ள வேண்டும் என்று லெனினை மேற்கோள் காட்டுகிறார். ஹெகலின் கருத்து 'வரலாறு என்பது ஆன்மத்தின் விடுதலை நோக்கிய நகர்வு'. மார்க்ஸ் ஹெகலின் எழுத்துகளை 'ஆன்மீகவாதம்' என்றும் 'புதிரான புராணக்கதை' என்றும் விமர்சித்தபோதும் அவரது இயங்கியல் கோட்பாட்டை வெகுவாகப் புகழ்ந்தார். 'ஹெகலின் கருத்துலகத்திலிருந்து இயங்கியலைப் பிரித்தெடுக்கும் அறுவைச் சிகிச்சையை' மார்க்ஸியம் என்கிறார் பாலசிங்கம். 'இயங்கியலின் அடிப்படையில் ஆன்மத்தின் சூட்சுமத்தை விளக்க முனைந்தார் ஹெகல். அதே இயங்கியல் விதிகளைக் கொண்டு இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார் எங்கல்ஸ். அதே விதிகளைக் கொண்டு சமூக வரலாற்று இயக்கத்தை விளக்க முனைந்தார் மார்க்ஸ்.' என்கிறார் பாலசிங்கம்.

கட்டுரையில் தொடர்ந்து மார்க்ஸின் கொள்கைகளை விவரித்து அதன்மீதான் அல்துசாரின் விமரிசனங்களைப் பற்றியும் விளக்குகிறார். கார்ல் மார்க்ஸின் 'மூலதனம்' முதலாளிய சமூகத்தின் உற்பத்தி வடிவத்தை வகிர்ந்து காண்பிப்பது முதலாளிய உற்பத்தி முறையில் நிலவும் முரண்கள் இந்த முரண்களால் முதலாளியம் பெரும் நெருக்கடிக்கு ஆளாகி பின்னர் சிதைந்து போகும் என்று எழுதியுள்ளது பற்றி விவரிக்கும் பாலசிங்கம் ஏன் மார்க்ஸின் தீர்க்கதரிசனம் பலிக்கவில்லை என்பதையும் விளக்குகிறார்.

மார்க்ஸின் கொள்கைகளைத் தொடர்ந்து ரஷ்யா - சீனா நாடுகளில் ஏற்பட்ட கம்யூனிச அரசுகள், நவ-மார்க்ஸியக் கருத்துகள் ஆகியவற்றை பாலசிங்கம் விவரமாக ஆய்வு செய்கிறார். இந்த ஆய்வின் மூலம் சோசலிசம் சிதைந்ததற்கான காரணங்களையும் முன்வைக்கிறார்.

தொடர்ச்சியாக புக்குயாமாவின் 'சமூகப் பொருளுற்பத்தி வடிவங்களின் படிநிலை வளர்ச்சியின் உச்சமாக முதலாளியமும் அரசியலமைப்பின் உச்சமாக லிபரல் ஜனநாயகமும் உருவாக்கம் பெற்றதால் உலக நெருக்கடி நிலைமைகள் தணிந்து மனித வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது' என்னும் கருத்து இன்று பொய்த்துவிட்டது என்கிறார் பாலசிங்கம். 'மானிட சமூகம் இன்னமும் உன்னதம் பெறவில்லை. மனிதர்களிடையே பிணக்குகள் இன்னமும் தீர்ந்துவிடவில்லை. முரண்பாடுகள் நீங்கிவிடவில்லை. மானிடம் இன்னும் விடுதலை பெறவில்லை.' என்னும் பாலசிங்கம் சாமுவேல் ஹண்டிங்டனின் நாகரிகங்களின் மோதல் (Clash of Civilizations) எனும் கோட்பாட்டை அடுத்து அறிமுகப்படுத்துகிறார்.

'நாகரிகங்கள் மத்தியிலான முரண்பாடும் மோதலுமாகவே இனப் போர்கள் வெடிக்கின்றன. நாகரிகங்களின் வளர்ச்சியும் எழுச்சியும் அவை மத்தியில் நிலவும் உறவு முறைகளுமே எதிர்கால உலக ஒழுங்கமைப்பையும் மனித வரலாற்றின் போக்கையும் நிர்ணயிக்கும் என்பது ஹண்டிங்டனின் வாதம்' என்கிறார் பாலசிங்கம். ஆனால் இந்தக் கொள்கை மூலம் இன்றைய உலகில் உள்ள பல்வேறு அரசியல் நெருக்கடிகளை விளக்கி விட முடியாது என்கிறார் பாலசிங்கம். 'இன விடுதலைப் போராட்டங்களை பண்பாட்டுத் தனித்துவத்திற்கான போராட்டமாக மட்டும் வரையறுத்துப் பார்க்க முனைவது தவறு. அந்நிய அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக தேச சுதந்திரம் வேண்டி நடைபெறும் விடுதலைப் போராட்டங்களின் ஆழமான பரிமாணங்களை அவர் (ஹண்டிங்டன்) கண்டு கொள்ளவில்லை.' என்கிறார் பாலசிங்கம்.


தொடர்ச்சி 28ம் பக்கம்...

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்
தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91
எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE



ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.



Pub-Fr


சுருக்கமாக(IN BRIEF) என்ற பீடிகையுடன் ஆசிரியர் நூலின் 124 ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்: முதன்முதலாக கிறிஸ்தவ பாதிரிமார் இந்த மண்ணில் கால்பதித்தவுடன் தீவிர மதமாற்றப் பிரச்சாரத்தைத் தொடங்கினர். ஆனால் இதில் மிகவும் குறுகியளவு வெற்றிதான் அவர்களுக்குக் கிடைத்தது. தங்களுடைய தந்திரோபாயத்தை மாற்றி சிறுபராயத்தினருக்குக் கல்வி புகட்டும் நடவடிக்கைகளையும் பள்ளிகளில் தங்குமிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த பின்பும் எதிர்பார்த்ததிலும் குறைவான பலன்தான் கிடைத்தது. தமிழ் பிரதேசங்களில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பிரயத்தனங்கள் தோல்விகண்டபோது அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சைவ மதத்திற்கு எதிரான வன்மையான தாக்குதல் பிரச்சாரத்தை ஆரம்பித்தனர். அறிஞர்கள் முடிவு. [ஆதாரம்: பண்டிதமணி கணபதிப்பிள்ளை]

பிரிட்டிசார் தமது மதச் சுதந்திர கொள்கையை பகிரங்கமாக வெளிப்படுத்தியபோது பல சிதைந்த சைவக்கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டன. புதிய கோயில்களும், மடங்களும் கட்டப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு சற்றுமுன் ஏறத்தாழ ஒரு சைவ மறுமலர்ச்சியே ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆசிரியர் குணசிங்கம் சுட்டிக்காட்டுவதே போல், இது கிறிஸ்தவ மத அமைப்புக்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அவர்கள் தமது பிரச்சாரத்தின் தன்மையையும் வீச்சையும் விரிவாக்கினர். இதற்குப் பதிலடியாக சைவர்கள் தமது எதிர் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர்.

எதிர்ப்பியக்கத்தின் முன்னோடி நடவடிக்கையாக செப்டெம்பர் 1842 இல் ஒரு பொதுக் கூட்டம் வண்ணார்பண்ணை சிவன் திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோயில் மண்டபத்தில் சைவத் தமிழ்ப் பிரச்சாரம் நடத்தப்பட்டதாக 1890 இந்து சாதன இதழ்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பிலும் அதேவகை நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக 1889, 1890 இந்து சாதன இதழ்கள் செய்தி வெளியிட்டன. யாழ்ப்பாணத்தில் நாவலர் தொடக்கிய கிறிஸ்தவ மத எதிர்ப்பு இயக்கம் தமிழர் தேசத்தின் பிற பகுதிகளுக்கு மிகத் தீவிரமாகப் பரவியது. தமிழ் மக்களின் ஒன்றிணைவுப் பிணைப்பிற்கு இது அடித்தளமாக அமைந்தது என்று ஆசிரியர் குணசிங்கம் சுட்டிக்காட்டுகிறார்.

1864 இல் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட பரமதகண்டன சுயமதஸ்தாபன சங்கத்தின் பாணியில் திருகோணமலை நகரில் சைவப்பிரகாச சமாஜம் என்ற சைவ

தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதமும் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வும்' என்கின்ற வரலாற்று நூல் பலரின் மிகுந்த கவனத்திற்குரியதாகியுள்ளது. ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த இந் நூல் தற்போது தமிழ் வடிவம் பெற்று இவ்வருட ஆரம்பத்தில் தாயகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுத் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுக விழா நடை பெற்று வருகிறது. இவ்வேளையில் அந்நூல் குறித்தான ஆழமான மதிப்புரை ஒன்றை ஈழநாதம் இதழில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இந்த வரலாற்று நூலில் நீங்கள் இலகுவாக நுழைந்துகொள்ள இக்கட்டுரை உதவும் என நினைக்கின்றோம். [ஆ-ர்]




# இலங்கைத் தமிழர் தேசியம்

## அதன்தோற்றம் பற்றிய ஆய்வு

ஆக்கியோன்: முருகர் குணசிங்கம் வெளியீடு: எம். வீ பிரசுரம், சிட்னி மொழி ஆங்கிலம் (அவுஸ்திரேலியா)

ஆனால் கிடைத்த புள்ளி விவரங்களின்படி அதற்கும் தோல்வி தான் கிடைத்தது.

மறுவளத்தில் கிறிஸ்தவத்திற்கு சைவர்களை வர்ச் செய்வதற்காக அவர்கள் நடத்திய பிரச்சாரங்கள் தமிழ் தலைமை வர்க்கத்தை தட்டியெழுப்பியதோடு சைவத்தையும் சைவத்தோடு தொடர்புடைய பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி தூண்டியது, இத்தொடர்பில் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் வடக்கு -கிழக்காக வாழ்ந்த தமிழ் மக்களை ஒன்றிணைத்தது.

பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையில் ஆரம்பித்தவுடன் முதன் முதலாக இங்கு வந்து கிறிஸ்தவ மதத்தை பரப்பும் நடவடிக்கையைத் தொடங்கியவர்கள் மூன்று ஜேர்மன். பாதிரிமார் என்பது வரலாறு. இவர்களை இலண்டன் மிசனரி கழகம் (LONDON MISSIONARY SOCIETY) 1804 ஆம் ஆண்டு அனுப்பி வைத்தது. இவர்களுடைய முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன. 1812-1818 காலப்பகுதியில் இங்கிலாந்தின் வெஸ்லியன் மிசனரிமாரும் [மறுபெயர் மெதடிஸ்ற் மிசன்] சி.எம்.எஸ் என்று சுருக்கமாக அழைக்கப்படும் சேர்ச் மிசனரி கழக மிசனரிமாரும் (CMS= CHURCH MISSIONARY SOCIETY OF THE CHURCH OF ENGLAND), ஏ.சி.எம் எனப்படும் அமெரிக்கன் சிலோன் மிசன்[ACM-AMERICAN CEYLON MISSON) பாதிரிமாரும் வந்து சேர்ந்தனர்.

மெதடிஸ்ற், சி.எம்.எஸ், அமைப்புக்கள் தீவு பூராகவும் தங்கள் கல்விச்சாலைகளையும் கோயில்களையும் அமைத்து மதமாற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். எ.சி.எம். அமைப்பு இதற்கு மாறாக தனியே யாழ் தீபகற்பத்துடன் தனது நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டது. இதற்குக் காரணம் தெரியவில்லை. பிரிட்டிஷ் அரசு அமெரிக்கர்களுடைய மதமாற்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவு தராமல் யாழ் தீபகற்பத்தினுள் முடக்கி வைத்ததாக ஒரு செய்தி நிலவுகின்றது.

மேற்கூறிய அமைப்புக்கள் யாவும், ஏ.சி.எம் உட்பட சிறந்த புரிந்துணர்வுடன் 'புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம்' என்ற குடையின் கீழ் இயங்கின. அவையாவும் கத்தோலிக்க மற்றும் சைவ மதத்தினரை தமது பொது எதிரியாகக் கருதினர். இவர்களை மத மாற்றம் செய்வதே தமது பொதுக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

தமது மத, கலாசார அடையாளங்கள் பறிபோவதை உணர்ந்த தமிழ்ப் பிரதேசங்களின் தலைமை வர்க்கம் இச்சவாலை எவ்வாறு எதிர்கொண்டது? ஒரு சமூகத்தின் தேவைக்குப் பொருத்தமான தலைவன் அந்தச் சமூகத்திலேயே தோன்றுவான் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி. அப்படித் தோன்றத் தவறின் அந்தச் சமூகம் அழிந்துவிடும் அல்லது தனது பாரம்பரிய அடையாளங்களை இழந்துவிடும்- இரண்டும் ஒன்று தான்.

மதமாற்றங்கள் தொடங்கிய காலத்தில் சில முணு முணுப்புக்கள் தோன்றின. முத்துக்குமார கவிராசர் [பி 1780 -இ 1851] ஜானக்கும்மி, ஜேசுமத பரிகாரம் என்ற இரு கவிதை நூல்களை வசதி படைத்தோர் உதவியுடன் சென்னையில் பதிப்பித்து 1827இல் வெளியிட்டார். அமெரிக்க மிசனரிமார் கந்த புராண நூலுக்கு எதிரான பிரச்சாரங்களைத் தொடுத்தபோது பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்து கலாச்சாரம் கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது கோயிலில் நடைபெற்றது. எடுக்கப்பட்ட குலத்தோருக்கு கல்வி வழங்கி மதமாற்றத்தைத் தடுக்கும் திட்டம். கூட்டத்தில் 200 வரையிலான பெரியோர் கலந்து கொண்டனர். பணவசதி படைத்த வண்ணார்பண்ணைச் செட்டிமார் இதிலடங்குவர். அச்சு யந்திரம் வாங்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேறியது.

ஆனால் நாவலர் தலைமை ஏற்கும்வரை மேற்கூறிய கூட்டத் தீர்மானங்கள் தீர்மானங்களாகவே இருந்தன. ஆறுமுக நாவலர் அப்போது மேற்கூறிய கூட்டத்தில் பங்குபற்றவில்லை. அவர் மத்திய கல்லூரியில் தனது படிப்பை முடித்துக்கொண்டு அதே கல்லூரியில் கீழ் வகுப்பு ஆங்கில ஆசிரியராகவும் மேல் வகுப்பு தமிழ் ஆசிரியராகவும் கடமையாற்றினார். சைவத்தைப்பற்றி தீவிர அக்கறை காட்டினாலும் அவர் கூட்டங்களில் கலக்கும் அளவுக்கு வளரவில்லை.

தலைமை ஆசிரியர் பீற்றர் பெர்சிவல் ஊதியத்தைக் கூட்டித் தருவதாக உறுதிமொழி வழங்கியும் கேளாது செப்டெம்பர் 1848 இல் நாவலர் ஆசிரியர் தொழிலைக் கைவிட்டார். 14 வருடங்களை அவர் மத்திய கல்லூரிச் சூழலில் செலவிட்டிருந்தார். கிறிஸ்தவ மதகுருமாரின் தந்திரோபாயங்களைப் புரிந்துகொள்ள அது போதுமானதாக இருந்தது. தன்னைச் சைவத் தொண்டிற்கு அர்ப்பணிக்கும் நோக்கில் நாவலர் பிரமச்சாரிய விரதம் பூண்டவர். கிறிஸ்தவ முறைகளைப் பின்பற்றித் தொடர்ச்சியான சைவ மதப் பிரசங்கம் செய்வதற்கு நாவலர் திட்டமிட்டார்.

18 டிசெம்பர் 1847 இல் நாவலருடைய முதலாவது பிரசங்கம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மண்டபத்தில் நடைபெற்று, தொடர்ச்சியாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலையில் நடைபெற்றது. ஒரு வருடம் முடியுமுன் அவர் தனது ஆசிரியர் தொழிலுக்கு முழுக்குப் போட்டார். அவரைச் சுற்றி சீடர் கூட்டமும் சைவ அபிமானிகளும் செல்வப் பெருக்குடைய செட்டிமாரும் திரண்டனர்.

கிறிஸ்தவ மதப் பரப்பலைத் தடுத்து நிறுத்த நாவலர் எடுத்த உத்திகள் பின்வருமாறு: பிரசங்கம் மூலம் பிரச்சாரம், துண்டுப் பிரசுரம் மூலம் கண்டனம், பள்ளிகள் மூலம் சைவத் தமிழ்க் கல்வி. இதை அவர் தீபகற்பத்திலும், தமிழ்நாட்டிலும் நிறைவேற்றினார். யூலை 1849 இல் அவர் சென்னைப் பட்டினம் சென்று ஒரு அச்சு யந்திரத்தைக் கொள்முதல் செய்தார். 'வித்தியா அனுபாலன யந்திர சாலை' என்ற பெயருடன் அதை வண்ணார் பண்ணையில் நிறுவினார். தமிழ் நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் என்பன இங்கு பிரசுரமாகின.

நாவலர் சிவபதம் அடைந்த பின்பும் [டிசெம்பர் 5 1879, நட்சத்திரம் மகம், திங்கட்கிழமை, பிறப்பு டிசெம்பர் 18 1822, நட்சத்திரம் அவிட்டம் புதன்கிழமை] அவர் தொடக்கிய பணிகள் சீடர் முலம் தொடர்ந்தன. அவருடைய மாணவரும் மருகருமான பொன்னம்பலம்பிள்ளை சைவசித்தாந்தப் பேச்சுக்களையும், இராமாயணம், சீவகசிந்தாமணிப் பேருரைகளையும் யாழ்ப்பாணத்தில் நடத்தினார்.

1889 இல் இருமொழிப் பத்திரிகையான இந்துசாதனம் [ஆங்கிலம் [HINDU ORGAN] தொடங்கப்பட்டது, இன்றும் வெளிவருகின்றது. 1877 இல் இலங்கைநேசன் என்ற பத்திரிகையும் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டது, இது நின்றுவிட்டது. இரண்டும் நாவலர் மரபில் குரல் கொடுத்தன.

த் தமிழ் அமைப்பு 1890 இல் அமைக்கப்பட்டது. சைவத் தமிழ் விழிப்புணர்வு யாழ்ப்பாணத்தில் ஒரு சிலரால் ஆரம்பிக்கப்பட்டது என்பது உண்மை. நாளடைவில் அது வெகுஜன இயக்கமாகவும் கிழக்குவரை வியாபித்தது என்பதுவும் மறுக்க முடியாத உண்மையாகும். தமிழ்த் தேசிய ஊற்று (THE FOUNTAIN - HEAD OF TAMIL NATIONALISM)யாழ்ப்பாண தீபகற்பத்தில் என்போர், அதனுடைய பரப்பு வட-கிழக்கிற்கு அப்பாலும் நீடிப்பதாகவும் ஏற்றுள்ளனர்.

நாவல் தொடக்கிய பணியின் வலிமையை, 1897 ஆம் ஆண்டின் அமெரிக்க மிசன் அறிக்கையிலிருந்து உணரலாம். கிறிஸ்தவ பூமியில் சைவம் தழைத்தோங்குகின்றது. எமது வழியில் சைவம் எதிர்த்து நிற்கின்றது. மிசன் பள்ளிகளில் படித்த சைவத் தலைவர்கள், மிசன் வழிமுறைகளைப் பின்பற்றி தாமே சேகரித்த நிதி மூலம் கிராமப் பள்ளிகள், கல்லூரிகள், கட்டிடங்கள் என்பனவற்றை அமைக்கின்றனர். சைவமதப் பிரச்சாரத்திற்காக கிராமந்தோறும் ஆட்களை நியமித்துள்ளார், கூட்டம் போட்டு துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கின்றனர். இலக்கிய சொற்பொழிவாற்றுகின்றனர். தமது மதத்திற்கு ஆபத்து என்றவுடன் எதிர்ப்புணர்வு கடுமையாக இருக்கின்றது. [ஆசிரியர் குணசிங்கம் தனது நூலின் 135 ஆம் பக்கத்தில் மேற்கோள்]

இத்தீவின் தமிழர் பிரதேசத்திலும், தமிழ் நாட்டிலும் நாவலர் கட்டியெழுப்பிய கல்விச்சாலைகள், அவர் பதிப்பித்த தொல்காப்பியம் போன்ற பழம் பெரும் தமிழ் நூல்கள், தமிழ் வசனநடைக்கு அவர் ஆற்றிய அரும்பணி என்பனபற்றி விரிவாகக் குறிப்பிட இங்கு இடம் போதாது. இருப்பினும் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பினார், ஈழம் வாழ் தமிழினத்தை மொழி மத அடிப்படையில் ஒன்றிணைத்தார் என்பதை மீண்டும் வலியுறுத்துவதில் தவறில்லை. அவர் மூட்டிய தீ இன்றுவரை ஓயவில்லை.

நாவலர் பரந்த அரசியல் ஈடுபாடு கொண்டவர் 1876, 1877 காலப்பகுதியில் யாழ் தீபகற்பத்தில் கடும் வறட்சியும், கொடிய பஞ்சமும் தோன்றியபோது, செல்வந்தர்களின் உதவியோடு அவர் ஏழைகளின் பசிபோக்கும் நடவடிக்கை எடுத்தார். அதே காலப்பகுதியில் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்திய கொலரா நோய் தோன்றியபோதும் நாவலர் தன்னால் இயன்ற உதவிப்பணியாற்றினார். தகுந்த நிவாரணப்பணி செய்வதற்குத் தவறிய அரச அதிபர் துவைனம் மீது நாவலர் சினம் கொண்டார்.


இலங்கை ஆளுநர் சேர்.ஜேம்ஸ் லோங்டன் (SIR JAMES LONGDEN)ஜனவரி 1878 இல் யாழ்ப்பாணம் வந்தார். துவைனம் சம்பந்தமான முறைப்பாடுகளை நாவலர் அவரிடம் செய்தார். 1861 - 1879 இல் இலங்கை சட்ட சபையின் தமிழ் நியமனப் பிரதிநிதியாகப் பதவி வகித்தது. முத்துக்குமாரசாமியுடன் நெருக்கமான உறவுகளை நாவலர் பூண்டார். இவர் மூலம் சட்டசபையில் துவைனம் சம்பந்தமான பிரச்சனையைக் கிளப்புதற்கு நாவலர் ஒழுங்கு செய்தார்.

முத்துக்குமாரசாமி 1879 இல் காலமானதைத் தொடர்ந்து அவருடைய சகோதரி மகன், பொன். இராமநாதன் அப்பதவிக்கு வரவும், அரசியல் வாழ்வைத் தொடங்கவும் நாவலர் மூலகாரணமாக அமைந்தார்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்...)

# ஏய் கில்லி சுள்ளான்.... தமிழகத்தின் எதிர்காலம்..?

திரைக்கதைப்படி `அநியாயம் செய்யும்' பெரியமனிதர்களின் அடாவடித்தனத்தை எதிர்த்து `டூப்பு' களை பலிக்கடாவாக்கி – வேசப் போர்புரிவதற்கே இவர்களை `தளபதி' என்றழைத்தால், அதே படங்களில், நடனம் என்ற பெயரில், அசிங்கமான அசைவுகளுடன் இவர்கள் வழங்கும் பாசக் கூத்திற்கு என்ன பட்டம் தருவது? இதனால், அவர்களுக்குக் கிடைப்பதோ சில பல கோடிகள். நம் குழந்தைகளுக்குக் கிடைப்பதோ எதார்த்தமற்ற ஒரு மாய உலகம் பற்றிய மனக்கோட்டைகள் தானே?



இதிலிருந்து நம் குழந்தைகளை மீட்டெடுக்க, நம்மிடம் ஏதுமில்லையே?

இந்தத் தளபதிகளும், சூப்பர் – சுப்ரீம் – அல்டிமேட் – எவர்க்ரீன் – ஸ்டார்களும் `நடிகர் திலக'த்தையோ `புரட்சிநடிகரை'யோ


**ஒருபக்கம் திரைப்படம் என்றால், இன்னொருபக்கம் விரும்பியோ விரும்பாமலோ குடும்பத்தோடு எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும் தொலைக்காட்சியும் இதில் சர்வ அலட்சியத்துடனே செயல்படுவதும் பெரும் வேதனைக்குரியது.**

முன்னுதாரணமாக நினைப்பார்களேயானால், அது கேலிக்கூத்தாகத்தான் முடியும். `வெட்கங்கெட்ட வெள்ளைக் கொக்குகளா – நீங்க – விரட்டி அடிச்சாலும் வாரீகளா?' என்றும், `தேம்சு நதிக்கரையின் கொக்கு – நர – மாம்ச வெறிபிடித்த கொக்கு' என்றும் வள்ளி திருமணத்தில்கூட தேசபக்தியை மேடையில் கொண்டுவந்து, கைதாகி, மேடையிலேயே உயிர்துறந்த கலைஞர்களும் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள் என்பதாவது இந்த `ஸ்டார்'களுக்குத் தெரியுமா?

இவர்களுக்குத்தான், படங்களில் மட்டுமல்லாமல் விளம்பரங்களிலும் நடிப்பதற்காகப் பன்னாட்டுக் `கும்பினி'க்காரர்கள் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்களே, பிறகு தேசமாவது பக்தியாவது! ஆயினும் அவர்களிடையே `அது என் தேசத்திற்கு எதிரானது' என்று நடிக்கமறுத்தார் மம்முட்டி என்பதே பெருமையானது. இச்செய்தி உண்மையெனில், இன்னும் பாஸ்கரதாஸ், விஸ்வநாததாஸ், ஜானகியம்மாள்களின் தேச பக்தக்கலைப் பாரம்பரியம் முற்றிலுமாக அற்றுப்போய்விடவில்லை என்றறிய சற்றேறுதலாக உள்ளது!!

இவர்கள் படங்களில், `ஜெய்ஹிந்த்' முழக்கத்துடன், தேசவிரோதிகளைப் பிடிக்கப் போவார்கள்! ஆனால் கூடவரும் ஒருபெண் `கண்ணா என் சேலைக்குள்ள கட்டெறும்பு புகுந்திருச்சு' என்று கதறுவாள்! இவர்கள் படங்களில், கல்லூரி மாணவராக வருவார்கள், உலகிலில்லாத ஒரு `குருப்டான்ஸ்' இருக்கும். ஆனால் கல்லூரி முதல்வர் `கேளை' யாகவும், ஆசிரியர்கள் `கிறுக்காக'வுமே இருப்பார்கள்! இவர்கள் படங்களில், `சந்தன' வீரப்பனைக் காட்டுக்குள் தேடிச்சென்று பிடித்து விடுவார்கள்! ஆனால், அரசாங்கம் தேடும்போது ஒரு பத்திரிகைக்காரனை அனுப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள்! இவர்கள் படங்களில், மனிதர்களை ஒன்றாகப் பாவிக்கும் சாதிமதஒற்றுமையே 'சத்தியம்' பேசும். ஆனால், அவர்களே தம் சாதிபார்த்து வெல்லும் வியூகங்களோடு அரசியலில் இறங்குவார்கள்!!

இவர்கள் படங்களில் ஆறுமாடிக் கட்டிடத்தின் மேலிருந்துகூட அனாயாசமாகக் குதிப்பார்கள், ஆனால் நிஜ வாழ்வில் ஒன்றரை அடி ஸ்டூலிலிருந்து குதிக்கக் கூட உதவியாளைத் தேடுவார்கள். இவர்களுக்கு மகளாக நடித்த பெண் இவர்களுக்கே காதலியாகவும் தாயாகவும் கூட நடிப்பார்! ஆனால் கதாநாயகனுக்கு மட்டும் வயதாவதே இல்லை! அந்த ஸ்டைலும் பலமும் அப்படியே இருக்கும்! உண்மையைச் சொல்லப்போனால், பலதிரைப்பட `வில்லன்கள்' உண்மையில் நல்லவர்களாகவும், சில `நாயகர்கள்' உண்மையில் `வில்லன்'களாகவுமே இருந்திருக்கிறார்கள்! `எங்களிடம் மட்டும் சமூகப்பொறுப்பு அது இது என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? மற்ற தொழில்களைப் போலவே நடிப்பது எங்கள் தொழில்' என்று இவர்களாக ஒருவிளக்கம் வேறு அவ்வப்போது தருகிறார்கள்! அவர்கள் வாதத்தின் படியே, திரைப்படமும் ஒரு தொழில்தான் என்று வைத்துக்கொண்டால்கூட அந்தத் தொழிலின் `உற்பத்திப் பொருள்'தரும் விளைவால் எத்தனை இளம் உள்ளங்கள்




விசமாகி வருகின்றன என்பதையாவது இவர்கள் ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். `உற்பத்திப்பொருளைப் பயன்படுத்துபவன் பாதிப்புக்கு உள்ளாகும்போது' உற்பத்தி செய்தவரைக் கேட்க உரிமை உண்டல்லோ?

ஆனால், இவர்கள்மேல் மட்டும் பிழையில்லை. கான்வெண்ட் பள்ளி ஆண்டுவிழா கூத்துகளில், `அடுத்து.... இதோ சூப்பர் ஸ்டார் மேடைக்கு வருகிறார்' என்று தன் மகனை அறிமுகப்படுத்துவதைப் பெருமையாகக் கருதி மகிழும் பெற்றோர்கள்தாமே பெரும்பான்மையாக இருக்கிறோம்.


தமிழ்பேசி வந்த `காந்தி,' `பாரதி' மற்றும் `காமராசர்' போன்ற உண்மை வரலாற்றுப் ப(ா)டங்களை நம் குழந்தைகளுக்கு பெற்றோர்களாகிய நாம் அறிமுகப்படுத்தினோமா என்பதை யோசிக்கவேண்டும்.

இவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் இந்தப் பண்பாட்டுச் சீரழிவை எப்படியாவது தடுக்கவேண்டு



மென்று அரசுகளும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தணிக்கையாளர்கள், `பாயில் புகாதே' என்றால், இவர்கள் `தடுக்கில் புகுந்துவருவதை' தடுக்கத் தெரியாமல் தடுமாறுகிறார்கள்! தொலைக்காட்சியினரோ அந்தத்தொந்தரவும் இல்லாமல், `கலைச்சேவை' யைத் தொடர்கிறார்கள்! எதையும் பகுத்தறிந்து உள்வாங்கக் கற்றுத்தரும் – சமகாலத்தை விளங்கிக் கொள்ளும் – பாடத்திட்டங்களும் இல்லை! ஒருபக்கம் திரைப்படம் என்றால், இன்னொருபக்கம் விரும்பியோ விரும்பாமலோ குடும்பத்தோடு எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும் தொலைக்காட்சியும் இதில் சர்வ அலட்சியத்துடனே செயல்படுவதும் பெரும் வேதனைக்குரியது. `காமெடி டைம்,' `டைமுக்குக் காமெடி', `காமெடி தர்பார்' என்பன போலும் ஏராளமான `கலப்பட' நிகழ்ச்சித் தலைப்புகள், மற்றும் தொடர்கள் தரும் பண்பாட்டுச் சிதைவுகளை ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் இதுபோலும் கட்டுரைகள் இன்னும் பல எழக்கூடும்! `கில்லி', `ஏய்', `சுள்ளான்', போன்ற சிறுபிள்ளைத் தனமான தலைப்புகளில் வரும் படங்கள் தமிழ்ச்சமூகத்தை `மெதுவாய்க் கொல்லும் விடங்கள்' என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதன் பாதிப்பு உடனடியாகத் தெரியாது, சமூகச் சீரழிவில் அவசியமான விடயங்களை அலட்சியப்படுத்துவதில், அல்பமான விஷயங்களுக்கு லாய்ப் பறப்பதில் – கொண்டுபோய் விடும்.

தலைப்பை வித்தியாசமாக வைத்து, எப்படியாவது பார்த்துவிடத் தூண்டும் இவர்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, நல்ல படம், நிகழ்ச்சி என்றால் மட்டுமே பார்ப்பது, அல்லது



தவிர்த்துவிடுவது என்று புரிந்துகொண்டால் மட்டுமே தமிழ்ச்சமூகம் உருப்படுவது சாத்தியமாகும் என்பதே சத்தியமாகும்.

நா. முத்து நிலவன்

நன்றி - திண்ணை

# பேச்சுக்களை ஆரம்பித்து வைக்குமாறு சந்திரிகா நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு அறிவிப்பு ?



(08.08.04)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா, நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்திருப்பதாக தெரியவந்துள்ளது. நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு சிறீலங்கா ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள இராஜதந்திர ரீதியான இரகசியக் கடிதமொன்றிலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் விடயத்தில் ஜே.வி.பி.யுடன் முரண்பாடுகள் தோன்றியிருக்கும் நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை இராஜினாமாச் செய்துள்ள சந்திரிகா, சிறீலங்காவின் தலைவி என்ற வகையில், தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஏதோவொரு வகையில் ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

## முழுப் பூசணிக்காயை.....

(05ம் பக்கத் தொடர்ச்சி)

கும் நிகழ்வாகவும் அமைந்துள்ளதாக புலனாய்வு அதிகாரியொருவர் கவலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி வந்தவர்கள் இப்போது புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு கொள்வதையும் நிறுத்திக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர். இதனால் இராணுவத்திற்கு சிக்கலான நிலையொன்று உருவாகியுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவை முடங்கச் செய்ய பிரபாகரன் மேற்கொண்டு வரும் தந்திரோபாயங்களுக்கு எம்மவர்களே பொறுப்பேற்க வேண்டியுள்ளனர். நாங்களும் இக்கட்டான மற்றும் ஆபத்தை நெருங்கியவர்களாகியுள்ளோம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளதாக தினக்குரல் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் விடுதலைப் புலிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்காக தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட சில தமிழர்கள் இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் உளவுத் தகவல்களை வழங்கி வந்தனர். தற்போது இவர்களில் பலர் கொல்லப்பட்டும், சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றும் ஏனையவர்கள் உளவாளிகளாகச் செயற்படுவதை நிறுத்திக் கொண்டும் விட்டதால் படையினருக்கு தகவல் வழங்குவோரின் தொகை 90 சதவீதத்தால் குறைவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வாறான உளவாளிகள் சிலருக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டும், வழங்கப்படும் வெகுமதித் தொகை திருப்தியளிக்காததாலும் உளவாளிகளாகச் செயற்படுவதிலிருந்து அவர்கள் ஒதுங்கி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னர், கொல்லப்பட்ட 55வது உளவாளியாக புளொட் மோகன் கருதப்படுகின்றார். உளவாளிகளுக்குள் புளொட் மோகனின் பங்களிப்பு அளப்பரியதெனவும் புலனாய்வு வட்டாரங்கள் கூறியுள்ளன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் நீண்ட தூரம் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் பிரிவில் பலவற்றுக்கு இவர் பொறுப்பாகவும் செயற்பட்டுள்ளார். கொல்லப்படும் போது, இவர் இரண்டாம் லெப்டினன்ட்டாக இருந்ததாகவும் கொல்லப்பட்ட பின் இவர் லெப்டினன் தரத்திற்கு உயர்த்தப்பட்டதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன.

## சிதைக்கப்படும் தமிழ்.....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக நலனுக்காகவும் தேசியத்தைச் சிதைக்க எவரும் பிரதேச வாதம் பேசக்கூடாது. தமிழீழத்துக்காக இலட்சம் உயிர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்க பதவிக்கும், வர்த்தகத்துக்கும் அற்ப நலன்களுக்கும் தாயகத்தைச் சிதைத்து, தேசியத்தை அழித்து, தமிழீழத்தை மறக்கலாமா?

தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழமுடியும் என நினைப்பது, தற்கொலைக்கு ஒப்பானதும் முட்டாள்த் தனமான விடயமும் ஆகும். தமிழினத்தை பூண்டோடு அழிப்பதனையே சிறீலங்கா அரசும் படையும் கோட்பாடாகக் கொண்டுள்ளது என்பதனை கடந்த கால கசப்பான, கோரமான சம்பவங்கள் மூலம் உணர்ந்திருக்கிறோம்.

தமிழர்கள் தனியாகப்பிரிந்து தமிழரசு அமைப்பதே தமிழர்களின் பிரச்சனைக்கு இறுதியும் உறுதியுமான தீர்வு. சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் சேர்ந்து வாழ்வது என்பது, நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயம். தமிழர் சிங்களவரிடம் மண்டியிட்டால் மாண்டுபோவது நிட்சயம். குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரியுமானால், கிழக்கு மாகாணம் சிங்கள மாகாணமாக மாறும்?.

தமிழர் தாயகத்தை சிங்களப்பேரினவாதம் ஏற்க மறுக்கிறது. தாயகத்தை கூறுபோட்டு, தமிழர் தாயக பூகோள ஒருமைப்பாட்டை சீர்குலைத்து தமிழினத்தை பலவீனப்படுத்த முயல்கிறது. தமிழரின் ஒற்றுமையினையும் ஐக்கியத்தினையும் சீர்குலைப்பதன் மூலம் இலகுவாக அடக்கி ஆழலாம் என நினைக்கிறது.

தமிழரின் உரிமைப் பேராட்டம் விபரிக்க முடியாத துன்பங்களையும், வியத்தகு தியாகங்களையும் கொண்டு விடுதலைப் போராட்டமாக விரிந்து செல்லுகிறது. மனித நாகரிகமே வெட்கித் தலை குனியுமளவுக்கு, தமிழர் மீது சிங்களத் தேசம் மிருகத்தனமாக நடந்தது. இத்தனை சோதனை மத்தியிலும் சலிப்படையாது நம்பிக்கை தளராது போராடும். தமிழீழ விடுதலைப் புலிகளினால் மட்டும் தான் தமிழர்களுக்கு அதி கூடிய உரிமைகளைப் பெற்றக் கொடுக்க முடியும்.

சோரம்போன துரோகிகளால் தமிழீழத்தில் சிங்களத்தின் பொம்மை அரசையே நடத்த முடியும். தமிழர்கள் தனித்துவத்துடன் வாழமுடியாது. அடிமைகளாகவே வாழவேண்டி ஏற்படும். எனவே சிங்கள பேரினவாதத்தின் தேசியவாத சட்டதிட்டங்களுக்கு தமிழ் மக்கள் உடன்பட்டுப் போகக்கூடாது. தமிழர் தம் தனித்துவத்தை இழக்கக்கூடாது. தமிழ் மொழியை பாதுகாக்க வேண்டும். தமிழர் தாயக நிலப்பரப்புக்கள் துண்டாடப்படுவது தடுக்கப்பட வேண்டும். தமிழர் தம் தனித்துவமான கலை பண்பாட்டு அம்சங்களை பேணிப்பாதுகாக்க வேண்டும். திரிபுபடுத்தப்பட்ட தமிழர் வரலாற்றை இனங்கண்டுகொண்டு உண்மையை அறிந்தும், வெளிப்படுத்தவும் முன்வர வேண்டும்?. பொருளாதார ரீதிய?ல் முதலீடுகளை மேற்கொண்டு தமிழர்கள் தன்?னிறைவோடு வாழ வழிசெய்ய வேண்டும். வர்க்கம், சாதி, பிரதேசவாதம், பதவிப் போட்டிகள், வர்த்தக நலன்களை மறந்து அனைவரும் ஒரு குடையின் கீழ் அணிதிரள வேண்டும்.

தமிழ்த்? தேசியத்?தை பாதுகாக்கவும், தமிழீழத்தை உருவாக்குவதற்கும், தமிழர்கள் உறுதியோடு உழைக்க வேண்டும். ஒன்று திரள வேண்டும்.

**– சங்கரன்**

## மையப்புள்ளியாகி விட்ட....

(06ம் பக்கத் தொடர்ச்சி)

தானம்' என்ற அட்சய பாத்திரதிலேயே 4.5 மில்லியன் டொலர்கள் என்ற சிறீலங்காவின் சகல ரோகங்களுக்குமான நிவாரணி இருக்கிறது.

'இடைக்கால நிர்வாகசபை' என்ற தாமரைப்பூவிலே தான் அட்சய பாத்திரம் இருப்பது தான் இன்றைய பிரச்சினையாகி விட்டது. இந்தத் தாமரையினை மலர வைத்தே ஆக வேண்டுமென்ற கட்டாயம் அரசாங்கத்துக்கு குறிப்பாக அரசுத்தலைவரான சந்திரிகாவுக்கு உள்ளது. ஆனால் அவரது கூட்டாளிகளான ஜே,வி.பியினரோ 'ஆபத்துக்குதவாத பிள்ளை, அரும்பசிக்குதவா அன்னம்' போன்று நச்சுப் பல்லிகளாக நச்சரிக்கின்றனர்.

இந்தக் கலங்கிய குட்டையிலே ஐ,தே.கட்சி கூசாமல் தூண்டிலை வீசி விட்டது. அத்தாங்குடன் இறங்கி விட யோசிக்கிறது. தவித்த முயலாக அந்தரித்து நிற்கும் சந்திரிகாவின் மீது ஐ.தே.கட்சி குறுந்தடியை வீசி விடுமா? வேட்டை நாயளாக ஜே.வி.பி பாய்ந்து தான் விடுமா? சந்திரிகா பாவம்தான் இல்லையா வாசகர்களே!

ஆனால் இது அவருக்கு வரலாறு தந்த அவலம். குறுக்குப் பாதையில் அரசுக்கட்டிலுக்கு வந்தவரல்லவா? தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கு குரல் வளை நசிப்பதே அரசியற் பணியாகக் கொண்டவரல்லவா? ஆனால் ஐ.தே.கட்சி இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் ஏன் இவ்வாறு 'சாதகமாகச்' சிந்திக்க முற்படுகிறது? இவ்விடயத்தில் புலிகளின் யோசனைகள் கிடைத்து அதற்கு ஐ.தே.கட்சியின் பதில் வர முன்னரே சந்திரிகா ரணிலின் அரசாங்கத்துக்கு காற்றைப் பிடுங்கி விட்டதால் பந்தைச் சந்திரிகாவின் பக்கம் வசதியாக எறிந்து விட்டு வெகு உல்லாசமாக நிகழ்வுகளைப் பார்த்து ரசிக்கிறது ஐ.தே. கட்சி. அதனாலேயே அது சந்திரிகாவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க அவசரப்படவும் இல்லை. ஒடிக்களைக்கும் மட்டும் சந்திரிகாவை ஒடவிடவே ரணில் விரும்புகிறார்.

ஆக வஞ்சகம் நிறைந்த எதிரிகள் இருவரின் இழுபறிக்கு கயிறாக தமிழ் மக்களின் அன்றாட வாழ்வின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நிர்வாக ஒழுங்கமைப்பான இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைகள் இன்னமும் சபையேறாமலேயே இருக்கிறது.

## இலங்கைத் தமிழர் தேசியம்....

(26ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு நிதியுதவியுடன், அரச ஆதரவுடன் இயங்கிய மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி போன்றவற்றிற்கு நிகரான ஒரு சைவத் தமிழ்க் கல்லூரியை நிறுவும் வேணவா நாவலருக்கு இருந்தது. 1872 இல் அவர் ஒரு ஆங்கிலக் கல்லூரியை வண்ணார்பண்ணையில் தொடங்கினார். பண நெருக்கடி, வேறு சில தொல்லைகள் என்பனவற்றால் இரு வருடங்களில் அது மூடப்பட்டது. 1853 இல் நாவலர் அமைத்த சைவப் பிரகாச சபையின் மறுபிறப்பான சைவ பரிபாலன சபை (தோற்றம் 1888) ஒரு ஆங்கில கல்லூரியை 1890 இல் நிறுவியது. 1891இல் இப்பள்ளிக்கு தங்குமிட வசதி செய்யப்பட்டது. 1895 இல் அதே கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (JAFFNA HINDU COLLEGE) என்று பெயரிடப்பட்டது. தனது திருகோணமலை, கொழும்பு, மட்டக்களப்பு, கிளைகளை சைவ பரிபாலன சபை தொடர்ச்சியாகத் திறந்தது. 1898 இல் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் தொடக்கப்பட்டது தமிழர்களின் சமுதாய, அரசியல், பண்பாட்டு விழிப்புக்கு இவை யாவும் தூண்டு கருவிகளாக அமைந்தன என்கிறார் ஆசிரியர் குணசிங்கம்.

## அண்டன் பாலசிங்கத்தின் விடுதலை - 3

(25ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்தக் கட்டுரையின் தொடர்ச்சியாக இலங்கையில் சிங்கள -தமிழ் இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள சண்டையையும் இலங்கையில் தமிழர்கள் தனிநாடு கேட்பதற்கான கருத்தியல் ரீதியான கோட்பாட்டு விளக்கத்தையும் பாலசிங்கம் வைக்கவில்லை. வேண்டுமென்றே விட்டுவைத்துள்ளாரா என்பதும் தெரியவில்லை.

முதலிரண்டு அரசியல் கட்டுரைகளையும் நீக்கிப் பார்க்கும்போது இந்தப் புத்தகம் தமிழில் எழுதப்பட்டுள்ள மிக முக்கியமான புத்தகம் என்று நான் கருதுகிறேன். மேற்கத்தியத் தத்துவ உலகம் பற்றி அறிய விரும்பும் தமிழர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டிய முதல் புத்தகம் இதுவாக இருக்கலாம். இந்தச் சிந்தனைகள் பற்றி இந்த அளவிற்கு எளிமையாகவும் அதே சமயம் செறிவாகவும் தமிழில் வேறு புத்தகங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆழ்ந்த படிப்பும் அதை வெளிச்சொல்லும் திறமையும் வாய்ந்த பாலசிங்கம் தமிழ்ச் சிந்தனை உலகில் மிக முக்கியமானவர் என்பதிலும் வேறு கருத்து இருக்க முடியாது. தன் மற்ற வேலைகளுக்கிடையில் பாலசிங்கம் இன்னமும் பரவலாக எழுதவேண்டும்.

- எண்ணங்கள்,ஞாயிறு யூலை 252004

# குரங்குபாஞ்சான் குளம் பகுதியில் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய அனுமதி !

(08.08.04)

கிண்ணியா குரங்குபாஞ்சான் குளம் பகுதியில் முஸ்லிம் விவசாயிகள் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இப்பிரதேசத்தில் விவசாயம் செய்வது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும், கிண்ணியாப் பிரதேச முஸ்லிம் பிரமுகர்கள் மற்றும் கிண்ணியா விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்று சனிக்கிழமை சந்தித்து பேசியதை அடுத்தே, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரண்டு மணித்தியாலங்கள் வரை இடம்பெற்ற இச்சந்திப்பு ஆக்கபூர்வமான முறையில் நடைபெற்றதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.



இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையிலான குழுவினரும், முஸ்லிம் பிரமுகர்களின் சார்பில் கிண்ணியா உலாமா சபைத் தலைவர் அசீஸ் மௌலவி, செயலாளர் ஹதியத்துல்லா ஆகியோரும் கலந்து கொண்டனர். மாவட்ட போர் நிறுத்தக் கண்ணகாணிப்புக் குழுவின் தலைவர் டாக்சின் மற்றும் மார்கிரட்டா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இச்சந்திப்பில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.



## புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று சந்திப்பதற்கு சிறீலங்காப் படையினர் விருப்பம் தெரிவிப்பு

(08.08.04)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று, அவர்களுடன் சந்திப்புக்களை நடத்துவதற்குத் தாம் தயாராகவிருப்பதாக போர் நிறுத்?தக் கண்காணிப்புக் குழுவிடம் சிறீலங்கா படைத்துறை தெரிவித்துள்ளது. சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களையடுத்து, படையினருடனான மாதாந்த சந்திப்புக்களை இடைநிறுத்திக் கொள்வதாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னர் அறிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டுக்கு பதிலாகவே சிறீலங்கா படைத்துறை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இதுகுறித்து தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான தொப்பிகல காட்டுப்பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டாலும், தாம் அங்கு செல்லத் தயாராக இருப்பதால் மீண்டும் விடுதலைப் புலிகளுடனான மாதாந்த சந்திப்பை வழமை போன்று ஏற்பாடு செய்து தருமாறும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சிறீலங்கா படைத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, சகல மாவட்டங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளும், தாமும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டுமெனவும் சிறீலங்கா படைத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், படையினரின் இந்த வேண்டுகோளினை தாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விரைவில் தெரிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

## புலிகளுடன் போரிட்டதால் இராணுவம் நல்ல பயிற்சி பெற்றுள்ளதாம் !

### - ஐ.நா. தேர்வின் முடிவில் தெரிவிப்பு -

(08.08.04)

இரண்டு தசாப்த காலமாக விடுதலைப் புலிகளுடன் போரிட்டு நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்றுள்ள சிறீலங்கா இராணுவத்திலிருந்து சிலர் வெளிநாட்டு இராணுவத்திற்கு பயிற்சி வழங்கும் தகுதியைப் பெற்றிருப்பதாக ஐ.நா.வின் அமைதி காக்கும் படைப்பிரிவினர் நடத்திய தேர்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வரும்காலத்தில் அமைதி காக்கும் படையினருக்கான குக்குளேகங்க பயிற்சி முகாமில் 23 வெளிநாடுகளின் இராணுவத்தினருக்கு அமைதி காப்பு பணியில் பயிற்சி வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இச்சர்வதேச பயிற்சி நடவடிக்கை மூலம் இந்நாட்டுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும் எனவும் முன்பு இதற்காக பங்களாதேஷ் சிறந்த நாடாகக் கருதப்பட்டாலும் பின்னர் சிறீலங்காவில் குக்குளேகங்க தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ காவல்துறை – சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சந்திப்பு

(08.08.04)

தமிழீழ காவல்துறைக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் காவல்துறை நடுவகப் பணியகத்தில் நடைபெற்றுள்ள இந்தச் சந்திப்பில், இருதரப்பினரும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இச்சந்திப்பு மதியம் 12 மணி வரை நீடித்திருந்ததாகவும், இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உள்ளிட்ட அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில், வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் புதுக்குடியிருப்புக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புங்குடுதீவில் உதைபந்தாட்ட இரசிகர்கள் மோதல் குடும்பஸ்தர் பரிதாப மரணம்

(09.05.04)

புங்குடுதீவில் உதைபந்தாட்ட இரசிகர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஐந்து பிள்ளைகளின் தந்தையார் ஒருவர் மரணமடைந்துள்ளார். புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த கயித்தாம்பிள்ளை அன்ரனிதாஸ் (40) என்பவரே மரணமடைந்தவராவார். புங்குடுதீவு மத்திய முற்றவெளி மைதானத்தில் கடந்த 7ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போது விளையாடிய ஓர் அணியினர் முதல் கோலினைப் போட்டனர்.

இதன்போது மற்றைய அணி இரசிகர்கள் இக் கோல் முறையற்றது என கூக்குரலிட்டனர். இதனால் இரு அணிகளின் இரசிகர்கள் மத்தியில் கருத்து மோதல் ஏற்பட்டது. பின்னர் இக் கருத்து மோதல் சமரசம் செய்யப்பட்டு உதைப்பந்தாட்டப் போட்டி மீண்டும் தொடரப்பட்டது. இவ்வேளையில் மேற்படி நபர் உதைப்பந்தாட்டப் போட்டியை பார்த்துக் கொண்டிருக்கையில் எதிரணி இரசிகர்கள் இவருக்குப் பின்பக்கமாக வந்து பாரிய கல் ஒன்றினால் பிடரியில் தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாமயடைந்த இவர் மயக்கமடைந்து ஸ்தலத்திலேயே விழுந்துவிட்டார். பின்னர் படுகாயமடைந்த இவரை புங்குடுதீவிலுள்ள தியாக தீபம் திலிபன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்று பின் இவரது உறவினர்கள் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் கடும் இரத்தப்போக்கினால் பிரஸ்தாப நபர் இறந்துள்ளார்.

## டக்ளசின் பாதுகாப்பை சந்திரிகா அதிகரித்தார்!

ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு குண்டு துளைக்காத கார் ஒன்றை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து அண்மையில் தற்கொலைத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படவிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்தே, டக்ளசின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் அவருக்கு இந்தக் கார் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதுவரை ஜனாதிபதி தவிர்ந்த, முக்கிய அமைச்சர்கள் ஏழுபேருக்கு மட்டுமே இத்தகைய குண்டு துளைக்காத வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுள் ஒருவராக இனிமேல் டக்ளஸ் தேவானந்தாவும் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# கிளிநொச்சியில் புலிகளின் விமானங்கள் பறந்தனவா? புலனாய்வுப் பிரிவின் தகவலை இராணுவப் பேச்சாளர் மறுப்பு

(09.08.04)

கிளிநொச்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மூன்று விமானங்கள் பறந்து வருவது குறித்து சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்டுள்ள தகவலை, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா மறுத்துள்ளார்.

இரணைமடுவை அண்டிய பகுதிகளில் இந்த விமானங்கள் கடந்த வாரம் முதல் பறந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. செஸ்னா ஸ்கைமாஸ்டர் ரக இரு விமானங்களும், மற்றொரு விமானமுமே இவ்வாறு கிளிநொச்சி, உருத்திரபுரம், புதுக்குடியிருப்பு மற்றும் முறிகண்டிப் பகுதிகளில் பறந்ததை மக்கள் அவதானித்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். `ஸ்கை மாஸ்டர்' ரக விமானமொன்றில் நால்வரும் மற்றைய விமானத்தில் 12 பேரும் பயணம் செய்யக் கூடியதெனவும் எனினும் மற்றைய விமானம் என்ன ரகமென்பதை உடனடியாகக் கூற முடியாதிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாலை வேளையில் 6 மணி முதல் 7 மணி வரையும் அதிகாலையில் 4 மணி முதல் 7 மணி வரையும் இந்த விமானங்கள் பறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆயிரம் அடி உயரத்திற்கும் மேல் இந்த விமானங்கள் அரை மணி நேரம் முதல் 45 நிமிடங்கள் வரை பறந்துள்ளன. 12 பேர் பயணம் செய்யக்கூடிய விமானம் புலிகளால் அண்மையிலேயே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த மூன்று மாதங்களுக்குள் இந்த விமானம் மூன்று முறை பறக்கவிடப்பட்டு பரீட்சிக்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன. விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதை இரணைமடுக் குளத்திற்கு சமீபமாயிருப்பதாக அரசு தரப்பினர் கூறியிருந்ததையடுத்து, தங்கள் வசம் விமானப்படையொன்றிருப்பதைப் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஒப்புக் கொண்டிருந்தது தெரிந்ததே.

## அபாய கட்டத்தில் சிறீலங்கா....

ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின் பதிலுக்காக காத்திருப்பதை சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால உறுதிப்படுத்தியிருக்கின்றார். இதுகுறித்து அவர் கூறுகையில், பேச்சுவார்த்தை தாமதமடைவதால் நெருக்கடிகள் அதிகரித்து வருவது குறித்துக் கவலை கொண்டிருக்கும் ஜனாதிபதி, கருத்து முரண்பாடுகளை தவிர்த்துக் கொண்டு சில விட்டுக்கொடுப்புகளைச் செய்தேனும் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அவர் கூடுதல் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நோர்வே தரப்பின் பதிலுக்காகக் காத்திருக்கும் சந்திரிகா, ஓரிரு தினங்களுக்குள் நோர்வேயிடமிருந்து பதில் கிட்டும் என எதிர்பார்த்திருப்பதாகவும் பதில் கிடைத்தவுடன் சில அவசர நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, சந்திரிகா பேச்சுக்களை ஆரம்பித்தால் அவருக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முன்வந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைக் கோரினால் எந்தவிதமான நிபந்தனையுமின்றி பூரண ஒத்துழைப்பு நல்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். நாடு மீண்டும் தேசிய நெருக்கடிக்குள் சிக்குண்டிருப்பதால் இந்த நேரத்தில் நிபந்தனைகளை முன்வைப்பதோ, கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதோ, புத்திசாலித்தனமல்ல. மீண்டும் போர்ச் சூழல் ஏற்படுவதை எவராலும் அனுமதிக்க முடியாது. நாடு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் நிலையில் அதிலிருந்து தேசத்தைக் காக்க வேண்டிய கடப்பாடு ஐக்கிய தேசிக் கட்சிக்கும் இருப்பதாகவும் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

இதேவேளை, அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் கருத்து முரண்பாடுகளால் நெருக்கடி நிலை மேலும் அதிகரிக்கும் என்று கருத்துக் கொண்டிருக்கும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாடுகள் ஜனாதிபதி சந்திரிகா பிரதான எதிர்க்கட்சி உட்பட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன. இந்நிலையில், ஓரிரு தினங்களில் நோர்வே தரப்பின் பதில் கிட்டியவுடன் சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் சிலவற்றுடனும் கலந்துரையாடத் தீர்மானித்திருக்கின்றார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரம் தெரிவித்திருக்கின்றது.

நாடு பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி இருப்பதால் சர்வதேச உதவிகளைப் பெறவேண்டுமானால் பேச்சுகளை மீள ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாகவும், இந்நிலையிலேயே ஜே.வி.பி. தரப்பினதும் சில கடும்போக்காளர்களதும் நடவடிக்கையால் அதிருப்தி கொண்ட சந்திரிகா, கூட்டணியின் தலைமைப் பதவியைத் துறந்து உறுதியான நடவடிக்கையை எடுக்கும் நிலைக்குத் அவர் தள்ளப்பட்டுள்ளார் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுஇவ்வாறிருக்க, இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சிறீலங்கா ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட இராஜதந்திர அழைப்புக்கு, நோர்வேத் தரப்பிலிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஜனாதிபதியின் செய்தியை சாதகமாகப் பரிசீலித்துள்ள நோர்வேத் தரப்பினர், இது குறித்து சிறீலங்கா ஜனாதிபதிக்கும் அறிவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஆராய்வதற்காக விரைவில் நோர்வேயின் இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இது குறித்த உறுதிப்படுத்தப்பட்ட செய்திகள் எவையும் இதுவரை எமக்கு கிடைக்கப்பெறவில்லை.


## ஈ.பி.டி.பி.யின் முக்கிய உறுப்பினர்.....

(08.08.04)

ஈ.பி.டி.பி. குழுவைச் சேர்ந்த ஒருவரையும் அவரது மனைவி மற்றும் குழந்தையையும் மண்டபம் அகதி முகாமருகில் வைத்து தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர். ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த யேசுராஜா என்ற இராஜநாயகம் (31), அவரது மனைவி தவமலர் (22) குழந்தையான மேசாக் (11 மாதம்) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

மண்டபம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் கோபால், உதவி இன்ஸ்பெக்டர் ரமேஷ் ஆகியோர் மண்டபம் அகதிமுகாம் அருகே ரோந்து சுற்றி வந்தபோது, ஒரு தொலைபேசி நிலையத்தில் இலங்கை தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர், மனைவி மற்றும் குழந்தையுடன் நிற்பதாகத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அவ்விடத்துக்குச் சென்ற பொலிசார் இவர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணைகளை மேற்கொண்ட போது இவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது.

குறிப்பிட்ட நபர் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டதுடன், அவரிடமிருந்து ஈ.பி.டி.பி. இயக்க அடையாள அட்டை, சிறீலங்கா கடற்படை வழங்கிய அடையாள அட்டை, சிறீலங்கா அரசின் அடையாள அட்டை, ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் புகைப்படம் அச்சிடப்பட்ட அட்டை ஆகியனவும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.



விசாரணைகளின்போது, தான் டக்ளஸ் தேவானந்தாவிற்கும மெய்பாதுகாவலராக இருந்ததாகவும், அண்மையில் டக்ளஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து தானும் கொல்லப்பட்டவிடுவோம் என்ற அச்சம் காரணமாக அங்கிருந்து தப்பி தனது குடும்பத்தினருடன் தமிழகம் வந்துள்ளதாக தெரிவித்துள்ள மேற்படி நபர், தனது பெற்றோர் நேசராஜன் - ராஜம்மாள் ஆகியோர் கரூர் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தங்கியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன், இவர்கள் தலைமன்னாரிலிருந்து 20 ஆயிரம் ரூபா கொடுத்து படகு மூலம் சனிக்கிழமை அதிகாலை தனுஷ்கோடிக்கு வந்து சேர்ந்ததாக பொலிசாரிடம் தெரிவித்துள்ளதாகவும், இவர்களிடம் புலனாய்வுப் பிரிவு பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாகவும் தமிழகக் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM" JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78
Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



**குறிப்பு:**

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



சுவிஸ் தமிழர் இல்லம் அனைத்துலக ரீதியில் நடாத்தும்
**தமிழர் விளையாட்டு விழா 2004ல்**
**Basel ரவி கடை நடாத்தும்**
**மாபெரும் மலிவு விற்பனை**
**இடம்: Sportanlage Deutweg und Talgut Winterthur Zu**

**முக்கியகுறிப்பு:**
தாய் நிறுவனம் Basel ரவி கடை
061/272 90 30
061/272 09 90
079/356 22 78
கிளை நிறுவனம் Bern ரவிகடை

## போர் வெடிக்கும்...

பேச்சுகள் நடைபெறவில்லை. இவ்வாறான பேச்சுகள் நடைபெறாதவிடத்தால் அது போர் நிறுத்த உடன்பாட்டிற்கு மேலும் ஆபத்தாகி விடலாம். இதுதான் கிழக்கின் நிலைமை என்பதுடன் மட்டுமல்லாது கொழும்பு வீதிகளிலும் இதே நிலைமை தான் நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில் சில சக்திகள் நெருப்புடன் விளையாடுகின்றன எனக்கூறியது, பெரிதுபடுத்தப்பட்டதொரு விடயமல்ல. உண்மையிலேயே இதுதான் போர் நிறுத்த உடன்பாட்டிற்கே பெரும் ஆபத்தாகவுள்ளது. இந்த நிலையிலும் சில சாதகமான அம்சங்களுமுள்ளன.

சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களுக்கிடையே சில வேலைத் திட்டங்களுக்காக தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதும், இரு தரப்பு சமாதானச் செயலகமும், இரு தரப்பு இராணுவப் பிரிவும் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதும் சாதகமான அம்சங்களாகும். அத்துடன், இது பதற்றத்தைக் குறைத்து சுமுகமானதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கவும் உதவும். போர் நிறுத்த உடன்பாடானது சமாதான ஒப்பந்தமல்ல என்பதை அனைவரும் உணர வேண்டும். அதேநேரம், இலங்கையில் இப்போதும் பிரச்சினைகள் உள்ளன. ஆனாலும் சம்பந்தப்பட்ட தரப்புகளின் உறுதிப்பாட்டால் போர் நிறுத்த உடன்பாடு இறுக்கமடைந்தது. எனினும், இந்த நிலைமையில் மாற்றமேற்பட்டு பனிக்கட்டி விளிம்புகள் உருகுவது போன்று பிரச்சினையும் கடினமானதொரு நிலைக்குச் சென்று கொண்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது.

இதனால் தான் போர் நிறுத்த உடன்பாடு தொடர்பில் இரு தரப்பினதும் உறுதிப்பாடு தொடர வேண்டிய தேவையுள்ளதாகவும் கூறினார். இதேநேரம், இலங்கைப் பிரச்சினையில் நோர்வேயின் அனுசரணை தேவையற்றதெனக் கருதும் நிலை தோன்றுகின்றதா எனக் கேட்டபோது அண்மையில் கூட, எமது உதவியின் அவசியத்தை சம்பந்தப்பட்ட தரப்புகள் தெளிவுபடுத்தியதாகவும் கூறினார். தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு சகல அரசியல் சக்திகளும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்கினால் இலங்கையில் நிலைமைகள் நன்கு மேம்படும். எனினும், அந்த நிலைமையை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

# சோதனை என்ற பெயரில் போராளிகளை சீண்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்

### - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(08.08.04)

அம்பாறை மாவட்டத்தில் நிராயுதபாணிகளாகப் பயணம் செய்யும் விடுதலைப்புலி போராளிகளை வீதிச் சோதனையென்ற போர்வையில் சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளாக்கி வரும் சிறீலங்கா விசேட அதிரடிப்படை மற்றும் பொலிசாரின் நடவடிக்கை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் பெரும் விசனமும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளென உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் படையினர் இத்தகைய சோதனைக் கெடுபிடிகளை மேற்கொள்வதாகவும், ஆண்களான மேற்படி விசேட அதிரடிப் படை மற்றும் பொலிசார், இத்தகைய சோதனை நடவடிக்கைகளின்போது, தமது பெண் போராளிகளிடம் உடல் சோதனைக்கு முயன்றுள்ளதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்றில், பொதுமக்களுடன் சேர்ந்து வந்த தமது போராளிகளை விசேட அதிரடிப் படையினரும் பொலிசாரும் இவ்வாறு சோதனைக் கெடுபிடிக்குள்ளாக்கியுள்ளனர்.

அதேபோல், கடந்த திங்கட்கிழமையும் தமது ஆண், பெண் போராளிகளை இவ்வாறு சோதனைக்குள்ளாக்கி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும், அடுத்தடுத்து இத்தகைய கெடுபிடிகளை விசேட அதிரடிப் படையினரும் பொலிசாரும் மேற்கொண்டு வருவது ஏதோ ஒரு வகையில் எம்மைப் படையினர் சீண்டும் செயலெனக் கருத வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய கெடுபிடிகளை படையினர் நிறுத்த வேண்டும். கண்காணிப்புக் குழு முன்னிலையிலேயே எமது போராளிகள் சோதனைக்குள்ளாக்கப்பட வேண்டும். இனிமேல் போராளிகள் இத்தகைய சோதனைகளுக்கு இசைந்து கொடுக்கமாட்டார்களென்றும், சீண்டுதல் தொடர்ந்தால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலையேற்படுமெனவும் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை செல்லும் தமது பிரஜைகளுக்கு பிரித்தானிய அரசு பாதுகாப்பு எச்சரிக்கை

(08.08.04)

இலங்கையில் குறிப்பாக, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அத்தியாவசியதேவைகள் இருந்தால் மட்டுமே பயணம் செய்யுமாறு பிரித்தானிய அரசு தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக பிரித்தானிய வெளிநாட்டமைச்சு கடந்த வாரம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கைக்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு பயணம் செய்வோர் அத்தியாவசிய தேவை இருந்தால் மட்டுமே பயணத்தை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறோம்.

வடக்கு, கிழக்கின் திருகோணமலை, நிலாவெளி மற்றும் அறுகங்குடா தவிர்ந்த ஏனைய இடங்களில் பெருமளவில் நிலக்கண்ணிவெடிகள் காணப்படுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கான ஏ-9 வீதியை சூழ அதிகளவில் கண்ணிவெடிகள் காணப்படுகின்றன. எனவே, இலங்கைக்கு பயணம் செய்யும் அனைவரும் தாம் பயணம் செய்ய முன்னர் கட்டாயமாக பயண மற்றும் மருத்துவ காப்புறுதிகளை பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறீலங்கா படையினருக்கு...

சிறீலங்காப் படையினர் ஆட்லறி எறிகணைகள், மோட்டார் குண்டுகள், ரி.56 ரகத் துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பல்வேறு ஆயுதங்களை மிக இலகுவாக மீள் கொடுப்பனவு அடிப்படையில் பெற்று வந்தனர். எனினும், சீன அரசு நிறுவனமான நொறிங்கோ பிரதான யுத்த டாங்கிகள், துருப்பு காவி கவச வாகனங்கள், 155 மில்லி மீற்றர், 152 மில்லி மீற்றர் ரக ஹொவிற்சர் ரக ஆட்லறிகள், பல குழல் ரொக்கற் லோஞ்சர்கள், டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், பல்வேறு வகையான சிறியரக ஆயுதங்களும் அவற்றுக்கான ரவைகளையும் சர்வதேச தரத்தில் தயாரித்து வருகின்றதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, நொறிங்கோவுடனான ஒப்பந்தத்தை புதுப்பித்ததன் மூலம் சிறீலங்கா அரசு பாரிய ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## மினி சுற்றுலா

Paris - Lourdes
Lourdes - Andora
Andora - Paris



Aller 09.07.2004 06.08.2004 20.08.2004 — Retour 12.07.2004 09.08.2004 23.08.2004

பயணச்சீட்டு, தங்குமிட கட்டணம், சனி காலை, மதியம், இரவு, ஞாயிறு காலை உணவு அனைத்துடனும்

பெரியவர்கள் 150 ஈரோ — சிறியவர்கள் 110 ஈரோ

அன்புடையீர் வணக்கம்!

சிறிய விடுமுறையில் லூர்து அன்னையின் தரிசனம் பெற்று அந்தோரா மலை பிரதேச காட்சிகளை பார்த்து மகிழவும்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட திகதிகளில் பேருந்து பாரிசிலிருந்து வெள்ளி இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு சனி காலை லூர்து வந்தடைந்து தரிசனத்தை முடித்துக்கொண்டு, ஞாயிறு காலை அந்தோரா புறப்பட்டு மதியம் சென்றடையும். அந்தோராவிலிருந்து மாலை புறப்பட்டு திங்கள் காலை பாரிசை வந்தடையும்.

sumangali textail la chapelle — மேலதிக விபரங்களுக்கு : — theepam textail la chapelle

06 60 92 12 69 - 06 63 31 49 32

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

**RESTAURANT ROYAL TANDOURI**

*Métro: Bellville*

தொடர்புகளுக்கு: 01 43 14 67 49 - 06 64 00 66 62 - 06 10 59 37 44

## வீடு வாடகைக்கு

Corbeil Essonnes ல் RER-D க்கு மிக அருகாமையில் அமைந்துள்ள Moulin Galant Station க்கு அருகே 45 சதுர மீட்டரைக் கொண்ட FI / Kitchen / Bathroom / Balcony Cave gas வசதியைக் கொண்ட Appartment க்கு குடியிருக்க தேவை ஒரு நபர்.

வாடகை 300 ஈரோ

Transport வசதி RER D, RER C

தொலைபேசி: 01 49 60 85 26 / 08 71 76 85 26
01 64 96 68 82 / 06 26 56 13 95

25

## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்

* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா உணவகங்கள்

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையின்
அனுசரனையுடன், ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம்
(பிரான்ஸ்) தனது 10வது, ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும்

**லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா)**

ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்திற்கான, சர்வதேச அளவிலான

**உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி**

**காலம்: 29-08-2004 நேரம்: காலை 09:00 மணி**

**முக்கிய குறிப்பு:** இச்சுற்றுப் போட்டியை சிறந்த முறையில் நடாத்துவதற்கு விளம்பரம் தந்துதவ விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

01 43 58 11 42 – 06 17 80 18 26

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr

w w w . p o o b a l a m . c o m

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- S C I ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்



முழு அளவிலான இலவச
ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# சிறீலங்கா படையினருக்கு பாரிய ஆயுதக் கொள்வனவு சீனாவின் `நொறிங்கோ'வுடன் மீண்டும் ஒப்பந்தம் புதுப்பிப்பு

(08.08.04)

சிறீலங்காப் படையினருக்கான ஆயுதக் கொள்வனவிற்காக, சீனாவின் `நொறிங்கோ' நிறுவனத்துடன் சிறீலங்கா அரசு தனது ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளது. இலங்கையில் போர் நிறுத்த உடன்பாடு அமுலிலுள்ள அதேநேரம், சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் சிறீலங்கா அரசு ஆயுதக் கொள்வனவில் அக்கறை காட்டி வருகின்றது. சிறீலங்காவிற்கு மிக நீண்ட காலமாக, `நொறிங்கோ' என்ற சீன ஆயுத உற்பத்தி நிறுவனம் பாரிய போர்த் தளபாடங்களை வழங்கி வந்தது. எனினும் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் காலாவதியானது. இந்த நிலையிலேயே சிறீலங்காப் படையினருக்கு மீண்டும் பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக, கடந்த வாரம் சீனா சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தத்தை புதுப்பித்து அதில் கைச்சாத்திட்டுள்ளார்.

கடந்த வருடம் இந்த ஒப்பந்தம் காலாவதியான போது அப்போதைய ஆட்சியாளர்கள் இதனைப் புதுப்பிக்கவில்லையென பாதுகாப்பு அமைச்சக அதிகாரியொருவர் தெரிவித்தார்.


இந்த உடன்பாட்டின் கீழேயே,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## அரசுடன் ஜாதிக ஹெல உறுமய நிபந்தனையுடன் புரிந்துணர்வு உடன்பாடு

(09.08.04)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் நிபந்தனையுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கு சிங்கள இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் உயர்



சங்க பீடம் கூடி முடிவெடுத்துள்ளது. அதன் ஊடகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உடுவே தம்மாலோக தேரர் இதனைத் தெரிவித்துள்ளார். ஆனால், இது தொடர்பாக அரச தரப்பினருடன் இதுவரை எதுவிதமான உத்தியோக பூர்வ பேச்சுகளும் இடம்பெறவில்லை.

இதேவேளை, அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்னவென்பது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்குமாறு அரசாங்கத் தரப்பினருக்கு அறிவித்துள்ளோம். இதுவரை அது கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் ஆராய்ந்து நிபந்தனையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜாதிக ஹெல உறுமய இந்த அரசாங்கத்துடன் மேற்கொள்ளும் என்றும் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பணத்தை இன்னொரு தேர்தலுக்காக கோடிக் கணக்கில் வாரி இறைப்பதை தடுத்து நிறுத்தி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் நோக்குடன் அரசாங்கத்துடன் நிபந்தனையுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான அதுருலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான அனைத்து விடயங்களும் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஹெல உறுமயவுடன் ஒத்துப் போவதாகவும், அரசைக் கவிழ்ப்பதையும் வீண் விரயத்தையும் தடுத்து, நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்காகவே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அத்துருலியே ரத்ன தேரதர் தெரிவித்துள்ளார்.

## சித்தாண்டியில் இளைஞனைத் தேடியவர்கள் தாயைச் சுட்டுக்கொன்றனர்!

சித்தாண்டி முருகன் கோயில் வீதியில் கடந்த 6ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வீடொன்றுக்குள் நுழைந்த துப்பாக்கி நபர்கள் பெண்ணொருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். வெள்ளிக்கிழமை இரவு 11.40 மணியளவில் முருகன் கோயிலடி வீதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்ற மூவர், அங்கிருந்த இளைஞனொருவரின் பெயரைக் கூறி அழைத்துள்ளனர். எனினும், அந்த இளைஞன் வீட்டின் பின்புறக் கதவால் தப்பிச் சென்றுவிடவே, வீட்டு முன்கதவைத் தட்டிய அவர்கள், கதவு திறக்காததால் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே செல்ல முற்பட்ட போது அந்த இளைஞனின் தாயும், சகோதரியும் கதவை திறக்க விடாது தள்ளிப் பிடித்துள்ளனர்.

இவ்வேளையில் துப்பாக்கி நபர்கள் கதவின் மீது சரமாரியாகச் சுட்ட போது, இளைஞனின் தாயான வெள்ளையன் சித்திரம் (52) என்ற பெண் உயிரிழந்தார். இவரது தலையிலும், மார்பிலும் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துள்ளன. துப்பாக்கி நபர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

## போர் வெடிக்கும் அபாயமுள்ளது !

### மங்கள மறுத்ததை ஹெல்கீசன் நியாயப்படுத்தினார்

(09.08.04)

போர் நிறுத்த உடன்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலானது நாட்டில் மீண்டுமொரு போரைத் தோற்றுவித்து விடலாமெனத் தான் கூறியது, பெரிதுபடுத்தப்பட்டதொரு விடயமெனக் கூறப்படுவதை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் நிராகரித்துள்ளார். புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க நோர்வே அனுசரணையாளர்கள் நான்காவது தடவையும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையிலும், கிழக்கிலும் தென் பகுதியிலும் இடம்பெற்று வரும் கொலைகள் போர் நிறுத்த உடன்பாட்டை முறித்து நாட்டில் மீண்டுமொரு போர் வெடித்து விடும் அபாய நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும், தனது கடைசி விஜயத்தின் போது செய்தியாளர்கள் மத்தியில் ஹெல்கீசன் கூறியிருந்தார்.

எனினும், அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர, ஹெல்கீசனின் இந்தக் கூற்றை நிராகரித்ததுடன் இது பெரிதுபடுத்தப்பட்டதொரு கூற்றெனவும் கூறியதுடன், அரசோ, புலிகளோ யுத்தத்திற்குச் செல்லும் சாத்தியமில்லை எனக் கூறியிருந்தார். இது பற்றிக் கூறுகையிலேயே, தான் கூறியதை நியாயப்படுத்தியுள்ள ஹெல்கீசன், அண்மைக்கால கொலைகளும் குண்டு வெடிப்புகளும் அங்கு நிச்சயமற்றதொரு நிலையையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

அங்கு சில சக்திகள் நெருப்புடன் விளையாடுவதாகவும் இதுவே போர் நிறுத்த உடன்பாட்டிற்கு உண்மையான ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறிய அவர், எனினும் அந்தச் சக்திகள் எவையெனக் கூற மறுத்து விட்டார். கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நேரடிப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

**PHONE 2000**

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

SFR

Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PHONE 2000 | PHONE 2000 | PHONE 2000 | PHONE 2000 | PHONE 2000 | PHONE 2000 |
| 2, Rue Perdonnet, | 85, Rue des Pyrénées, | 19, Rue du Labat, | Informatique | 4, Rue de Cail, | 5, Bld. davout, |
| 75018 Paris. | 75020 Paris. | 75018 Paris. | 87, Rue des Pyrénées, | 75010 Paris. | 75020 Paris. |
| ☎: 01 40 05 03 43 | ☎: 01 40 09 13 15 | ☎: 01 42 58 55 40 | 75020 Paris. | ☎: 01 40 05 93 28 | ☎: 01 43 71 40 30 |
| Fax: 01 40 05 03 53 | Fax: 01 40 09 01 31 | Fax: 01 42 58 55 46 | M°: Maraîchers | Fax: 01 40 05 97 03 | Fax: 01 40 09 01 31 |
| M°: La Chapelle | M°: Maraîchers | M°: Marcadet Poissonniers | Tél: 06 20 21 11 11 | M°: La Chapelle *ou* Gare du Nord | Mobile: 06 17 17 28 17<br>M°: Porte de Vincennes |

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11